# உதயன்

கூ.வெ. 32°C
கு.வெ. 23°C
தெளிவான காலநிலை

சுடர் 30 | கதிர் 137 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 29, ஞாயிற்றுக்கிழமை 12.04.2015


# 85 வீத கிணறுகளில் ஒயில் மாசு இல்லை

வடிகாலமைப்புச் சபை அறிக்கை கூறுகிறது என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஏப். 12
சுன்னாகம் பிரதேசத்துக் கிணறுகளில் 85 சதவீதமானவற்றில் கழிவு ஒயில் மாசு இல்லை என்று, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாக, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
அத்துடன் அவர்களினால் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.
பக்.21

## இலங்கைத் தீவில் அமைதிக்கு வாய்ப்பு

*அமெரிக்காவின் புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 12
கடந்த சில மாதங்களில், இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான சாதகமான மாற்றங்கள், இலங்கைத் தீவில் நல்லிணக்கம் மற்றும் அமைதிக்காக ஒன்றுபடும் புதிய வாய்ப்புகளை வழங்கியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
சிங்கள தமிழ்ப்புத்தாண்டையொட்டி, இலங்கையில்
பக்.21

## நீக்கப்பட்டார் பந்துல

கொழும்பு, ஏப். 12
முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பந்துல குணவர்த்தன, சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்தத் தக வலை பந்துல குணவர்த்தனவும் உறுதிப்படுத்தியுள்ளார்.
பக்.21

## எதிர்க்கட்சித் தலைவர் குறித்து உடன் முடிவெடுக்க முடியாது

கொழும்பு, ஏப். 12
நாடாளுமன்றத்தில் குழப்பகரமான நிலைமை ஏற்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு எவ்வளவு காலம் செல்லும் என கூறமுடியாதென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
புது வருடத்தின் பின்னர் முன்னணியின் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடல் நடத்தி எதிர்க்கட்சித்
பக்.21

# காணிகள் துண்டு துண்டாக விடுவிப்பு

**பெரும்பாலான குடியிருப்புகள் படையினர் வசம்**
**ஆர்வத்துடன் சென்ற மக்களுக்குப் பெரும் ஏமாற்றம்**

யாழ்ப்பாணம், ஏப்ரல். 12
வலி.வடக்கு – வலி.கிழக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் 590 ஏக்கர் நிலப்பரப்பு நேற்று விடுவிக்கப்பட்டது.விடுவிக்கப்பட்ட 8 கிராம சேவையாளர் பிரிவுகளிலும், ஒவ்வொரு சிறு நிலப்பரப்பு மாத்திரமே விடுவிக்கப்பட்டதால், காணிகளைப் பார்வையிட ஆர்வத்துடன் வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். 50 குடும்பங்கள் வரையே நேற்றையதினம் பதிவுகளை மேற்கொண்டுள் ளனர்.
வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறை தெற்கு (ஜே/235)
பக்.21



## வீட்டை படையினர் இடித்து அழித்தனர்

*செய்தி கேட்டதும் மயங்கி விழுந்தார் வீட்டுக்காரர்*



யாழ்ப்பாணம், ஏப். 12
எங்கள் வீட்டை இராணுவத்தினர் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டனர் என்று, காலையில் வந்து இந்தப் பகுதியைப் பார்த்தவர்கள் எனது கணவருக்குத் தொலைபேசியூடாகத் தெரிவித்தனர். இதனையடுத்து
பக்.21

## ஓகஸ்டிலேயே பொதுத் தேர்தல்

சபை கலைப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப் 12
அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றியப் பின்னர், மே 5 ஆம் திகதியளவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஜூனில் பொதுத்தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப் பட்ட நிலையில்,நாடாளுமன்றம்கலைப்பு ஜூன் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு ஜூனில் சபை கலைக்கப்பட்டு ஓகஸ்டில்
பக்.21

## கடலில் மூழ்கி மீனவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 12
இழுவை வலை பயன்படுத்திக் கடற்கரையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் இயலாமையினால் மயங்கி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.
பூநகரி பள்ளிக்குடாவில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்.குருநகரைச் சேர்ந்த அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை (வயது 68) என்பவரே உயிரிழந்தார்.
பக்.21

## போராளிகளின் தியாகமே எம் சுகவாழ்வுக்கு காரணம்

*உதவுவது எங்கள் கடமை ஜெயராஜ் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், ஏப். 12
நாங்கள், வெளிநாடுகளில் உள்ள எமது மக்கள் சந்தோசமாக சுகமாக வாழ்வதற்கு, முன்னாள் போராளிகளின் தியாகம், அதற்காக அவர்கள் பட்ட கஷ்டம் தான் காரணம். அதனை மறுக்க முடியாது. எனவே அவர்களுக்கு
பக்.21

## 20 வீதமே மக்கள் குடியிருப்பு

வறுத்தலை விளானில் 100 குடும்பங்கள் மீளக்குடியமர முடியாமல் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 12
விடுவிக்கப்பட்ட காணிகளில் 20 சதவீதத்திற்கு குறைவான நிலப்பரப்பே மக்கள் குடியிருப்புக்கள்.
மேலும் விடுவிக்கப்பட்ட வறுத்தலை விளானில் 46 ஏக்கரில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர். இதன் காரணமாக
பக்.21

## காணிகள் எங்கே?

யாழ்ப்பாணம், ஏப். 12
25 வருடங்கள் மக்கள் நடமாட்டமே இல்லாதிருந்த காணிகளில் செழித்து வளர்ந்திருந்த பற்றைகளால், காணிகளையும் – வீடுகளையும் இனங்காண்பதில் மக்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கினர்.
அத்துடன், காணிகளுக்குச் செல்லும் வீதிகளை மூடி இராணுவத்தினர் வேலிகள் அமைத்திருந்தமையால் மக்கள் தமது காணிகளுக்குச் செல்ல
பக்.21





S D B L
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால், விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
Fitch Rating BB+ (stable), RAM Rating BBB & P3, Reg. No: PB62PQ

## பிரான்ஸுக்கு செல்ல முயன்ற ஒருவர் கைது

போலியான ஜேர்மன் கடவுச்சீட்டைப் பயன்படுத்திசிங்கப்பூரிலிருந்து பிரான்ஸுக்குச் செல்வதற்கு முயற்சித்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்ட நிலையில் அவரைக் கைது செய்துள்ளதாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர் வவுனியாவைச் சேர்ந்த 31 வயதானவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அவர், இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்.308 என்ற விமானத்தின் ஊடாக கடந்த 8 ஆம் திகதி, சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார். அதற்காக்ச் செல்லுபியான கடவுச்சீட்டை பயன்படுத்தியுள்ளார் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சிங்கப்பூரில் வைத்து முகவரிடமிருந்து போலியான கடவுச்சீட்டைப் பெற்று, அங்கிருந்து பிரான்ஸுக்குச் செல்வதற்காக முகவருக்கு 10 இலட்சம் ரூபா கொடுத்து போலியான ஆவணங்களை பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## தேர்தல் திருத்தச் சட்டம் இப்போதைக்கு இல்லை

**பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவிப்பு**

நாடாளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம் இப்போதைக்கு கொண்டு வரப்படமாட்டாது என வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

வெளிவிகார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைவேற்று அதிகாரங்கள் குறைந்த ஜனாதிபதி முறைமை எஞ்சி இருக்கும்.

19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படும் பட்சத்தில் தற்போதுள்ள முறைமையிலேயே தேர்தல் நடைபெறும். தேர்தல் முறைமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருடன் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இந்த 19ஆவது திருத்தச் சட்ட நடைமுறையின் பின்னர் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய தேர்தல் முறைமையொன்று அமைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும். தற்போதைக்கு தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படமாட்டாது – என்றார். (த)

# சிங்கள ராவயவுக்கு பயப்படமாட்டேன்

**மனோ கணேசன் சவால்**

கொழும்பு, ஏப். 12

தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதியளித்த தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக சிங்கள ராவய அமைப்பு தெரிவித்துள்ளது. இதை தான் முழுமனதுடன் வரவேற்பதாக ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஒரு ஊடகவியலாளர் மாநாட்டில் சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் சீலரதன தேரர், தேசிய கீதத்தைத் தமிழில் பாட அனுமதியளித்தமைக்காக தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களைக் கண்டித்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர போவதாக அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பைக் கண்டு நான் பயந்துவிடவோ அல்லது கவலைப்படவோ போவது இல்லை. உண்மையில் சிங்கள ராவய தேரர்களின் இந்த அறிவிப்பை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

இதன்மூலம் நம் நாட்டில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பேசி வாழ்வோரது அந்தஸ்து என்ன என்பதைப் பற்றி உலகம் அறிந்துக்கொள்ள முடியும். உண்மையை வெளியே கொண்டு வர முயலும் சிங்கள ராவய அமைப்புக்கு இதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளவே விரும்புகிறேன்.

உண்மையில் இந்த நாட்டில் தேசிய மொழிகள் எவை என்பது பற்றி இவர்களுக்குத் தெளிவில்லை. உலகத்தில் பல நாடுகளில் தேசிய கீதம் பாடப்படும் முறைகள் பற்றியும் இவர்களுக்குத் தெரியவில்லை. இதையிட்டுதான் நான் வருத்தமடைகிறேன்.

சிங்கள ராவய மற்றும் பொதுபல சேனா ஆகிய பிக்குகளின் தலைமையிலான அமைப்புகளுக்கு இடையில் யார் சிங்கள பௌத்தர்களின் தலைவர்கள் என்று பலத்த போட்டி நிலவுவது எனக்கு தெரியும். இதனால்தான் இவர்கள் இத்தகைய அரசியல் கருத்துகளை வெளியிடுகிறார்கள்.

இவர்களுக்குப் போட்டியாக நாளை பொதுபல சேனா அமைப்பு என்னையும், தேசிய நிறைவேற்றுச் சபையில் எனது நிலைப்பாட்டுக்கு இவ்விவகாரத்தில் ஆதரவாக இருக்கின்ற ஏனைய உறுப்பினர்களையும் நாடு கடத்த வேண்டும் என்றும் சொல்லலாம் – என்றார். (த)

# தமிழில் தேசிய கீதம் அரசமைப்புக்கு முரண்

**சிங்கள ராவய சீற்றம்**

கொழும்பு, ஏப் 12

தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தைப் பாடுவதற்கு அனுமதியளித்துள்ளமை அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. இந்த அனுமதியை வழங்கிய தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளோம் என சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் வெவ்வர சீலரதன தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெஹிவளை பௌத்த மத்திய நிலையத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையின் தேசிய கீதம் சிங்கள மொழியிலே பாடப்படவேண்டும். தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தைப் பாடுவதற்கு அனுமதியளித்துள்ளமை அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. இந்தியாவில் பல மொழிகள் பேசும் மக்கள் இருந்தாலும் அங்கு ஒரு மொழியிலே தேசிய கீதம் பாடப்படுகின்றது. தமிழ் நாட்டில் 6 கோடி மக்கள் இருந்தும் அங்கு தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவதற்கு உரிமை கோரப்படவில்லை.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின் படி தேசிய கீதம் சிங்கள மொழியிலே பாடப்பட வேண்டும். தேசிய கீதம் சிங்கள மொழியிலே பாடப்படவேண்டும் என்பதை சபாநாயகரைச் சந்தித்து விளக்கமளித்துள்ளோம்.

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டால் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் மீது குரோதம் ஏற்பட காரணமாக அமையும். இதன் மூலம் இனங்களுக்கிடையிலான உறவு பாதிக்கப்படும். எனவே சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் பாடப்படவேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம்– என்றார். (த–10)

# இடதுசாரி முன்னணியினர் சந்திரிகாவுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்.குடாநாட்டில் மக்கள் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு உடன் தீர்வை பெற்றுத் தருமாறு கோரி இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த பிரமுகர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. குடாநாட்டின் மீள்குடியமர்வைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். அத்துடன் நிலத்தடி நீர் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதோடு அதில் அரசும் அதிக கவனம் செலுத்தவேண்டும். வடக்கில் பனை வளம் கடந்த காலப் போரினால் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளது. எனவே பனை வளத்தை மீள அபிவிருத்தி செய்வதற்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று அவர்கள் முன்னாள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பில் கலாநிதி சி. மோகன், மறவன்புலவு சச்சிநந்தபிள்ளை, பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த–17)

# நாங்கள் இல்லாவிட்டால் மைத்திரிக்கு தோல்விதான்

**மார் தட்டுகிறார் பொன்சேகா**

கொழும்பு, ஏப் 12

தன் கட்சியின் வாக்குகள் கிடைத்திருக்காவிட்டால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 லட்ச வாக்குகளால் தோல்வியடைந்திருப்பார் என ஜனநாயக கட்சித் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களிடையே இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியிருக்காவிட்டால் 4 இலட்ச வாக்குகளில் வெற்றியடை வதற்குப் பதிலாக 10இலட்ச வாக்குகளால் ஜனாதிபதி தோல்வியடைந்திருப்பார்.

மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய மூன்று தடவைகளும் தோல்வியடைந்திருப்பார். எனினும் 2005ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள், வடக்கு மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை வழங்காமல் புறக்கணித்தமையால் மகிந்த தேர்தலில் வெற்றியடைந்தார்.

2010ஆம் ஆண்டு எனது வெற்றியைப் பறித்துவிட்டார். 2015ஆம் ஆண்டும் தோல்வியடைந்து விட்டார். அப்படி பார்க்கும்போது மூன்று தடவைகளும் மகிந்த தோல்வியடைந்துள்ளார் –என்றார். (த)

# புதுவருட காலத்தில் விசேட பாதுகாப்பு

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 11ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் தலை நகர் கொழும்பு மற்றும் ஏனைய பிரதான நகரங்களின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாகவும் விசேட போக்குவரத்துத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு நகர் பகுதியில் மட்டும் 500 பொலிஸார் மேலதிக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 200 பேர் வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு விசேட கடமைக்காக அழைக்கப்பட்டவர்கள் எனவும், சிவில் உடையில் மேலும் பலரைக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

புத்தாண்டு காலப்பகுதியாக ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நாம் அடையாளப் படுத்தியுள்ள நிலையில் இந்தக் காலப் பகுதியில் விசேட பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகளை நாம் செய்துள்ளோம்.

குறிப்பாகப் போக்குவரத்து தொடர்பில் மேல் மாகாணம் பல சிக்கல்களை எதிர்கொள்ளத்தக்கது. எனவே மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் வழிகாட்டலுக்கு அமைவாகப் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல்கள் அந்த மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதற்காகவும், நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நகரப் பகுதியில் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரிகளை நாம் விசேடமாகக் கடமையில் ஈடுபடுத்துவதன் ஊடாகப் போக்குவரத்துச் சீர்திருத்தத்தை எதிர்பார்க்கின்றோம்.

இதனை விட இந்தக் காலப்பகுதியில் குடிபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கைதுசெய்ய விசேட திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

குறிப்பாக நகரப் பகுதிகளில் சன நெரிசல் இந்த நாள்களில் காணப்படும் நிலையில் பணப்பையை களவாடுதல், பயணப் பொதிகளைக் கொள்ளையடித்தல் போன்ற சிறு சிறு சம்பவங்கள் இடம்பெறுவதை தடுக்க ஒவ்வொரு நகரப் பகுதியிலும் சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் இவ்வாறான சன நெரிசல் மிக்க இடங்களுக்கு வரும் பொது மக்கள் தம்முடன் சிறுவர்களைக் கூட்டி வருவார்களாக இருந்தால் அது தொடர்பிலும் தமது உடைமைகள் தொடர்பிலும் விழிப்பாக இருக்குமாறு நாம் பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இந் நிலையில் இந்த பண்டிகைக் காலத்தில் விபத்துக்களைக் குறைக்கவும் குற்றங்களைக் கட்டுப்படுத்தவும் மிக அவதானமாக செயற்படுமாறு பொது மக்களை நாம் கோருகின்றோம் என்றார். (த)

# முற்றவெளியில் சூடான வியாபாரம்



யாழ்ப்பாணம், ஏப்.12
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடைபாதை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைக்கென முற்ற வெளிப் பகுதியில் திறந்த வெளி அரங்கு வளாகத்தில் மட்டுமே இம் முறை இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறந்த வெளி அரங்கு வளாகத்தில் மட்டுமே வியாபாரிகள் கொட்டகைகளை அமைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மாநகர சபையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தற்போது நடைபாதை வியாபாரிகள் கொட்டகைகள் அமைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.வியாபார நடவடிக்கைகள் நேற்றில் இருந்து களைகட்டிக் காணப்பட்டதோடு நகரில் சன நெரிசலும் அதிகரித்துக் காணப்பட்டது. (த–17)

# தமிழின ஆன்மாவை உலுக்கிய தமிழக உறவுகள் படுகொலை

## குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்கிறார் ரவிகரன்

யாழ்ப்பாணம், ஏப். 12
தமிழகத் தொப்புள்கொடி உறவுகள் 20 பேர் ஆந்திராவில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது தமிழின ஆன்மாவை ஆழமாகத் தாக்கியுள்ளது என்று வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

ரத்தத்தை உறைய வைக்கும் இந்தச் சம்பவத்தின் பின்னுள்ளவர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டனச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

ஆந்திராவில் 20 அப்பாவித் தமிழர்கள் சுட்டுக்கொலை என்கிற செய்தியைக் கேட்டபோது அதிர்ச்சியில் உறைந்துபோனோம். அதன் பின்னர் வெளிவந்த புகைப்படங்களும், முற்றிலும் பொருத்தமற்று முன் வைக்கப்படுகின்றநியாயப்படுத்தல்களும் தமிழர் மனங்களில் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட,மேற்கொள்ளப்பட்டு வருகிற இனப்படுகொலையின் அதிர்ச்சியில் இருந்து மீளாமல் இருக்கும் உலகத் தமிழர்கள், இந்தச் சம்பவத்தால் துவண்டு போயுள்ளனர். நியாயமே அற்று நடத்தப்பட்ட இந்தப் படுகொலையானது தமிழின ஆன்மாவில் அழிக்கமுடியாத வடுவை ஏற்படுத்தி நிற்கின்றது.

எப்போதும் அமைதியை நாடி நிற்கிற தமிழர்கள் மீது எதற்காக இவ்வாறு வன்முறைகள் இழைக்கப்படுகின்றன என்று வேதனையுற வைக்கிறது.

இந்த மனிதகுலப் படுகொலையின் பின் உள்ளோர் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப் படவேண்டும்.அது ஒன்றே நீதியின் இருப்பை வெளிக்காட்டி பிராந்தியத்தின் அமைதியை நீண்ட காலம் காக்கவல்லது .

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தோடும், தாங்கமுடியாத வேதனையில் தவித்துக்கொண்டிருக்கும் தமிழக தொப்புள் கொடி உறவுகளோடும் நாம் உணர்வால் இணைந்திருக்கிறோம் என்று தெரிவித்தார். (த)

# திருடிய ஆலயப் பொருள்களை கைவிட்டுச் சென்ற திருடர்கள்

ஆலயத்தில் உட்புகுந்த திருடர்கள் பெறுமதிமிக்க பொருள்களை எடுத்துக் கொணடு வெளியே வந்து அவற்றை ஆலயக் கிணற்றடியில் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மறவன்புலவு சால வயல் கரை வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை ஆலயத்துக்குச் சென்ற அடியார்கள் ஆலயப் பொருள்கள் கிணற்றடியில் இருப்பதைக் கண்டு ஆலயப் பரிபாலன சபையினருக்கு அறிவித்தனர். அங்கு விரைந்த சபையினர், ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பொருள்களை எடுத்துள்ளமையைக் கண்டனர்.

ஆலய மூலஸ்தானத்துக்குள் வைக்கப்பட்டிருந்த பித்தளைப் பொருள்களை திருடிக் கொண்டு வந்து கிணற்றடியில் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த–9)

# மரக்கறி விலை வீழ்ச்சி

குடா நாட்டில் சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் உட்பட சகல மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் பருவ மழையும் காலபோக நெற்செய்கையும் முடிவடைந்ததை அடுத்து வயல் நிலங்களிலும் மேட்டு நிலங்களிலும் மரக்கறி வகைகள் உற்பத்தி செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து 200 ரூபாவிலிருந்து 300 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வந்த கத்தரி, பயிற்றை, வெண்டி, தக்காளி, கோவா போன்ற மரக்கறி வகைகள் தற்பொழுது 30 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை விற்பனையாகின்றன.

இதேவேளை, சின்ன வெங்காயம் அறுவடையும் ஆரம்பிக்கப்பட்டதைய டுத்து ஒரு கிலோ 50 ரூபாவிலிருந்து 80 ரூபா வரை விற்பனையாகிறது. பச்சை மிளகாயும் 15 ரூபாவிலிருந்து 20 ரூபா வரை விற்பனையாகிறது. மரக்கறி வகைகளின் விலைகளின் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விவசா யிகள் உற்பத்திச் செலவும் கிடைக் காமல் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வியாபாரிகள் கூடுதலான நன்மை அடைந்து வருகிறார்கள். (த–115)

# சுயதொழில்கள் செய்வோருக்கும் நம்பிக்கை நிதி

## யாழ்ப்பாணத்தில் திட்டம் ஆரம்பம்

அச்சுவேலி, ஏப். 12
சுயதொழில்களில் ஈடுபட்டிருப்போரும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் இணைந்து கொள்ளலாம். யாழ். மாவட்டத்தில் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் மங்கள திஸநாயக்க, யாழ். பிராந்திய நிலையப் பொறுப்பதிகாரி கே.தமிழழகன், இலங்கைத் தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 52 தொழிலாளர்கள் உறுப்புரிமை வழங்கி இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கான உறுப்புரிமைக்குரிய உதவு தொகையை டி.எஸ்.ஐ. நிறுவனம் வழங்கியிருந்தது.

இதுவரை காலமும் அரச உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனைய துறைகளான வங்கி, கூட்டுறவு மற்றும் அதிகாரசபைகள், தனியார் துறையில் கடமை புரிவோருக்கு மட்டும் ஊழியர் நம்பிக்கை நிதிய உறுப்புரிமை வழங்கப்பட்டு வந்தது. இதில் சுயதொழில் முயற்சியாளர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டு வந்தது. இந்த வருடத்தில் இருந்து சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோரும் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

இதில் இணைந்து கொள்வது தொடர்பான மேலதிக விவரங்களை 70, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்துடனே அல்லது 0212220010 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ அறிந்து கொள்ளலாம் . (த–11)

# நகரில் நேற்றுமுன்தினமும் மூன்று கடைகளில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் உள்ள 3 கடைகள் நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடைகளின் கூரைகள் பிரிக்கப்பட்டே திருட்டு இடம்பெற்றுள்ளது. ஒரு கடையில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், மற்றொரு கடையில் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டுள்ளன. மற்றைய கடையில் எவ்வளவு திருடப்பட்டது என்பது தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரமும் அதே வீதியில் 3 கடைகள் உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டிருந்தன. அதற்கு முதல் வாரம் யாழ்.கஸ்தூரியார் வீதியில் கடைகள் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றிருந்தது. எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த–4)

# பொன்னாலை வீட்டுத் திட்டத்தை வசதியற்றவர்களுக்கு வழங்குங்கள்

## வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

வலிதென்மேற்கு, ஏப். 12
பொன்னாலைப் பகுதியில் போர் காரணமாக முற்றாக அழிவடைந்த நிலையிலிருக்கும் வீட்டுத் திட்டத்தை வீட்டு வசதியில்லாத மக்களின் நலன் கருதி 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி ஐங்கரன் வீடமைப்பு அமைச்சரைக் கோரியுள்ளார்.

இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரமேதாசவுக்கு தவிசாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வீடமைப்பு அமைச்சராகவிருந்த பிரேமதாசவினால் கடந்த 30 வருடங்களுக்கு முன்பு வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பொன்னாலைச் சந்தியில் அமைக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தில் 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக அப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்ததுடன் வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் தற்பொழுது பாதுகாப்பு வலயமாக இருந்த மக்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களுக்கே வழங்கப்பட்டு வரும் இந்த நிலையில் பொன்னாலைச் சந்தியில் அழிவடைந்த நிலையிலிருக்கும் வீட்டுத்திட்டத்தை 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் மீண்டும் நடைமுறைப் படுத்தி வீட்டு வசதியில்லாத மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்–என்றுள்ளது. (த–115)



வடமாகாண முஸ்லிம்களின் பிரஜைகள் குழுக் காரியாலயம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது. பிரதம அதிதியாக கலந்துகொண்ட மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை காரியாலயத்தைச் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். இதில் நிலையத்தின் பணிப்பாளர் நிஹ்மத்துல்லா, தலைவர் மௌலவி ஏ.எச்.எம்.முபாரக், செயலாளர் ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் மௌலவி ஹிதாயத்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர். (த–56)

## அதிவேகம் பறித்தது உயிரை

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மத்திய கோட்டைத் தாண்டி எதிரே சென்றுகொண்டிருந்தவருடன் மோதியதில் சாரதி படுகாய மடைந்து சிகிச்சை பயனளிக் காது உயிரிழந்தார்.

நெல்லியடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த இந்திரன் புஸ்பாகரன் (வயது –37) என்பவரே உயிரிழந்தார்.

அவர் பருத்தித்துறையில் இடம் பெற்ற சாவு வீட்டில் கலந்து கொண்டுவிட்டு மோட்டார் சைக் கிளில் கோப்பாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்துள்ளார். அதேநேரம் நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவருடன் மோதியே விபத்துஇடம்பெற்றது.

அவர் மந்திகை வைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுச் சிகிச்சை அளித்த போதும் அது பயனளிக்காது உயிரிழந்தார். வேகக்கட்டுப் பாட்டை இழந்து சென்ற புஸ் பாகரன் வீதியில் மத்திய கோட் டைத் தாண்டிச் சென்று மோதியுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. அண்ணா சிலையடி, கரணவாய் கர வெட்டியைச் சேர்ந்த தி.பிரதீப் (வயது 26) என்பவரே காய மடைந்தவராவார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் உறவி னர்களிடம் நேற்று ஒப்ப டைக்கப்பட்டது.

(த-4)

## நன்றி நவிலலும் 16ஆம் நாள் நினைவு கூரும் நிகழ்வின் அழைப்பும்



### திருமதி திலகவதி சிவராஜகுமரேசன்

29.03.2015 இல் எம்பெருமான் இறைவனடி சேர்ந்த எனது அன்பு மனைவியின் பிரிவால் துயருற்றிருந்த வேளை எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் நேரடியாகவும் தொலைதொடர்பு மூலமும் துயர் பகிர்ந்த அன்பு நெஞ்சங்களான உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் எமது நெஞ்சம் மறவா நன்றிகளுடன் அன்னார் மறைந்து 16ஆம் நாள் நாளை (13.04.2015) திங்கட்கிழமை நடைபெறும் நினைவு நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் வெளியிடப்படாததால் தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

217/2 (9/6) கடைச்சுவாமி
கோவில் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

து. சிவராஜகுமரேசன்

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

### சண்முகலிங்கம் ஸ்ராலின் (துரை)



ஜனனம் : 12.06.1955 மறைவு: 11.04.2015

யாழ். முத்திரைச் சந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது நெதர்லாந்து (கொலண்ட்)ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் ஸ்ராலின் நேற்று (11.04.2015) சனிக்கிழமை நெதர்லாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம்- யோகரத்தினம் தம்பதியரின் மூத்த மகனும், அமரர் வல்லிபுரம் கனகம்மா தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், மர்ஷா (மகள்), மித்திரன் (மகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நினைவு இரங்கல் நிகழ்வுகள் அவரது கைதடி கிழக்கு, கைதடி இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இல.
0779596729

தகவல் : சகோதரர் சகோதரிகள்,
அமரர். சண்முகலிங்கம், குடும்பத்தினர்.
அமரர் யோகரத்தினம் குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

உபயோகிக்கப்பட்ட ஏசி, கொம்பிரசர், குளிரூட்டி (பிரிட்ஜ்), நெற்கபேக்கு உரிய தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 860 84 34

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் A1 exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.

இம்முறை பரீட்சையில் எம்மிடம் 12 மாணவர்கள் 65-87 வரை புள்ளிகள் பெற்றுள்ளார்கள்.

தொடர்புகளுக்கு:

Mrs. P.Kajenthini
T.P: 077 160 4823
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்



### சபாரத்தினம் ஜெயந்திரன்
### (இந்திரன் - மெக்கானிக்)

கோலாலம்பூர் மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வதிரி கரவெட்டியையும், 91, செட்டித்தெரு நல்லூரையும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயந்திரன் (இந்திரன்) நேற்று 11.04.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சாந்தினியின் அன்புக் கணவரும், ஜெனியின் (வளர்ப்பு மகன்) அன்புத்தந்தையும், தம்பர் சபாரத்தினம் (ஆனந்தமனை - வதிரி), ரோகினி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜெகதீசன் (ஆஸ்திரேலியா) மற்றும் ஜெயராணி - கார்த்திகேசு (மலேசியா), காலஞ்சென்றவர்களான, சர்வேசன் (அரசன் - வதிரி), வீரேசன் (மலேசியா) மற்றும் ஜெயதேவி - நவரத்தினம் (மலேசியா), ஜெயகுமாரி - ஜெயசிங்கம் (லண்டன்), கணேசன் (ஆஸ்திரேலியா), ஜெயசோதி - ஜெயகாந்தன் (ஆஸ்திரிரேலியா), ஜெயமணி - குமாரசிங்கம் (மலேசியா), காலஞ்சென்ற சுபாஸ் சந்திரன் (வதிரி), Dr. ரவீந்திரன் (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரோஜினி - தெய்வேந்திரன் (கனடா), கமலினி - சிவசூரியர் (கனடா), தேவதாசன் (ராஜன் - கனடா), விக்னேஸ்வரன் (கனடா), சற்குணேந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

91, செட்டடித்தெரு,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி கந்தையா



குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கந்தையா நேற்று (11.04.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் கந்தையாவின் (SMK) அன்பு மனைவியும், யோகேஸ்வரராஜாவின் அன்புத்தாயும், செல்வராணியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னுச்சாமியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்னை இல்லம்' குமரகோட்டம், கோண்டாவில்.

தகவல்: க.யோகேஸ்வரராஜா (மகன்)
T.P:021 491 9541

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
...ளாவில், கல்வயல் வீதியில் சொந்த வீட்டுடன் 2½ பரப்புக் காணியும் 4¾ பரப்புக் காணியும் 4½ பரப்பு காணியும் உடனடி விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 804 1764, 077 603 4626
(51949)(4.3.7)

### விற்பனைக்கு
சொனி T.V 21" மெகா. முதிரை கட்டில்கள், மேசைகள், அலுமாரி றாக்கைகள், பின்னல் செற்றி கதிரை, குசன் செற்றி, கிடாரம், வயலின், HP கலர் பிறின்டர், கொம்பியூட்டர்கள் என்பன விற்பனைக்குள்ளன.
(58777)(4.3.7) தொடர்பு: 071 096 2082

### வீடு, காணி விற்பனைக்கு
முதலாம் ஒழுங்கை, தேவாலய வீதி, வேப்பங்குளம், வவுனியா எனும் விலாசத்தில் 95/32B இலக்க வீடு, காணி 03 பரப்பு விஸ்தீரணம் உள்ளது. விற்பனைக்குண்டு.
(58765)(4.3.7)
தொடர்பு: 077 670 1854

### வீடு விற்பனைக்கு
இலக்கம் 139, கன்னாதிட்டி வீதி, Science hall இற்கு முன்பாக 3 பரப்பு 7 குழி 4 அறைகள் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 947 8872
(58764)(4.3.7)

### வீடு வளவு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில் 100 யார் தூரம் நல்லூர்ப் பக்கம் 2¼ பரப்பில் சகல வசதிகளும் கொண்ட ஐந்து அறைகள் உள்ள வீடு வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு: (சி/15378)(4.3.7)
...271 5130, 077 977 5017, 077 430 9270

### வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு
யாழ்.அரசடி வீதியில் அமைந்துள்ள (யா/இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக) 3 பரப்பு 1½ குழி காணி பெரிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
(58751)(4.3.7) தொடர்பு: 076 836 2379

### கொழும்புத்துறையில் வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 2 பரப்பு 11 ¼ குழியுடன் கூடிய சகலவசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434
(58408)(4.3.7)

### காணி விற்பனைக்கு
இராசபாதையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் கல்வியங்காட்டில் நிலப்பரப்பு 2குழி 14.174 உடனான காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 086 4155
(58423)(4.3.7)

### மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு
10 Sri -XXXX சட்டத்தரணி பாவித்த மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: யோகேந்திரக்குமார் (யோகர்)
சர்ரியன் லேன், நந்தாவில், கொக்குவில் கிழக்கு.
(58731)(4.3.7) 077 917 9906

### காணி விற்பனைக்கு
சங்கானை ஒடக்கரை வீதியில் சலேனியா சேர்ச் சிற்கப்பால் சிவன் கோயிலுக்கு முன்பாக கிணற்றுடன் 10 பரப்பு பள்ளக் காணி விற்பனைக்குண்டு.
(சி/15381)(4.3.7) தொடர்பு: 272 9855, 077 721 7132

### காணி விற்பனைக்கு
இணுவிலுக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் ஆஞ்சனேயர் கோயிலுக்கு அண்மையாக கே.கே.எஸ் வீதியில் இருந்து 2 ஆவது காணி 4 பரப்பு விற்பனைக்குண்டு.
(58264)(4.3.7) தொடர்பு: 077 722 2219

### காணி விற்பனைக்கு
கிளிநொச்சி நகருக்கு அண்மையில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
077 2041262

### வீடு, காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியில் கட்டப்பிராயில் 6 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(சி/15376)(4.3.7) தொடர்பு: நந்தகுமாரன் 077 602 8503

## தேவை

### பணியாளர்கள் தேவை
* சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்படவுள்ள பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

01. முகாமையாளர்
02. சிட்டை எழுதுநர்
03. காசாளர்

05 வருட அனுபவமுடையவர்களும் சாவகச்சேரியை அண்மித்தவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.
* சாவகச்சேரியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புபவர் தேவை.

தொடர்பு: 077 784 9207
இல.24, உருத்திராமாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு-06 (58760)(4.3.7)

### தேவை
முன்னணி நிறுவனமான சொக்லேட், கடதாசி, லஞ்சீற், ஜேம் லேபல், பொதி செய்தல் பிரிவுகளுக்கு ஆண்/பெண் தேவை.
(Age: 18-40)
சம்பளம் 25,000+.
தொடர்பு: H.M.P.S (Pvt) Ltd
புதிய கண்டி வீதி, பண்டாரவத்தை
(சி/15368)(4.3.7) 077 452 6164

### உழவு இயந்திரம் தேவை
ஏ9 வீதி, புளியங்குளத்தில் குளத்திற்கு மண் அடிப்பதற்கு 15.05.2015 முதல் 23.05.2015 வரை உழவு இயந்திரங்கள் பெட்டியுடன் தேவை. 14.05.2015 இற்குள் காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 077 5546, 077 317 0478
(58553)(4.3.7)

### தேவை
மில் பாவனைப் பொருள்களான மோட்டார்கள். (3 Phase) elivator மின்தூக்கு (150 kg-300kg வரை) மாவரைக்கும் இயந்திரங்கள் என்பன தேவை.
தொடர்பு: 077 991 2304 (58780)(4.3.7)

### வீட்டுப் பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வீட்டைப் பராமரித்து சமைக்கத் தெரிந்த 35 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை. தகுந்த சன்மானம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்.
(58784) (4.3.7) தொடர்பு: 076 660 6255

## கல்வி

### ஐரோப்பாவில் உயர் கல்வி
Schengen Visa.
(Lithuania, Latvia, Hungary, Sweden, Portugal, France, Italy, German ஆகிய நாடுகளுக்கான Student Visa)
No IELTS.
2015 May மாத
விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி April 20
இலகுவானதும், விரைவானதுமான சேவை
முற்பணமற்ற நம்பகமான சேவை.
UK விசா நிராகரிக்கப்பட்டவர்களுக்கு Ireland நாட்டுக்கு நேர்முகப்பரீட்சை இன்றி விண்ணப்பிக்கலாம்.
FLEX Graphic
COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY
No. 40, Galle Road, Wellawatte.
Tel: 0777-361230 / 011-7549600
Web: checonline.com E-mail: info.chec@gmail.com

### ஆங்கிலம் & கணக்கியல் கற்பித்துக் கொடுக்கப்படும்.
கொழும்பு சர்வதேச பாடசாலைகளில் கற்பித்த அனுபவமும் கணக்காளராகக் கடமையாற்றிய அனுபவமும் நிறைந்தவரால் மேற்கூறிய பாடங்கள் கற்பித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 758 8112 (57064)(4.3.7)

### வகுப்பு (கணிதம்)
O/L மீண்டும் பரீட்சை எழுதுபவர்களுக்கும் Gr. 5 முதல் Gr 11 வரையான மாணவர்களுக்கும் கணித பாடம் வீடு வந்து சிறந்த முறையில் பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படும். (தனி/குழு வகுப்புக்கள்)
(58730)(4.3.7) தொடர்பு: 077 937 0228

## வாடகைக்கு

### வீடு வாடகைக்குண்டு
யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் Church Lane இல் மூன்று (03) அறைகளுடன் (இணைந்த குளியல் அறைகளுடன்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 787 2907
(58470)(4.3.7)

### அறைவாடகைக்குண்டு
பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அறை வாடகைக்குண்டு. பெண்களுக்கு மட்டும்.
தொடர்பு: 075 854 2978
(58775)(4.3.7)

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரப்பகுதியிலிருந்து 3km இற்கு உட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 076 617 0441 (58785)(4.3.7)

### வீடு வாடகைக்குண்டு
சுன்னாகம் தெற்கில் சைவக் குடும்பத்துக்கு ரூபா 20,000 முற்பணத்துடன் மாதாந்த வாடகை ரூ 2,500 இற்கு வீடு ஒன்று ஒரு வருடத்துக்கு வாடகைக்கு உள்ளது.
தொடர்பு: 077 291 4661
(58444)(4.3.7)

### வாடகைக்கு
யாழிலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி
A/C புகையிரதம் தரித்து நிற்கும் வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இல.8, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனி அறைகள் நாள், கிழமை மாத வாடகைக்குண்டு.
(சி/15383)(4.3.7) தொடர்பு: 071 299 1256, 011 250 4281

### Room நாள் வாடகைக்கு
600/=, 800/=, 1200/=, 2500/=-3950/=, A/C,TV இணைந்த குளியலறையுடன்
Hotel Villa,
422, Galle Road, Wellawatte. (இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்)
072 255 2222
(சி/15008)(9.3)

### வீடு வாடகைக்கு
அரியாலை, கனகரட்ணம் வீதியில் நவீன வசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு. 5 Rooms, 2 Hall Varanda (அலுவலகமாகவோ, வதிவிடமாகவோ உபயோகிக்கலாம்)
(சி/15387)(4.3.7) தொடர்பு: 076 807 2642, 076 694 2414


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## மணமகள்கள் தேவை

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 34 உயரம் 5'9" பிரபல தனியார் வங்கியில் அதிகாரி தரத்தில் வேலை பார்க்கும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
Email:priatharsani@googlemail.com
தொடர்பு: 272 2473/077 200 3418 (சி/15377)(4.3.7)

### மணமகள் தேவை
யாழ்ப்பாணத்தில் பிறந்த கனடாவில் உயர் கல்வி முடித்து பணிபுரிகின்ற கனேடிய குடியுரிமை பெற்ற 1984 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு இலங்கையில் பிறந்த இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வதிகின்ற பொருத்தமான இந்து மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.
தொடர்பு: கனடா 1 647 656 7757
மின்னஞ்சல் முகவரி: wedks@yahoo.co.uk

## ஏனையவை



* பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (கூதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (குர்வினி)

### மணமகள் தேவை
யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 ஆம் ஆண்டு பூராடம் 4 ஆம் பாதம் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 077 369 3365
(58411)(4.3.7)

### Personal Classes
தரம் O/L, 9, 10 மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான வகுப்புக்கள் 10 வருட கடந்தகால வினாக்களுடனும், பூரண வினாவிடை விளக்கங்களுடனும் தனியாகவோ, குழுவாகவோ வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
ஆசிரியர்: K.AMIR T.P: 077 226 9895
(58781)(4.3.7)

### பதவிவெற்றிடம்
யாழ்.நகரில் இயங்கி வரும் மொத்த வியாபார நிலையத்துக்கு கீழ் காணும் பதவிக்கு பணியாளர்கள் தேவை. விரும்பியவர்கள் எதிர்வரும் 20.04.2015 இற்கு முன்பாக தங்களது சுய விவரக்கோவையை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விநியோக பையன்கள் (Delivery Boys)
தொடர்பு: மே/ள உதயன், விளம்பர இல. 5056
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (58788)(4.3.7)

### ஆசிரியர் தேவை
G.C.E A/L மாணவிக்கு Tamil, Logic. Hinducivilization ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
தொடர்பு: 077 798 3091
(58798)(4.3.7)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் எதிர்க்கட்சித் தலைவராவதை அமுக்கிவிடும் போக்கு வேண்டாமே

தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடம், அரசியல்வாதிகளிடம் அவர்களின் இரத்தத்தில் ஊறி உள்ள பேரினவாதம் எப்போதும் அழிந்து போகாது. மறந்தும் அவர்கள் அதனைக் கைவிட மாட்டார்கள்; பதிலுக்கு அதற்கு மேலும் உரம் ஊட்டுவார்கள் என்ற நிலையியல் தென்னிலங்கையில் ஓங்கி உயர்கிறது இப்போது.

தனிச் சிங்களச் சட்டம் என்ற வாளினால், எண்ணிக்கையில் குறைவான தமிழ்பேசும் மக்களின் சம உரிமையை அறுத்த, ஐம்பத் தொன்பது ஆண்டுகள் கழிந்தும், பேரினவாதம் நாளுக்கு நாள் உயர்ந்து வானத்தின் உச்சியை நோக்கி வளர்கிறது.

அதற்கான பல கூரிய கூறுகளில் ஒன்று, இப்போது மேல் எழுந்து பேயாட்டம் போடுகிறது. தமிழர் ஒருவர் நாடாளுமன்றில், எதிர்க்கட்சியின் தலைவராகப் பதவி வகிக்கக் கூடாது என்பதில், தமக்குள் உள்ள பேதங்களையும் அரசியல் பகைமைகளையும் மறந்து ஒன்று சேர்ந்து உழைக்க -- போராட -- முனைப்புடன் செயற்பட ஆரம்பித்துவிட்டது அந்தக் கூட்டம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இந்த நாடு விடுபடுவதற்கு, முன்னின்று உழைத்தவர்கள் தமிழ்த் தலைவர்கள் என்பதை வசதி கருதி மறந்துவிட்டார்கள். ஆனால், சரித்திரத்தை அழித்து எழுத முற்பட்டாலும், உண்மை எக்காலத் திலும் உறைந்து போகப் போவதில்லை.

இப்போதைய நாடாளுமன்றம் இன்னும் இரண்டொரு மாதங்களில் கலைந்து போய்விடும் - கலைக்கப்பட வேண்டும் என்ற களநிலை வெளிச்சமாகத் தெரிந்தும், நாடாளு மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழர் ஒருவர் பதவி வகிக்காது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்ற இனவாதம், ஓர்மத்துடன் கலையாடத் தொடங்கிவிட்டது சிங்களப் பேரினவாதம்.

இலங்கையின் நாடாளுமன்ற (ஆட்சி) வரலாற்றில் ஒரே தடவை மட்டும் - 1977 ஆம் ஆண்டில் - தமிழர் ஒருவர், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்கக் காலம் வழிவகுத்தது.

அதன்பின்னர், தமிழ் அரசியல்வாதிகளில் "புல்லுருவிகள்" பலரும் சிங்களப் பேரினவாதிகளுடன் சேர்ந்து அமைச்சர் பதவிகளில் - உல்லாசக் கதிரைகளில் அமர்ந்து சுயநல அரசியல் ஆடம்பரம் அனுபவித்த போதிலும், பெறுமதிமிக்க எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கிட்டவும் நெருங்க முடியாமற் போயிற்று....!

இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இன்னொரு தமிழர் கதிரையில் அமரக்கூடாது. அதற்கு அனுமதிக்கலாகாது என்ற இன வெறி ஓர்மத்துடன் ஐம்பத்தொன்பது ஆண்டுகள் -- அரை நூற்றாண்டுக்கும் அதிககாலமாக -- நினைத்ததை நடத்திய இனத்துவேசப் பெருச்சாளிகளுக்கு --

தமிழர் ஒருவர் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக சபையின் முற்கொம்பில் அமரக் கூடாது என்ற இனவாதம் மேலோங்கி நிற்கிறது. அது மிக வெளிச்சமாகத் தெரிகிறது.....!

1997 இல் நடைபெற்ற தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆட்சி அமைத்த, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்துக் கூடுதல் உறுப்பினர்களைக் (18) கொண்டதாக இரண்டாம் இடத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி வகித்திருந்தது.

பாவம், சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுந்திரக்கட்சிக்கு வெறும் எட்டு ஆசனங்கள் மட்டுமே கைக்கு வந்தன; கிடைத்தன.

அதனால், தமிழரசுக்கட்சி சார்பில் சிம்மக் குரலோன் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், இந்த நாட்டின் சரித்திரத்தில் நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவராக உயர்ந்தார்.


அத்தகைய ஒரு நிலை -- காட்சி -- மீண்டும் இலங்கை நாடாளுமன்றத்தில் உண்டாகக் கூடாது என்ற ஓர்மம் தென்னிலங்கையின் பேரினவாதிகளிடம் கனத்துப் பெருத்திருப்பது; ஜனநாயகத்தை வெட்டித் தறிப்பதற்கு ஒப்பாகும்!

நரித் தந்திரப் புத்தியோடு, ஜே.ஆரினால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையினால், தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பை இப்போதும் காலம் தமிழருக்கு அளித்துள்ளது.

அதனையும் தாண்டித் தமிழர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கும் சந்தர்ப்பத்தை வழங்காது அமுக்கிவிட, புதிய அரசு விரும்பினால், சதி செய்தால், ஜனநாயகம் குறித்து வாய் திறக்கவும் அதற்கு அருகதை இல்லை........!

# துணிவும் வலிமையும் மிக்க தலைவரே இன்றைய தேவை

## அப்படியான ஒருவரை எங்கே தேடுவது?



**வந்தியத்தேவர்**

**ஆளும் கட்சியாக சிங்கள மக்களின் நலன்களைப் பாதுகாப்பதும் எதிர்க்கட்சியாக மாறும் போது தமிழ் மக்களின் அற்ப சொற்ப நலனுக்கான தீர்மானங்களை எரியூட்டித் தமது தமிழர் எதிர்ப்புணர்வைச் சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்டுவதுமாகவே தென்பகுதி அரசியல் உள்ளது**

இலங்கைக்கு துணிவும், வலிமையும் மிக்க தலைவர் ஒருவர், பதவிக்கு வரவேண்டும் என அத்துரலிய ரத்ன தேரர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அண்மையில் தெரிவித்திருக்கின்றார். வலுவான தலைவரென அவர் எதனைக் கருத்தில் எடுத்துக் கூறியிருந்தாலும், ஒரு வலுவான உறுதியான தேசத்தை நேசிக்கும் மனப்பாங்கு கொண்ட ஒருவரே தலைமைப் பதவியில் அமர வேண்டும் என்ற அர்த்தத்தில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம் என்பதே உண்மையாகும்.

இனப்பிரச்சினை வன்முறைகள் பூதாகரமாக உருவெடுத்து எங்கே செல்கிறது என்று புரியாமல் அதல பாதாளத்தை நோக்கி உருண்டு கொண்டிருக்கிறது இலங்கை. ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து பிரதமராக வரவேண்டும் என்ற உறுதியுடன் எஸ்.டபிள்.யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தோற்றுவித்த சுதந்திரக் கட்சியும் சரி, ஐ.தே. கட்சியும் சரி இன்று வரை இனவாத முதலீட்டின் அடிப்படையில் ஆளும் கட்சிகளாகவும் எதிர்க்கட்சிகளாகவும் மாறி மாறி இலங்கையைச் சின்னா பின்னப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியாக சிங்கள மக்களின் நலன்களைப் பாதுகாப்பதும் எதிர்க்கட்சியாக மாறும் போது தமிழ் மக்களின் அற்ப சொற்ப நலனுக்கான தீர்மானங்களை எரியூட்டித் தமது தமிழர் எதிர்ப்புணர்வைச் சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்டுவதுமாகவே தென்பகுதி அரசியல் உள்ளது. இதற்கு தர்ம போதனையின் சக்கரமாக விளங்கும் பௌத்த மதத் துறவிகளும் கூட துணை நிற்பதும் உண்டு. அண்மையில் கூட நாட்டைப் பாழ் படுத்தியவர் என்று இப்போது பேசப்படும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவு வேண்டி ஐயாயிரம் பௌத்த பிக்குகள் ஊர்வலம் செல்லத் தயாராவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

பௌத்த பிக்குகளின் ஊர்வலச் செய்தியுடன் ஜாதிக ஹெல உறுமய தலைவர் அத்துரலிய ரத்தின தேரரின் வலுவான தலைவர் ஒருவர் பதவிக்கு வரவேண்டும் என்ற தகவலும் கிடைத்துள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் நாடும் மக்களும் அனுபவித்த இன்னல்களை மனதில் இருத்தி எதிர்காலத்திலாவது ஒரு நல்லாட்சி ஏற்பட வேண்டும் என்று சிந்தித்து அதற்காகச் செயற்பட்டவர் அத்துரலிய தேரர். கடந்த ஆட்சிக்கு எதிராக ஓர் அணியை உருவாக்கி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்கக் கூடியதாகவும் மஹிந்தவைத் தோற்கடிக்கக் கூடியதாகவும் சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்ட குழுவில் முக்கிய இடம் வகித்தவர் இந்தத் தேரர். தமிழ் மக்களும் உரிமை மிக்கவர்களாக இந்த நாட்டின் ஐக்கியத்துடன் இணைந்தவர்களாக மாறவேண்டும். அதற்கான மாறுதல் தென்பகுதியில் தேவை என்பதை வலியுறுத்தியவர்களில் முக்கியமான ஒருவராக விளங்கியவர்களுள் அவரும் ஒருவர்.

தமிழர்களின் ஆதரவுடன் அமைந்த மைத்திரி அரசு நல்லாட்சி என்ற குறிக்கோளை நடைமுறைப்படுத்துவதாக இல்லை. மீண்டும் பேயாட்சி ஏற்படக் கூடியதான சந்தர்ப்பத்தை வழங்கும் ஒன்றாகவே செயற்படுவதாக இப்போது பலதரப்பட்ட கருத்துக்கள் கிளம்பத் தொடங்கியுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசு என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரத மராகக் கொண்டு இயங்கி வருகின் றன. இரு கட்சியினரும் மந்திரி சபை யில் இடம் பெற்றிருந்தாலும் உள் ளூர இருசாராருக்குமிடையில் பனிப் போர் நடந்த வண்ணமேயுள்ளது. அடுத்துவரும் தேர்தலில் கூட தங்கள் கட்சியே பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுகிறார்கள். தமிழ் மக்கள் விடயத்தில் பிரதமர் ரணிலின் அணுகுமுறை முரண்பாடுகளையே கொண்டுள்ளது. தமிழ் மக்களால் தேர்ந் தெரிக்கப்பட்ட வடக்கு முதலமைச்சருக்கும் கூட உரிய மரியாதை வழங்க விரும்புவதில்லை. தேர்தலில் வெற்றி பெற சிங்கள மக்கள் மட்டுமே போதும் என்ற நிலையில் உள்ளார்.

ஆளாளுக்கு ஒவ்வொரு கருத்துக்களைக் கூறி தமிழ் மக்களைப் புறந்தள்ளி தேர்தலின் பின்னரும் ஒரு தேசிய அரசை அமைப்போம் என வேடிக்கை காட்டுகின்ற நிலையில் அத்துரலிய ரத்ன தேரர் வலுவான தலைவர் ஒருவர் பதவிக்கு வர வேண்டும் என்று கூறியுள்ளார். தென் பகுதியில் வலுவான ஒரு தலைவர் இனித்தான் பிறக்கவேண்டும். தற்போது அங்கு அனைத்து மக்களுக்குமான சுதந்திரமான உரிமைகளை வழங்குவதன் மூலம் ஒன்றுபட்ட நாட்டின் சுபீட்சத்துக்கு வழிகாட்டக் கூடிய தலைவர் இனி அங்கு கிடைப்பார் என்பது இப்போதைக்குச் சாத்தியமானதாகும் என்று எதிர்பார்க்க முடியாது. தாங்கள் இருக்கும் வரை இலங்கைக்குள் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளை வளர்த்தெடுத்து தாங்களும் தங்கள் உறவுகளும் உல்லாசமாக வாழ்வோம் என்ற குறிக்கோளுடன் உள்ளவர்களால் எப்படி ஒரு லீ குவான் யூ ஆக முடியும்? தேசப்பற்றுமிக்க அவரது காலடியைக் கூட எட்ட முடியாதவர்கள் எப்படி மக்களால் விரும்பப்படும் ஓர் உன்னத தலைவராக முடி யும்?

ஒரு வலுவான தலைவர் என்பது அந்த நாட்டில் வதியும் பல்வேறு இன மக்களையும் ஒரு நாட்டு மக்களாகக் கொண்டு அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் கிடைக்க வழியமைத்து சமன் செய்து சீர்தூக்கும் கோலான ஆட்சி இடம்பெறத் தன்னை அர்ப்பணிப்பவனே வலுவான ஆட்சித் தலைவனாவான். அப்படி ஒரு தலைவனை அத்துரலிய ரத்ன தேரரால் கண்டுகொள்ள முடியுமா?

# உடுபுடைவை வாங்க வருவோர் அவதானத்துடன் நடக்கவும்

## நகரில் திருடர் நடமாட்டம் குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 12

சித்திரைப் புத்தாண்டுக்கு உடுபுடைவைகள் மற்றும் பொருள்களை கொள்வனவு செய்ய வருகை தரும் மக்கள் தாம் அணிந்துவரும் தங்க நகைகளைதாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

யாழ்.நகரில் மட்டுமன்றி ஏனைய நகரப்பகுதிகளிலும் புத்தாண்டை முன்னிட்டு சன நெரிசல் காணப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டலாம்.

இது தொடர்பாக நகரில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் நேற்று எச்சரிக்கை அறிவிப்பு விடுத்தனர். மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் போன்றவற்றைக்கூட மக்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் தரிந்து நிறுத்த வேண்டும் என்றும் –

வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுஇடங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோர் குறித்து உடன் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தினால் பொலிஸார் விரைந்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்களின் உடைமைகளை பொதுமக்கள் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஓ – 17)

# விவசாய குடும்ப மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பங்களில் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முழுநேர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் பெற்றோரில் ஒருவராவது யாழ்ப்பாணத்திலுள்ள ஏதுமொரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினராக இருந்தாலும் சமுர்த்தி நிவாரணம் பெறாத குடும்ப அங்கத்தவராகவும் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தி 2016ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவராக இருந்தாலும் மேற்படி கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கலாம்.

இத்தகைய தகைமை உடையவர்கள் அவர்கள் எல்லைக்குட்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தத்தமது கமக்கார அமைப்பின் பரிந்துரையுடன் உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை பாடசாலை அதிபர் மற்றும் கிராம சேவையாளரின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றுடன் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிஷாந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவுகளுக்கான தெரிவு வறுமை, குடும்ப சூழ்நிலை, பிள்ளையின் கல்வித் தரம், மீள் குடியமர்வு என்பவை கருத்தில் கொள்ளப்பட்டு இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ–10)

## தொழில்நுட்ப பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சி நெறிகளுள் வீடியோ எடிட்டிங் நுட்பங்கள் மற்றும் கணினி கிராஃபிக் வடிவமைப்பு, கணினி வலையமைப்புத் தொழில்நுட்பம், கணினி ஹாட்வெயர், திரவ சவர்க்காரம் மற்றும் சவர்க்காரத் தூள் தயாரித்தல், பசுப்பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருள்கள் தயாரித்தல் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ–10)

## சீரணி நாகபூசணி மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 12

சண்டிலிப்பாய் சீரணி சாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறவுள்ளது. வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் உற்சவத்தில் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை தெப்பத்திருவிழாவும், 22ஆம் திகதி புதன்கிழமை மாலை கைலாசவாகனத் திருவிழாவும் –

தொடர்ந்து 29ஆம் திகதி புதன்கிழமை மாலை மாம்பழத்திருவிழாவும் மே மாதம் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும் 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பரத்திருவிழாவும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு இரதோற்சவமும் நடைபெற்று 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கொடியிறக்கத்துடன் உற்சவங்கள்முடிவடையவுள்ளன. (ஓ–10)

## புங்குடுதீவில் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 12

புங்குடுதீவு கிழக்கு கண்ணகைபுரம் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. கொடி யேற்றம் ஞாயிற்றுக் கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெறவுள்ளதுடன் 22ஆம் திகதி மகளிர்திருவிழாவும்24ஆம் திகதி கப்பற்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 27ஆம் திகதி சுமங்கலித் திருவிழா, 28ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழா, மே மாதம் 1ஆம் திகதி சப்பரம் வேட்டைத் திருவிழா என்பவை நடைபெற்று 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்தோற்சவமும் நடைபெற்று மாலை கொடியிறக்கம் இடம்பெறும். (ஓ–10)


**கண்ணீர் அஞ்சலி**

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்

கணேசன் லவன் அவர்களின் அன்புத் தந்தை

**அருணாசலம் கணேசன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம். (58789)

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது அன்பு மாமியார்



**திருமதி சரஸ்வதி அம்பிகைபாகன்**

(சீதா சோடா கம்பனி உரிமையாளரின் மனைவி)

அவர்கள் கடந்த 06.04.2015 திங்கட்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அனுதாபங்கள் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டு கின்றோம்.

த.குணசிங்கம் (குடும்பத்தினர்), மருமக்கள்.

40/6, றெயில்வே கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (58778)(45.7.3)

**17 ஆம் நாளில் நன்றியுடன் நினைக்கின்றோம்**



**ம. அன்பு**

(உரிமையாளர் - சால்ஸ் மீசாலை)

அன்புடன்
16.05.1931

பிரிவுடன்
28.03.2015

அன்பு எனும் மூன்றெழுத்தில் உருவாகி அமைதி எனும் மூன்றெழுத்தைக் கடைப்பிடித்து

பிரிவு எனும் மூன்றெழுத்தில் எமைவிட்டுச் சென்றீர்கள் இருப்பினும் இறைவனின் திட்டம் அதுவெனில்

நித்திய வாழ்வில் நிம்மதியாக உறங்க நித்தமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம் தந்தையே!

குடும்பத்தினர்.
077 959 1101
077 747 0832

சாள்ஸ்,
பங்களாவீதி, மீசாலை.

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்**



அன்னை மடியில்
18.10.1950

ஆண்டவன் அடியில்
15.03.2015

**அமரர் பொன்னம்மா பொன்னையா**

கடந்த 15.03.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (12.03.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ் விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிப்ப தோடு தவறவிடப்பட்ட உற்றார், உறவினர்.நண்பர்கள் இந்த அழைப்பைத் தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு இன்றுவரை பல் வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள்.நண்பர்களுக்கும் அதேபோல் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள், நண்பர்கள் தொலைபேசி ஊடாக எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள். மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தம்பகாமம்,
பளை.

குடும்பத்தினர்.
077 986 2529/
077 071 2234

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக்கழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலகப் பொறியியல் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

செல்வி இலட்சுமணன் வசந்தி அவர்களின் தாயாரான

**அமரர் பாக்கியம் இலட்சுமணன்**

அவர்கள் 09.04.2015 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச்செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் (58767)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

**ஸ்ரெல்லா சரஸ்வதி (பவானி) குணபாலன்**



தோற்றம்
17.08.1942

மறைவு
12.04.2014

"கிறிஸ்து எனக்கு ஜீவன்,
சாவு எனக்கு ஆதாயம்"

பிலிப்பியர்: 1:21

என்றும் எம்மை அன்பாலும்.
பண்பாலும் அரவணைத்து இனிய வாழ்வு தந்த தாயே!
வருடம் ஒன்று சென்றதம்மா உங்கள் மதிமுகம் மாறவில்லை
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த உங்கள் சிரித்தமுகம்
காண்பதற்கு ஏங்கித்தவிக்கின்றோம் எம்முடன் சேர்ந்து வாழ்ந்த ஒவ்வொரு
கணமும் எமக்குச் சொர்க்கமாய் இனிக்குதம்மா

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்களை என்றும் மறவாத
பிள்ளைகள்.

## சிங்கப்பூரிலுள்ள கோயில் ஒன்றுக்கு குருக்கள், முகாமையாளர், சமையலாளர்கள் போன்றவர்கள் தேவை

**குருக்கள்**

- குறைந்தது 5வருட அனுபவம்.
- 35 - 40 வயதுடையவர்
- கோயில் அலங்காரம் செய்பவர்கள்
- விண்ணப்பதாரியுடைய முழுப்போட்டோ அனுப்பவும்.
- சுயவிவரக் கோவை என்பன.

**முகாமையாளர்**

- கோயில் மேற்பார்வையாளர்.
- கோயில் வரும்படி (டொனேசன் சேகரித்தல்)
- கணக்கு தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், கணினி, தமிழ் கட்டாயம் தெரிந் திருத்தல்.
- புன்சிரிப்புடன் வரவேற்புகளை மேற்கொள்ளல்.
- முழுப்படம் அனுப்ப வேண்டும்.

**சமையலாளர்**

- 10 வருட அனுபவம்.
- மரக்கறி வகை சமையல்களைச் செய்யும் திறமை.
- இலங்கைத் தமிழர்.
- 40 வயதிற்குட்பட்டவர்.

உங்கள் சுயவிவரக் கோவையை e mail இல் அனுப்பி வைக்கவும்

**தொடர்பு : 659 753 9583**

**meenara43@gmail.com**


## பள்ளத்தில் பாய்ந்தது பவுஸர்



அக்குறணை – மா... தளை வீதியில் எரி பொருள் பவுஸர் ஒன்று தடம்புரண்டது. நேற்று மாலை இடம் பெற்ற இந்தச் சம் பவத்தில் பவுஸரில் எரிபொருள் இல்லாத நிலையில் பெரும் சேதங்கள் தவிர்க் கப் பட்டுள்ளன. வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையி லேயே பவு ஸர் வீதியை விட்டு விலகிபள்ளத்தில்பாய்ந் திருக்கலாம் என்று ஆரம்பகட்டவிசாரணை களில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஒ–10)


## வீடு,காணி விற்பனைக்கு

கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையில் பெரிய வீடும் 30 பரப்பு தோட்டக் காணியும் விற்பனைக்குண்டு. தற்போது தோட்டம் செய்யப்படுகின்றது. தோட்டம் செய்ய, பண்ணைகள் அமைக்க, ஆச்சிரமங்கள் அமைக்க ஏற்ற அமைதியான இடம். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் 1½ km தூரம், 150m தூரத்தில் மல்லாகம் கட்டுவன் முனியப்பர் கோவில் உள்ளது. கட்டுவன், யாழ்ப் பாணம் பஸ்சேவை உண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம். (பகுதியாகவும்பிரித்துக்கொடுக்கப்படும்)

தொடர்பு :- 077 844 6568
077 793 4445

(58552)

## தோஹா கட்டாரில் வெளிநாட்டு முன்னணி நிறுவனங்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு

| தொழில் | தேவை | இலங்கை ருபாவில் |
|---|---|---|
| HV AC டெக்னீசியன் – HV AC Technician | 10 | Rs.54000 |
| AC டெக்னீசியன் – AC Technician | 15 | Rs.50400 |
| மின் இணைப்பாளர் – Electrician | 12 | Rs.50400 |
| நீர்க்குழாய் பொருத்துநர் – Plumber | 10 | Rs.50400 |
| கட்டிட தச்சர் – Building Carpenter | 20 | Rs.50400 |
| மரவேலை தச்சர் – Finishing Carpenter | 15 | Rs.50400 |
| கட்டிட வேலையாளர் – Mason | 10 | Rs.50400 |
| இரும்பு ஒட்டுபவர் – Welder | 12 | Rs.50400 |
| தொழில்சார் உதவியாளர்கள் – Tech. Helpers | 50 | Rs.43200 |
| கனரக வாகன ஒட்டுநர் – Heavy Drivers | 25 | Rs.64800 |
| இரும்பு இணைப்பாளர்கள் – Steel Fixers | 50 | Rs.36000 |
| வாகன மின் இணைப்பாளர் – Auto Electrician | 10 | Rs.57600 |
| உபசரிப்பாளர்கள் ஆண் – Waiter for Hotel | 10 | Rs.43200 |
| மேற்பார்வையாளர் – Bartender for Hotel | 10 | Rs.50400 |
| கட்டிட பெயின்டர் - Building Painter | 15 | Rs.50400 |
| வாகன ஸ்பிரே பெயின்டர் - Auto Spray Painter | 05 | Rs.54000 |
| சாரதிகள் – Drivers GCC License | 20 | Rs.54000 |
| சாரதிகள் – Drivers Sri Lanka License | 05 | Rs.43200 |
| Excavator Operators, JCB Operators | 06 | Rs.79200 |
| Boom Truck, Grader, Shovel/Loader | 15 | Rs.97200 |
| Dump Trucks "10 Wheels" Drivers | 10 | Rs.86400 |
| Crane Operators And Forlift Operators | 05 | Rs.54000 |

- வயது எல்லை 18 முதல் 45 வரை.
- 08 மணித்தியால வேலையும் மேலதிக நேர வேலைக்கு (OT) கொடுப்பனவுகளும் உள்ளன.
- ஏனையவை யாவும் கட்டார் தொழில் சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகும்.
- ✓ உங்கள் பாஸ்போட், பாஸ்போட் அளவிலான புகைப்படம் ஒன்றும் மற்றும் தராதரச்சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்களுடனும் நேரில் வரவும் அல்லது கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
- ✓ பிராந்திய முகவர்கள் தேவை. (SUB AGENT) உடன் தொடர்புகொள்ளவும்.

N EXCELLENT MANAGEMENT SERVICE (NEMS)
முழு அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் - 2499
SPS Complex, 1st Floor (ஊவா வங்கியின் மேல் மாடியில்)
Main Street, Akkaraipattu.
T.P :- 0673693599, 0773049848 and 0773418437
E-Mail: nemsint@gmail.com

## Mega Sale மாபெரும் மலிவு விற்பனை



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நீங்கள் எம்மிடம் கொள்வனவு செய்யும் அனைத்து உடுப்புடைவைகளுக்கும்

**50% கழிவு** வழங்கப்படும். ➡ இச் சலுகை இன்று தொடக்கம் 15.04.2015 வரை மட்டும்.

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## அழகுக்கலைப் பயிற்சி



யாழ் பியூட்டி அக்கடமி மற்றும் ஒறிபிளேம் யாழ் சேவை நிலையம் இணைந்து சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு 20% கட்டணக் கழிவில்...

- ஒருமாத கால அழகுக்கலைப் பயிற்சி - 3990/= மட்டுமே
- 3 மாத கால டிப்ளோமா அழகுக்கலைப் பயிற்சி
- கேக் ஐசிங் பயிற்சி

அனைத்துப் பயிற்சிகளும் கூடுதலான செயன்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத் தப்பட்டு மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிழமைநாள் புதிய பிரிவுகள் 21-04-2015 அன்று செவ்வாய் 10.00மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 25-04-2015 அன்று சனி 10.00மணிக்கு

குறிப்பு : 3 மாத கால டிப்ளோமா அழகுக்கலை மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகளுக்கு இணையும் முதல் 15 நபர்களுக்கு 8,000/= கட்டணக்கழிவு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்...
நிறுவன அமைவிடத்தை அறிந்து கொள்வதற்கு 021 454 6026

Yarl Beauty Academy
No.616, Hospital Road, Jaffna.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவை முன்)



# நல்ல பழங்களை தெரிவு செய்வது எப்படி?

பழங்கள் உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்குபவை. இயற்கையாக பழுத்து கனிந்த பழங்களை உண்பது உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்பம் தரக்கூடியது. ஆனால் தற்போது பல்வேறுபட்ட காரணங்களுக்காக இரசாயனப் பதார்த்தங்கள் மூலம் காய்கள் பழுக்க வைக்கப்படுகின்றன. பழுக்க வைக்கப்பட்ட பழங்களும் பல சந்தர்ப்பங்களில் வேறு வகை இரசாயனப் பதார்த்தங்கள் மூலம் நீண்ட நாள்களுக்கு அழுகாமல் பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாறு பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் மூலம் எமக்கு பழங்களின் உண்மையான சுவை கிடைப்பதில்லை. அத்துடன் புற்றுநோய் போன்ற நோய்த் தாக்கத்துக்கும் உள்ளாகின்றோம்.

முற்றிய காய்களைப் பழுக்க வைப்பதற்கு பாரம்பரிய முறைப்படி புகை யூட்டல் செய்யப்படுகின்றது. இதன் போது புகையில் உள்ள எதிலீன் ஆனது முற்றிய காய்களை பழுக்கச் செய்கின்றது. அத்துடன் புகையுடன் கூடிய இளஞ்சூடு முற்றிய காய் களில் உள்ள எதிலினைத் தூண்டிப் பழுக்கச் செய்கின்றது. எதிலின் ஆனது இயற்கையாகவே முற்றிய காய்கள் பழமாகும் செயலைத் தூண்டுகின்ற ஒரு ஒமோன் ஆகும்.

செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளைப் பாவித்துப் பழுக்கச் செய்யும்போது முறைப்படி செய்தல் வேண்டும். அதாவது அதில் குறிப்பிடப்பட்ட அறிவுரையின் படி மூடிய கொள் கலனினுள் முற்றிய காய்களை அடுக்கி குறித்த பதார்த்தத்திலிருந்து எதிலினைத் தோற்றுவித்து, 24 மணித்தியாலங்கள் மூடி வைத்திருப்பதன் மூலமே பழுக்கச் செய்ய வேண்டும்.

ஆனால் இம்மருந்துகளானது நேரடி யாக முற்றிய மற்றும் முற்றாத காய்களுக்கு அதிகரித்த செறிவில் விசிறப்படுகின்றது. அல்லது தோய்க்கப்படுகின்றது. இதனால் அனைத்தும் மஞ்சள் நிறமாக மாறுகின்றன. இதனால் சுவையற்ற கனிகள் கிடைக்கின்றன. அத்துடன் உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கு விளை விக்க கூடியவை. மாம்பழம், வாழைப் பழம், திராட்சைப்பழம் போன்றன இவ்வாறு பழுக்க வைக்கப்படுகின்றன.



அத்துடன் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் நீண்ட நாள்களுக்கு பழுதாகாமல் இருக்க போமலின், காபிமைட் போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் பாவிக்கப்படுகின்றன. அப்பிள் பழங்கள் மெழுகு (wax) விசிறுவதன் மூலம் நீண்ட நாள்களுக்கு அழுகாமல் வைக்கப்படுகின்றது. formalin, carbimyde போன்றன அங்கீகரிக்கப்படாதவை. இவற்றினால் பல்வேறு தீங்கான விளைவுகள் ஏற்படும். எது எவ்வாறாகினும் நுகர்வோர் கீழ் வரும் மாற்று வழிகளை கையாளலாம்.

1. இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்கள் விசிறப்பட்ட பழங்களைத் தவிர்த்து பலாப் பழம், கொய்யாப்பழம், தோடம் பழம், ஒரேஞ்சுப்பழம், அன்னாசி, பேரீச்சம்பழம், ஜம்பு பழம், றம்புட்டான்பழம், வெள்ளரிப்பழம், வத்தகைப்பழம், மங்குஸ்தான்பழம், பாலைப் பழம், விளாம்பழம் போன்றவற்றை எடுக்கலாம்.
2. வீட்டில் வாழை, பப்பாசி போன்றவற்றை உற்பத்தி செய்து இயற்கையாக கனிந்த பழங்களை உண்ணலாம்.
3. தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று முற்றிய மாங்காய்கள், வாழைக்குலை, பப்பாசி போன்றவற்றை வீட்டில் கொண்டு வந்து பழுக்க வைத்து உண்ணலாம்.
4. அப்பிள் பழங்களின் தோலைச் சீவி அகற்றிய பின் உண்ணலாம்.

**மருத்துவர் இ.பரமேஸ்வரன்,**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

# ஒலி மாசாக்கம்

சக்தியின் வடிவங்களில் ஒன்றான ஒலியானது மனிதனதும் சக உயிர்களினதும் பிரதான தொடர்பாடல் ஊடகமாக இருக்கின்றது யாவரும் அறிந்ததே. இருப்பினும், இந்த ஒலி கூட மிதமிஞ்சியதாக இருக்கும் போது மனிதனதும் ஏனைய உயிரினங்களினதும் செயற்பாடுகளையும் சமநிலையையும் பாதிக்கும் அளவுக்கு மாசாக்கத்தை ஏற்படுத்தித் தீங்கு விளைவிக்கின்றது.

ஒலி மாசாக்கம் என்பது மற்றைய சூழல் மாசாக்கங்கள் போன்று அல்லாது சூழலில் எந்த ஒரு விளைவையும் விட்டு வைப்பதில்லை. ஆனாலும் அது மனிதனது உடல் நலத்தையும் உளநலத்தையும் பாதிப்படையச் செய்கின்றது.

மிகவும் உரத்த ஒலி மற்றும் உரப்புக் குறைந்த, ஆனால் நீண்ட நேரமாக ஒலிக்கப்படும் ஒலியானது மனிதனின் ஆரோக்கியத்தைப் பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இந்த ஒலி மாசடைதலின் பிரதான காரணிகளாக


1. வீடுகளில் அதிக தொனியிற் கேட்கப்படும் வானொலிகள்.
2. கட்டடக் கட்டுமானப் பணிகளின் போது எழுப்பப்படும் இயந்திர ஒலிகள்.
3. வாகனங்கள்
4. தொழிற்சாலை இயந்திரங்கள்
5. ஒலி பெருக்கிகள் ஆகியன விளங்குகின்றன.

இதனால் மக்கள் வீட்டில், தெருக்களில், வேலைத்தலங்களில் துரதிர்ஷ்ட வசமாக கோவில்களில் கூட ஒலிமாசாக்கத்தினால் பாதிக்கப்படுகின்றனர்.

இன்று அனேகமான வீடுகளில் வானொலியானது அதிக தொனியிலேயே(High volume) கேட்கப்படுகின்றது. இதனால் அந்த வீட்டில் வசிப்பவர்கள் மாத்திரமன்றி அயல் வீடுகளில் வசிப்பவர்களும் கூட பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொள்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதுடன், கல்வி கற்கும் மாணவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோய் வாய்ப்பட்டவர்கள் உடல், உள ரீதியில் பாதிக்கப்படுகின்றனர். இது மாணவர்களது கல்வியைப் பெருமளவில் பாதிக்கின்றது.

இவ்வாறு வீதியில் செல்லும் வாகனங்களின் இரைச்சல் மற்றும் அவற்றால் ஏற்படுத்தப்படும் ஹோர்ண் சத்தத்தினால் வீதி அருகில் வசிக்கும் மக்களும், ஒலி பெருக்கிகளினால், அதன் சுற்றுவட்டாரத்திலுள்ள மக்களும் பெருமளவில் ஒலி மாசாக்கத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

மிதமிஞ்சிய உரத்த ஒலிகளைக் கேட்பதனாலும், உரப்புக் குறைந்த ஒலிகளைத் தொடர்ச்சியாகக் கேட்பதனாலும் மனிதனது கேள் தகைமை பாதிக்கப்படுவதுடன் ஒரு கட்டத்திற்கு மேல் அது மீளமுடியாத செவிட்டுத் தன்மையையும் ஏற்படுத்தி விடுகின்றது.



அது மட்டுமன்றி உரத்த சத்தங்களை உணர்ந்து கொள்வதில் சிரமம், தொடர்ச்சியாக காதினுள் இரையும் தன்மை என்பனவும் ஏற்படுகின்றன.

ரயில் பாதை மற்றும் பிரதான வீதி களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் இரவில் ஏற்படுத்தப்படும் இரைச்சலினால் நித்திரைக் குழப்பங்களுக்கு ஆளாகி சீரான நித்திரை இன்மையால் உடல் நலக்குறைவு மற்றும் மன அழுத்தம் என்பனவற்றுக்கு ஆளாவதாக ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. இதனால் உயர்குருதி அமுக்கம், இருதய சம்பந்தமான நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கலாம்.

தொழிற்சாலைகள் மற்றும் கட்டடக் கட்டுமானம் என்பனவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் அதிக நேரம் இயந்திரங்களின் இரைச்சல் மற்றும் பாரிய சத்தங்களைக் கேட்க வேண்டி உள்ளதனால் அவர்களின் கேள் தகைமை பாதிக்கப்பட்டு வேலை செய்யும் ஆற்றலும் பாதிப்படைவதனால் அவர்கள் தங்கள் தொழிலை இழந்து பொருளாதார நெருக்கடிகளிற்குள்ளாவதுடன் மன அழுத்தம் போன்ற உளவியல் பாதிப்புக்களிற்கும் ஆளாக நேரிடுகின்றது.

ஒலி மாசாக்கத்தினால் குழந்தைகளும், சிறுவர்களும் மிக மோசமான பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். சிறுவர்களுக்குக் கேள்திறன் பாதிப்படைவதால் அவர்களின் கற்றற் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கும் நிலை ஏற்படுகின்றது.

குழந்தைகளைப் பொறுத்தவரை அவர் களது கேள்திறன் பாதிப்படைவதுடன், பேச்சு ஆற்றல் இழக்கும் நிலையும் ஏற்படுகின்றது.

ஒலி மசாக்கத்தினால் மனநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகரிக்கப்படுவதாக ஆய்வாளர்கள் கூறும் உண்மை அத்துடன், ஏற்கனவே மனநோயால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை தீவிரமடைவதும் ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒலி மாசாக்கம் ஆனது மனிதனை மட்டுமன்றி மற்றைய உயிர்களையும் பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. உதாரணமாகக் காட்டுப் பகுதிகளில் வாழும் பறவைகள், மரம் வெட்டும் இயந்திரங்களின் சத்தத்தினால் அங்கு வசிக்க முடியாது குடி பெயர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒலி மாசாக்கம் ஆனது உலகில் வாழும் சகல உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாக விளங்குவதனால் இதிலிருந்து எம்மைக் காத்துக் கொள்வதற்கு எம் எல்லோரது ஒத்துழைப்பும், புரிந்துணர்வும் அவசியமாகின்றது.

இதற்காக:–

1. வீடுகளில் வானொலிப் பெட்டியின், தொலைக்காட்சியின் சத்தத்தைக் குறைத்தல்.
2. வாகனங்களில் செல்லும் போது தேவையற்ற இடங்களில் ஹோர்ண் பாவிப்பதைத் தடுத்தல்.
3. ஒலிபெருக்கிகளைத் தேவையான நேரத்தில், தேவையான இடங்களில், தேவையான அளவிற் பயன்படுத்தல்.
4. தொழிற்சாலைகளை, குடியிருப்பு மற்றும் பாடசாலைகளிலிருந்து கிட்டத்தட்ட 1K.M தூரத்திற்கு அப்பால் அமைத்தல்.
5. ரயில்பாதை, மற்றும் பிரதான வீதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் வீட்டைச் சுற்றி மரங்கள் வளர்த்தல்.
6. சத்தம் அதிகம் உள்ள இடங்களில் ஒலி புகாத அறைகளை அமைத்தல்.
7. இயந்திரங்களுடன் பணிபுரியும் தொழிலாளர்கள் காதில் ஒலி புகாத கருவிகளை அணிதல் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

**Dr.கருணதீபா சிவபாதசுந்தரம்**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# 2.4 பில்லியனை போனஸாகப் பெறும் செலிங்கோ லைப் காப்புறுதிதாரர்கள்

செலிங்கோலைஃப் அதன் 300,000 த்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு 2015 ஏப்ரல் மாத வருடாந்த போனஸாகவும் அவுலுதுகேஷ் பணக் கொடுப்பனவாகவும் 2.4 பில்லியனுக்கும் அதிகமான தொகையை பகிர்ந்து வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட மாதத்தில் வருடாந்த போனஸ் தொகையாக 2.4 பில்லியன் ரூபாவுக்கான சான்றிதழ் சம்பந்தப்பட்டவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். அத்தோடு அவர்களுக்கு அதிர்ஷ்ட இலக்கமொன்றை தெரிவு செய்யுமாறு அழைப்பிதழ் ஒன்றும் அனுப்பி வைக்கப்படும். அதன் மூலம் தமது ஆயுள் காப்பை விரிவு செய்து கொள்வதோடு ஐந்து பேருக்கு பாங்கொக் சுற்றுப் பயணத்துக்கான வாய்ப்பு, 20 பேருக்கு ஸ்மார்ட் போன்களை வெல்லும் வாய்ப்பு என்பனவும் வழங்கப்படும்.



செலிங்கோலைஃப் இம்முறை வழங்கவுள்ள போனஸ் தான் அதன் வரலாற்றில் மிகவும் பெரியதாகும். கடந்த ஆண்டை விட 500 மில்லியன் ரூபா அதிகமானதாகும். 2014 நிதி ஆண்டில் கம்பனி திரட்டிய ஆயுள் நிதிய தொகையை அடிப்படையாகக் கொண்டதாகவே வருடாந்த போனஸ் கொடுப்பனவு அமைந்துள்ளது.

கம்பனி தனது நிதி ஆலோசனை நிபுணர்கள் வழங்கிய பரிந்துரைகளுக்கு இசைவாக 10 ஆயுள் காப்புறுதித் திட்டங்கள் மீதான வருடாந்த போனஸ் கொடுப்பனவு வீதத்தை அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த ஏப்ரல் மாதத்தில் 142,00 செலிங்கோலைஃப் காப்புறுதிதாரர்களுக்கு அவுறுதுகேஷ் போனஸ் திட்டத்தின் கீழ் உடனடியாக மாற்றத்தக்க காசோலையாக 57.2 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இது அவர்களின் விசுவாசத்துக்காக கொடுக்கப்படுகின்ற வெகுமதியாகும். ஏப்ரல் மாத காலப்பகுதியில் அவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று இந்தக் காசோலை கையளிக்கப்படும்.

எமது போனஸ் திட்டமானது ஒவ்வொரு வருடமும் சித்திரைப் புத்தாண்டை எமது வாடிக்கையாளர்கள் மேலதிக குதூகலத்துடன் கொண்டாடும் வாய்ப்பை வழங்குகின்றது. அதேநேரம் அவர்கள் தமது ஆயுள் காப்புறுதியைப் புதுப்பித்து தமக்கும் தமது அன்புக்கு உரியவர்களுக்கும் சரியான காப்பினை வழங்கியுள்ளனரா என்பதை நினைவூட்டுவதற்கும் உரிய ஒரு நல்ல சந்தர்ப்பமும் ஆகும் என்றார். செலிங் கோலைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறை வேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்க நாதன்.

ஒரு மில்லியனுக்கும் குறைவான ஆயுள் காப்பீட்டுத் தொகையைக் கொண்டுள்ள தற்போதைய வாடிக்கையாளர்களுள் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு தமது காப்புறுதித் தொகையை விரிவுபடுத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமும் இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் போனஸ் சான்றிதழோடு சேர்த்து இதற்கான அழைப்பு நேரடியாக அனுப்பப்படும்.

முன்னைய ஆண்டுகளைப் போல் 2014 டிசம்பரில் காப்புறுதிக் கொள்கைகளைப் பெற்றுக் கொண்ட வாடிக்கையாளர்களும் இந்த போனஸ் கொடுப்பனவைப் பெற உரித்துடையவர்கள் ஆவர். ஒரு காப்புறுதிக் கொள்கை வழங்கப்பட்ட முதலாம் ஆண்டில் இருந்தே அதற்கான போனஸும் வழங்கப்படும் என்ற கம்பனியின் கொள்கைக்கு அமைய இது வழங்கப்படுகின்றது.

இவ்வாண்டு வழங்கப்படவுள்ள அவுறுதுகேஷ் போனஸ் தொடர்ந்து 12வது ஆண்டாக வழங்கப்படுகின்றது. 2004ல் கம்பனி இந்தத் திட்டத்தை தொடக்கி வைத்தது. 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்யும் ஒரு காப்புறுதி கொள்கையின் காப்புறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு ஆயிரம் ரூபாவுக்கும் நூறு ரூபா என்ற வகையிலும், 20 ஆண்டுகளைப் பூர்த்திசெய்த ஒவ்வொரு காப்புறுதி கொள்கையினதும் காப்புறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு ஆயிரம் ரூபாவுக்கும் 75 ரூபா என்ற வகையிலும், 15 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தால் ஆயிரம் ரூபாவுக்கு 50 ரூபா என்ற வகையிலும், 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தால் ஆயிரம் ரூபாவுக்கு 25 ரூபா என்ற வகையிலும் போனஸ் கொடுப்பனவு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த அடிப்படையில் செயற்படு நிலையில் உள்ள ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு காப்புறுதி கொள்கை பத்தாண்டுகளைப் பூர்த்திசெய்யும் பட்சத்தில் 25 ஆயிரம் ரூபாவை போனஸாகப் பெறும் வாய்ப்பு உள்ளது. அதேபோல் 15 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தால் 50 ஆயிரம் ரூபாவையும், 20 ஆண்டுகளைப் பூர்த்திசெய்தால் 75 ஆயிரம் ரூபாவையும், 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்தால் ஒரு லட்சம் ரூபாவையும் போனஸாகப் பெறும் வாய்ப்புஉள்ளது – என்றார்.

(த)








## சாதனை புரிந்த மாணவர்களுக்கு சிங்கர் அல்ட்ரா நோட்புக் கணினி

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் முதல் 10 சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்த மாணவர்களுக்கு சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியினால் அல்ட்ரா நோட்புக் மடிக்கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்வு அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது. சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்த மாணவர்களுக்கான மடிக் கணினிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையளித்திருந்தார்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் அதிகாரிகளும், சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் வணிக செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் மஹேஷ் விஜேவர்தன ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

சிங்கர் நிலையாண்மைக் கொள்கை தொடர்பில் சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை குடிமகன் எனும் வகையில், இலங்கையின் கல்வித்துறையை மேம்படுத்த எம்மை அர்ப்பணித்துள்ளோம். இதற்கமைய 2010 ஆம் ஆண்டில் நாம் பாடசாலை அபிவிருத்தி செயற்திட்டத்தை ஆரம்பித்திருந்தோம். நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்கி மேம்படுத்துவதுடன் எமது நாட்டின் கல்வித்துறையை மேம்படுத்துவது என்பது எமது கடமை என நாம் கருதுகிறோம் என்றார்.

சிங்கர் ஸ்ரீலங்காவின் பாடசாலை அபிவிருத்தி திட்டம் என்பது 160 பாடசாலைகளுக்கு நன்கொடைகள் வழங்கலுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டில் சிங்கர் ஸ்ரீலங்காவின் 160 ஆவது வருட பூர்த்தியை குறிக்கும் வகையில் இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அன்று முதல் சிங்கர் தொடர்ச்சியாக பாடசாலை அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு தனது பங்களிப்புகளை வழங்கி வருகிறது. வருடாந்தம் இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்காக 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (த)


SINGER
புதுவருடத்தை
சுவையாக்கும்
சமையலறை
உபகரணங்கள்
தெரிவு செய்வதற்கு உலகத் தரமான 12 வர்த்தக நாமங்கள்
மற்றும் 120ற்கும் அதிகமான மாதிரிகள்
SINGER
உன்னத
புதுவருட
கொண்டாட்டம்
கிரைண்டர் / ப்பூட் புரொசெசர்
Grinders / Food Processors
கேஸ் அவன்
Gas Ovens
மின்சார அவன்/ மைக்ரோவேவ் அவன்
Electric Burners
Microwave Ovens
ரயிஸ் குக்கர்
Rice Cookers
ஒட்டும் தன்மையற்ற பாத்திரங்கள்
Non-Stick Pans
டோஸ்டர் / வொபெல் மேக்கர்
Toasters / Waffle Makers
மிக்ஸர்/ பிலெண்டர்/ ஜுசர்
Mixers / Blenders / Juicers
கேஸ் குக்கர்
Gas Cookers
மின் கேத்தல்
Electric Kettles
பிரஸர் குக்கர்
Pressure Cookers
நம்பிக்கையான SINGER உத்தரவாதத்துடன்
ரூ.1,499 தொடக்கம்
SINGER SISIL Welling beko Moulinex KRUPS SAMSUNG
Tefal Prestige KENWOOD SHARP Whirlpool
யாழ்ப்பாணம் 021-2225408 | சங்கானை 021-2251100 | சாவகச்சேரி 021-2270197 | கொடிகாமம் 077-6433888
நெல்லியடி 021-2264937 | சுன்னாகம் 021-5100280 | மானிப்பாய் 021-2263411 | கிளிநொச்சி 021-2280199
பருத்தித்துறை 021-2263411 | முல்லைத்தீவு 021-2290180
011 5 400 400
www.singersl.com
கிடைக்குமிடங்கள்
SINGER Plus மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்
www.masters.lk





புனித தவக்காலத்தையொட்டி சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்கு மக்களின் சிலுவைப்பாதை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சாவகச்சேரி கண்டுவில் வீதியில் ஆரம்பித்து ஏ–9 வீதி, கச்சாய் வீதி ஊடாக ஆலய முன்னிலை சென்றடைந்தது. ஆலய பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள் தலைமை யில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (வ–9)







வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் 2015 ஆம் ஆண்டுக்கான பணுவில் எனும் மலர் வெளியீடு அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொண்டு சிறப்பித்தார். மலர் வெளியீடு சம்பந்தமாக சில காட்சிகள் இங்கே... (ஒ–29)




# ஜேம்ஸ்ரெய்லர் பாவித்த 200 வருட பழைமையான பாதை கண்டுபிடிப்பு









கொழும்பு, ஏப்.12

ஜேம்ஸ்டெய்லர் காலத்தில் தேயிலை கொண்டுசெல்லப் பயன்படுத்தப்பட்ட பாதை ஒன்று 200 வருடங்களுக்குப் பின்னர் நுவரெலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை பிரதேசத்துக்கும் – உடபளாத்த பிரதேசத்திற்கும், கந்தலா தோட்டம் வீடன் பிரிவிலிருந்து – லூல்கந்துர தோட்டம் ஊடாக அங்குராங்கத்தைக்குச் செல்லும் கண்டி – நுவரெலியா மாவட்டங்களுக்கு இடையிலான இணைப்புப் பாலமாக 200 வருடங்களுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட இந்தப் பாதை கைவிடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக சீரமைக்கும் பணியில் பொதுமக்கள் இறங்கியுள்ளனர்.

பல வரலாற்றைக்கொண்ட இந்தப் பாதை ஆரம்ப காலத்தில் ஒற்றையடிப் பாதையாகக் காணப்பட்டது. அது அங்குராங்கத்தையையும் கொத்மலையையும் இணைக்கும் ஒரு பாதையாகவும் இருந்துள்ளது. அந்தக் காலத்தில் தேயிலையை முதன்முறையாக இலங்கைக்குக் கொண்டு வந்த ஜேம்ஸ் டெயிலரும் குறித்த பாதை காணப்படும் பிரதேசத்திலேயே வாழ்ந்து வந்துள்ளார். தற்போதும் அவர் வாழ்ந்த இடம், பாவித்த பொருள்கள், நாட்டப்பட்ட தேயிலை ஆகியன அந்தப் பிரதேசத்தில் அருங்காட்சியகமாகக் காணப்படுகின்றன.

காலப்போக்கில் அந்தப் பாதை ஆங்கிலேயரால் வாகனங்கள் செல்லும் பாதையாக மாற்றப்பட்டு குதிரைச் சவாரிகளும் நடத்தப்பட்டன. ஆதி காலத்தில் அங்குராங்கத்தையில் நெல் விவசாயம் முடிவுறும்போது. கொத்மலையில் நெல் விவசாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வேளையில் விவசாயத்துக்கான நெல் உட்பட உழவுக்குக் கொண்டு செல்லப்படும் மாடுகளும் விவசாயிகளும் இப்பாதையின் ஊடாக கொத்மலைக்கும் அங்குராங்கத்தைக்கும் மாறி மாறிச் சென்றுள்ளனர்.


அந்தப்பாதையில் களைப்பாறும் இடம் ஒன்று காணப்படுவதுடன், அந்த இடத்தில் உள்ள மரமொன்றை தெய்வமாக மக்கள வணங்கிவந்துள்ளனர். தற்போதும் காணப்படும் இந்த மரத்தின் ஓட்டையில் மக்கள் காணிக்கை போடுவர். அதனால் அது காணிக்கை மரம் என்று அழைக்கப்பட்டுள்ளது.

பாதைகள் கற்களால் பரவப்பட்டும் தார் போடப்பட்டும் இருந்துள்ளன. தற்போது இவைஉடைந்துகாணப்படுகின்றன. பற்றைகளால் மூடப் பட்டுள்ள இந்தப் பாதையை மீள அமைப்பதன் ஊடாக இழந்த பல பழைய தொடர்புகளைமீண்டும் புத்துயிர் பெறச் செய்யலாம்.

அந்தப்பாதை மூடப்பட்டதனால் அங்குராங்கத்தை – கொத்மலை மக்களின் உறவுமுறைகள் தடைப்பட்டுள்ளன. பாரம்பரிய கலாசாரங்களும் மறக்கப்பட்டுள்ளன. மேற்படி மக்கள் சிவனொளிபாதம லைக்கும் இவ்வழியாகவே நடந்து சென்றதாகத் தெரிய வருகின்றது.

குறித்த களைப்பாறும் இடத்தில் காணிக்கை மரத்தில் காணிக்கை போட்டு விட்டு மரத்தையும் வணங்கிவிட்டுப் பார்த்தால் சிவனொளி பாத மலை தெரியும். அங்கிருந்து சிவனொலிபாதமலையைத் தரிசிப்பதும் வழக்கம்.

கொத்மலை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர் அசோக ஹொயரத், கொத்மலை பிரதேச செயலாளர் சேனாநாயக்க ஆகியோரின் முயற்சியால் அந்தப்பாதை அரசின் 100 நாள் வேலைத்திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டு புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)




# மட்டக்களப்பில் மாபெரும் வியாபாரச் சந்தை ஆரம்பம்





மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மற்றும் சேவ் த சில்ரன் நிறுவனங்கள் இணைந்து மாபெரும் வியாபாரச் சந்தை ஒன்றை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சந்தைக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்கியுள்ளதுடன். மட்டக்களப்பு மாவட்ட மகளிர் சம்மேளனமும் பங்களிப்புச் செய்துள்ளது.

ஒரு தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பும் அவசியம் எனும் தொனிப்பொருளில் பெண்களின் வியாபார சந்தையை வலுப்படுத்தும் முகமாகவும், பண்டிகைக்காலத்தை முன்னிட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாபெரும் வியாபார சந்தையை மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.ரங்கநாதன் ஆரம்பித்து வைத்தார்.

வியாபாரச் சந்தையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஆரோக்கியமான, தரமான பொருள்களான பால் உற்பத்திப்பொருள்கள், கிராமிய பாரம்பரிய உணவுகள், நாட்டரிசி, அரிசிமா, உழுத்தம்மா, மீன், கருவாடு, தின்பண்டங்கள், நாட்டுக்கோழி முட்டை, இயற்கைப் பசளை பாவித்து உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள், பழவகைகள், சிறுவர்கள் வளர்ந்தோருக்கான தைக்கப்பட்ட ஆடைகள்,கைப்பணிப் பொருள்கள் உட்பட பல கிராமிய உற்பத்திப் பொருள்கள் குறைந்த விலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாபெரும் வியாபாரச் சந்தை ஆரம்ப நிகழ்வில் சேவ் த சில்ரன் சர்வதேச நிறுவனத்தின் இலங்கை நாட்டுக்கான தலைவர் வில்லியம் லிங்ஸ் , வை. எம்.சீ.ஏ. நிறுவனத்தின் தலைவர் வீ.டி.சேஹராஜசிங்கம், வாகரை பிரதேச செயலாளர் திருமதி எஸ். ஆர்.ராஹூலநாயகி, சேவ் த சில்ரன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஜூலியன் செல்லப்பா, மட்டக்களப்பு மாவட்ட கைத்தொழில் வர்த்தக சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.கே.குக தாஸ், மட்டக்களப்பு மாவட்ட மகளிர் சம்மேளனத்தின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அருளானி சந்திரசேகரம், மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மற்றும் சேவ் த சில்ரன் நிறுவனங்களின் பிரதிநிதிகள் , மட்டக்களப்பு மாவட்ட மகளிர் சம்மேளனத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ–10)

Pears

சருமம் இதமானால்
செல்லத்துக்கு குஷியோ குஷி.




"குழந்தைகள் சந்தோஷமாக இருக்கும்போது புதிய விடயங்களைப் பழகிக் கொள்வாங்க" என்ற விடயத்தை பெயார்ஸ் நன்கு அறிந்து வைத்துள்ளது. அதனால்தான், குழந்தைகளின் சருமத்திற்கு இதமானதும், எரிச்சல்களும் அற்ற மென்மையான பாதுகாப்பைத் தரக்கூடிய ஒலிவ் எண்ணெய், மற்றும் பால் புரதங்களால் செழுமையாக்கப்பட்ட பெயார்ஸ் தயாரிப்புப் பொருட்களை குழந்தைகளுக்கு பெற்றுத்தருகின்றனர்.

ரூ. 45 இலிருந்து

எரிச்சல்கள் அற்ற இதமான, மென்மையான பாதுகாப்பு.

Unilever

# புத்தாண்டில் முதல் கொடுக்கல் வாங்கல் நல்ல நேரத்தில்



**மக்கள் வங்கியிடமிருந்து இம்முறை புத்தாண்டுப் பரிசாகப் பெறுமதி மிக்க சுவர்க்கடிகாரம் ஒன்று**

ரூபா.5000 ம் அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து சேமிப்பு வைப்புக்களுக்கும் இந்தப் பரிசு உரித்தாகும்.

**ஏப்ரல் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி முதல்**

அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக உங்களுக்காக திறந்திருக்கும்.
வங்கித்துறைக்கு புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மரபை அறிமுகப்படுத்திய மக்கள் வங்கி இம்முறையும் உங்களை அன்போடு அழைக்கின்றது.

**புத்தாண்டு பிறப்பு** : ஏப்ரல் 14 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணி 47 நிமிடத்தில்

**புண்ணிய காலம்** : ஏப்ரல் 14 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி 47 நிமிடம் வரையுள்ள காலம்

**விருந்து உண்ணல்** : ஏப்ரல் 15 புதன்கிழமை காலை 10 மணி முதல் காலை 11 மணி வரை உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று விருந்து உண்பது சிறப்புக்குரியதாகும்

**கைவிசேடம்** : ஏப்ரல் 15 புதன்கிழமை காலை 7 மணி 52 நிமிடம் தொடக்கம் காலை 9 மணி 48 நிமிடம் வரை அல்லது காலை 10 மணி தொடக்கம் காலை 11 மணி வரை

**தொழில் மற்றும் வித்தியாரம்பம்** :. ஏப்ரல் 15 புதன்கிழமை காலை 9 மணி 58 நிமிடம் முதல் காலை 11 மணி 24 நிமிடம் வரையுள்ள சுபநேரம் நன்மை தரும்

அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரு பரிசு

கையிருப்பு முடியும் வரை மட்டுமே

AA- Brand Finance Rating, AA+ Fitch Rating

2006 2007 2008 2010 2011 2012 2013 2014

2008 2010 2011 2012 2013 2014

மக்கள் வங்கி

www.peoplesbank.lk


2015 புது வருடத்தில் TVS உடன்
புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்
அல்லது ஸ்கூட்டர்களுக்கு
ரூ.10,000 வரை விசேட கழிவு
மேற்குறிப்பிட்ட கழிவினை பெற்றுக்கொள்ள நீங்கள் செய்ய வேண்டியது 2015 ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் முற்பணம் செலுத்தி TVS WEGO அல்லது TVS Jupiter ஸ்கூட்டரை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் அதனை 2015 ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்ய வேண்டியது மட்டுமே...
Jupiter
TVS wego
TVS
0114 600 500


1717
இப் புதுவருட காலத்தில்
சுவையான கதை பேச
சிறந்த IDD கட்டணங்கள்!
இப் புதுவருட பண்டிகைக் காலத்தில் உங்கள் அன்பு உறவுகளுடன் நிதமும் திசையெங்கும் சுவையான கதை பேச சிறந்த IDD கட்டணங்கள்.
இக் கட்டணங்கள் IDD Buddy அழைப்புகளுக்கு செல்லுபடியாகும்.
சவூதி அரேபியா
இந்தியா
ரூ. 9.00
ரூ. 10.00
ரூ. 8.00
ரூ. 10.00
ரூ. 14.00
ரூ. 15.00
2015 ஏப்ரல் 30 வரை மட்டுமே.
Sri Lanka Telecom
Mobitel
TRIAD 33012


Dialog
LORD OF THE RELOAD
சுப்பர் அதிஷ்டம்
? ? ? ? ?
இவ் வார வெற்றி இலக்கங்கள்
உங்கள் மொபைலில் உள்ளதா?
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
வெற்றி இலக்கங்களை அறிய #121#ஐ டயல் செய்யுங்கள்.
இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும்
அதி பிரம்மாண்டமான பரிசுத் தொகை
Dialog
எதிர்காலம் இன்றே.


புதிய
Lifebuoy
Unilever
சித்திரைப் புத்தாண்டில் விஷக்கிருமிகளை அல்ல
இனிப்பான பலகாரங்களின் சுவையை
அனுபவிப்போம்!
10 நோய்களுக்குக் காரணமான விஷக்கிருமிகளிடமிருந்து
பாதுகாப்பாக இருந்திட தினமும் லை.்ப்போய் பாவியுங்கள்*
விலை ரூ. 24/- இலிருந்து
ரூ. 205/
0112 629 629
அழையுங்கள்

## பன்றித்தலைச்சி ஆலயத்தில் விசேட நிகழ்வுகள்

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய 5ஆவது பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கண்ணகாம்பிகா அன்ன சந்திரத்தில் நாளை திங்கட்கிழமை விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. காலை 7 மணிக்கு யாழ்.சின்மய மிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் ஆன்மிகச் சொற்பொழிவு மு.ப.11 மணிக்கும் தொடர்ந்து மட்டுவில் தெற்கு ஞான வைரவர் ஆலய பஜனைக் குழுவினரின் பஜனையும் இடம்பெறும். (ஒ-9)


**ஷைலோ ஐஸ் கிறீம்**

மிகக் குறுகிய காலத்தில் யாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற **Sylo Food and Bavareges Pvt Ltd** நிறுவனத்தினராகிய நாம் பால், தேன், பிஸ்தா, பாதாம், முந்திரி, பேரீட்சை, திராட்சை போன்ற இயற்கையான ஆரோக்கியமான சுவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும். **Sylo Ice Cream** தயாரிப்புக்களின் விற்பனை நிலையத்தை யாழ். நகரத்தில் பஸ் நிலையம் முன்புறம் ஆரம்பித்துள்ளோம். என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஷைலோ ஐஸ்கிறீம்**
இல. 442, வைத்தியசாலை வீதி,
(வாகனத்தரிப்பிடம் எதிரில்) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 7885


# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 3 | | 9 | | 8 | | 6 |
| 1 | | | | 4 | 8 | | 5 | |
| | 4 | | 7 | 5 | | 9 | | 2 |
| 3 | | | 4 | | | 5 | | |
| | | | | | | | | |
| | | 6 | | | 9 | | | 4 |
| 9 | | 1 | | 2 | 7 | | 8 | |
| | 8 | | 9 | 6 | | | | 7 |
| 7 | | 2 | | 8 | | 6 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 5 | 4 | 7 | 2 | 1 | 9 |
| 5 | 2 | 7 | 3 | 9 | 1 | 8 | 4 | 6 |
| 4 | 9 | 1 | 8 | 2 | 6 | 5 | 3 | 7 |
| 6 | 1 | 3 | 9 | 8 | 4 | 7 | 5 | 2 |
| 7 | 5 | 9 | 2 | 1 | 3 | 4 | 6 | 8 |
| 2 | 4 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 9 | 7 | 4 | 6 | 3 | 8 | 1 | 2 | 5 |
| 3 | 8 | 2 | 1 | 5 | 9 | 6 | 7 | 4 |
| 1 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 | 8 | 3 |

## சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இன்

# வாடிக்கையாளர்களுக்கான ஒரு அறிவித்தல்

இலங்கை மத்திய வங்கி சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் கணக்கேடுகளை இற்றைப்படுத்தும் கடமையினை மேற்கொள்வதற்கு எம்/எஸ் கேபிஎம்ஜி சிறிலங்காவிற்கு அதிகாரமளித்திருக்கிறது. சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்சின் வைப்புப் பொறுப்புக்களைக் கண்டறிவதற்கு பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். ஆகவே, தமது வைப்பு நிலுவைகளை எம்/எஸ் கேபிஎம்ஜி நிறுவனத்திற்கு ஏற்கனவே உறுதிப்படுத்தாத சென்றல் இன்வெஸ்ட்மன்ற் அன்ட் பினான்சின் வைப்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ளவாறான மாதிரிப் படிவத்தினை நிரப்பி எம்/எஸ் கேபிஎம்ஜி, 32-ஏ, சேர் மொகமட் மாகான் மார்கார் மாவத்தை, கொழும்பு 3, இலங்கை, என்ற முகவரிக்கு நிறுவனத்தின் கவனத்திற்காக 2015.04.24 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இல் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. வைப்பாளர்கள்/ கூட்டு வைப்பாளர்களின் முழுப்பெயர் | | |
| 2. தேசிய அடையாள அட்டை இலக்கம்/ வியாபார அடையாள இலக்கம் | | |
| 3. முகவரி | | |
| 4. தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் | செல்லிடத்தொலைபேசி<br>வதிவிட தொலைபேசி | |
| | 2014.03.31 இல் உள்ளவாறு | 2014.09.31 இல் உள்ளவாறு |
| 5. நிலையான வைப்பின் இலக்கம் | | |
| 6. முதலீடு செய்யப்பட்ட தொகை (ரூ.) | | |
| 7. முதலீடு செய்யப்பட்ட திகதி | | |
| 8. முதிர்ச்சித் திகதி | | |
| 9. ஆண்டொன்றிற்கு வட்டி வீதம் | | |
| 10. பெறத்தக்க வட்டி (ரூ.) | | |
| 11. உங்கள் பதிவேடுகளின்படி மேற்குறிப்பிட்ட திகதியில் மேற்குறிப்பிட்ட கம்பனியிடமிருந்து வரவேண்டிய தொகை ரூ. | | |

மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

.................................... திகதி

.................................... வைப்பாளரின் கையொப்பம்

(தயவுசெய்து சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் இனால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள்/ சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்)

இலங்கை மத்திய வங்கி


WELLAWATTE

**UDAYAA JEWELLERS**

**புதிய காட்சியறை திறப்பு விழா**

புதிய மற்றும் நவீன டிசைன்கள் கொண்ட புதிய காட்சியறையை வாடிக்கையாளர்களான உங்களை திறந்துவைக்க அன்புடன் அழைக்கின்றோம்.

**15.04.2015ம் திகதி புதன்கிழமை காலை 6.27 மணிமுதல்**

இல. 303, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.
தொ.பேசி : +94-11-2554933

அக்ஷய திருதியை முன்னிட்டு விஷேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

வெள்ளவத்தையை தவிர வேறெங்கும் எமக்குக் கிளைகள் கிடையாது


# வாடாமல்லிகை

**அன்னா தொழிலக வளர்ச்சியும் எழுச்சியும்**

## நூல் வெளியீடு - 2015

**காலம்: 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி**
**இடம் : இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய வீதி.**
**தலைவர்: பேராசிரியர் க.தேவராஜா**
(யாழ்.பல்கலைக்கழகம் - போசகர் இணுவில் பொது நூலகம்)
**பிரதம விருந்தினர்: திரு.நா.வேதநாயகம்** (யாழ்.அரச அதிபர்)

**நிகழ்ச்சி நிரல்**
மங்கல விளக்கேற்றல் — **தேவாரம்: கு. அனுஷன்** (ஆசிரியர்)
வரவேற்புரை : **ச.சிவசங்கர்** (தலைவர் இணுவில் பொதுநூலகம்)
**ஆசியுரைகள்**
**சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக்குருக்கள்** — **சிவஸ்ரீ இ.உருத்திரமூர்த்தி குருக்கள்**
**ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்** (நல்லை ஆதீனம்)
**தொடக்க உரை : செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்**
(தலைவர் துர்க்கா தேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)
**தலைமை உரை**
**வாழ்த்துரைகள்**
**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
(முன்னாள் துணைவேந்தர் - யாழ்பல்கலைக்கழகம்)
**பேராசிரியர் S.சிவலிங்கராஜா** (முன்னாள் தமிழ்த்துறை தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்)
**இ.குமரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்)
**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்** (இணைப்பாளர் மொழிபெயர்ப்பு யாழ்.பல்கலைக்கழகம்)
**மறவன்புலவு சச்சிதானந்தம்** (முன்னைநாள் ஆலோசகர் ஐக்கிய நாடுகள் சபை)
மகேந்திரலிங்கம் (அன்னா நிறுவன இணுவில் கிளை முகாமையாளர்)
**நூல் வெளியீட்டுரை:**
**கவிஞர் சோ.பத்மநாதன்** (முன்னாள் அதிபர் - பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை)
**நூல்வெளியீடு - பிரதம விருந்தினர்**
**முதல் பிரதி பெறுபவர்:** S.P.சாமி அவர்கள் (ஸ்தாபகர் நொதேன் கொன்பிற்றல் லிமிட்டெட் திருநெல்வேலி)
**கௌரவ பிரதி பெறுபவர்:**
**இரத்தினகோபாலன்** (பெரியண்ணை) ஆசிரியர்
கானமயில்நாதன் (பிரதம ஆசிரியர் உதயன் பத்திரிகை)
ஆறுமுகநாதன் (ஒப்பந்தக்காரர் தெல்லிப்பழை)
திருமதி. அ.சிறிகாந்தலட்சுமி (நூலகர் யாழ்.பல்கலைக்கழகம்)
**நூல் நயப்புரை:**
**திருமதி கோகிலா மகேந்திரன்** (முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்)
**தொகுப்பாசிரியர் உரை:**
**சைவப்புலவர் க.செல்லத்துரை** ஆசிரியர்
**சிறப்புரை: பேராசிரியர் அரங்க ராமலிங்கம்**
(முன்னாள் விரிவுரையாளர் சென்னை பல்கலைக்கழகம்தமிழ்த்துறை)
**ஊழியர் கௌரவிப்பு**
**ஏற்புரை ந.திவாகரன்**
**நன்றியுரை: செல்வன் ம.மதிதயனன்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். விழாக்குழு**


# வேலை வாய்ப்பு

நொதன் சென்றல் வைத்தியசாலைக்குச் சந்தைப்படுத்தல் (Marketting) கடமைக்குப் பின்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் நேரடியாகவோ தபால்மூலமாகவோ 22.04.2015 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். 20 வயது முதல் 45 வயதுவரையுடையவராகவும், சந்தைப்படுத்தல் சேவையில் தகுதியும், முன்அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். (Medical Rep) ஆக கடமையாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பணிப்பாளர்,
நொதேன் சென்றல் வைத்தியசாலை,
542, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நாகையா இராமலிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: அட்டமி

பிறப்பு 03.02.1944 இறப்பு 23.03.2014

நீங்கள் இவ் உலகைவிட்டு நீங்கி
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம்மைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

குடும்பத்தினர்.
குப்பிளான்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அமரர்

**சதாசிவம் சிவஞானசுந்தரம்**



தோற்றம் 11.08.1947

மறைவு 16.03.2015

கடந்த 16.03.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.04.2015) திங்கட்கிழமை காலை 5.30 மணியளவில் தும்பளை முத்துமாரியம்மன் அந்தியேட்டி மடத்திலும் அன்றைய தினமே அன்னாரது இல்லத்தில் 10.30 மணியளவில் சபிண்டீகரண வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத் தருணம் தாங்கள் மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு தவறவிடப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்களும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிராமண வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பண்டாரி வேலாயுதம்**

(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, வேரற் கேணியடி)

அன்னை மடியில் 31.03.1923 அம்மன் மடியில் 12.04.2004

திதி: 12.04.2015

தலை நிமிர்ந்து வாழ வைத்த தந்தையே!
இந்த நாளில் தலை சாய்த்து வணங்குகிறோம்
ஆண்டுகள் பதினொன்று ஆகிவிட்டதே அப்பா!
ஆனாலும் நீங்காத நினைவுகளை இதயத்தில் சுமந்து
நீர் ததும்பும் விழிகளுடன் நினைவு கூருகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித்தலைவர்
திருமதி ரேணுகா குபேரநாதன் அவர்களின்
அன்புமாமியார்

**திருமதி மீனாட்சி செல்லத்துரை**

அவர்கள் 07.04.2015 அன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(58714)(45.7.3)

ஆசிரியர் நலன்புரி கழகம், யா/இணுவில் மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி மீனாட்சி செல்லத்துரை**



எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
உப அதிபர்
திருமதி லோகேஸ்வரி சுபேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார் 07.04.2015
செவ்வாய்க்கிழமை

இரவு சிவபதமடைந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், (58757)(45.7.3)
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம்
**இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை**



எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
கி.ஜெய்ரமணன் அவர்களின் அன்புத் தந்தையார்
08.04.2015 அன்று புதன்கிழமை
சிவபதமடைந்தார். அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், (58768)(45.7.3)
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சரஸ்வதி மயில்வாகனம்**

(கச்சாய்தெற்கு, கொடிகாமம்)



பிறப்பு 10.09.1928 இறப்பு 24.03.2014

திதி: பங்குனிப் பூரணை
கடந்த நவமி

ஆண்டொன்று ஆனதுவே - துயர் ஆறவில்லை இன்னும்
நீங்கள் இன்றி நாமின்று நிர்க்கதியாய்த் தவிக்கின்றோமே
வாராயோ இன்னொரு கால் எம்மோடு வாழ்வதற்கு
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## 24ஆம் ஆண்டு நினைவலைகள்



சிவனாய் 01 . 01 . 1939

சிவமாய் 12 . 04 . 1991

**திருமதி கோணேஸ்வரி துரைராஜா**

திதி: திரயோதசி

அன்பின் திருவுருவாய் அவனியில் பெருமகளாய்
எமது உள்ளத்தில் நிலைபெற்ற தெய்வமே!
இப்புவியில் நாங்கள் உள்ளவரை எங்கள் உள்ளங்களில் உம் நினைவு
என்றும் அழியாது அம்மா! எங்கள் வாழ்க்கையை அருகிருந்து
பார்க்காமல் ஓடி மறைந்தாய் அம்மா!
நித்தம் நித்தம் கண்ணீர் மல்கின்றோம் அன்புத் தாயே!

95, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## மைத்திரி, விக்கியின் ஒளிப்படங்களை காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்து

பருத்தித்துறை, ஏப். 12

வடக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக் களங்கள் மற்றும் அமைச்சு அலுவலங்களில் ஜனாதிபதி மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோரின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்து மாறு வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆர். எஸ். துரைராஜா கேட்டுள்ளார்.

மேலும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான படங்களின் தேவைப்பட்டியலையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் அறிவித்துள் ளார். (ஒ-288)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப். 12

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் முன் னாள் ஊழியர் ஒன்றியத்தின் கலந்துரையாடல் மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி யில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தில் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை யின் முன் னாள் பணியாளர்களை குடும்பத்துடன் கலந்து கொள்ளுமாறு காங்கேசன் சிமெந்துத் தொழிற் சாலை முன்னாள் ஊழியர் ஒன்றியத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ-10)

## விளையாட்டு விழா

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. பாலர் பாடசாலை மைதானத்தில் விநாயகர் விளையாட் டுக் கழகத்தின் செயலாளர் செ.ருவிந்தன் தலை மையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தின ராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் சு.சிவானந்தம், தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் த.சுபத்திராதேவி, கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கைதடி பொதுச்சுகாதார பரி சோதகர் து.கண்ணதாசன், கிராம சேவையாளர் திருமதி.ரி.பவித்திரா, விநாயகர் சனசமூக நிலைய செயலாளர் நி.கரன் ஆகியோரும் கலந்துகொள் வுள்ளனர். (ஒ-10)

## 'மலரட்டும் புது வசந்தம்' நாளையே நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து "மலரட்டும் புது வசந்தம்" என்ற கலாசார விழாவை ஏற் பாடு செய்திருந்தது. இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடை பெறவிருந்த இந்த விழா தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை 13ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளதாக யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கலாசார விழாவுக்கு வடமாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தின ராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஒ-10)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 12

2014 மார்கழி மாதம் நியூ ஈரா பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளை யாட் டுத்துறை, அமைச்சர் த.குருகுலராசாவும் கௌரவ விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந் தினர்களாக வலயக் கல்விப் பணிப்பாளர் ச.நந்தகுமார், சு.கிருஷ்ணகுமார், ச.சந்திரராஜா மற்றும் யாழ். கல்வி வலயப் பணிப்பாளரும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (ஒ)

# மரண அறிவித்தல்



## திருமதி ஞானரட்ணம் தம்பிஐயா

(இளைப்பாறிய ஆசிரியை, அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி)

*18.05.1921 - 10.04.2015*

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கல்லுவம் மற்றும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானரட்ணம் தம்பிஐயா 10.04.2015 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா (Income Tax Asser) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்), அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அழகரட்ணம், மேரி, குணரட்ணம், ரோஸ், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (11.02.2015) சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் ஆராதனை நடைபெற்று கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது

தகவல்: விமலா நல்லையா

011 4804494 No.70/ 2, Allen Avenue, Dehiwala

## கோடைத் திருவிழா நாளை மானிப்பாயில்

யாழ்ப்பாணம், ஏப். 12

ஐங்கரன் மீடியா சொலூஷன் ஏற்பாட்டில் யாழ் கோடைத் திருவிழா நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு நாளைதிங்கட்கிழமைகாலை 8 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்துகொள்ளலாம்எனஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கைதடி, ஏப். 12

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொது கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்திலே நடைபெற இருப்பதாக பாடசாலையின் அதிபர் சி.பவளகுமாரன் அறிவித்துள்ளார். கூட்டத்தில் பழைய மாணவர்கள்அனைவரையும்கலந்து கொள்ளுமாறும் அதிபர் கேட்டுள்ளார். (ஒ-288)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து சின்னப்பாபிள்ளை

(ஓய்வுபெற்ற பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர்)



யாழ்ப்பாணம், இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சின்னப்பாபிள்ளை 09.04.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கண்ணகி தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், ரஞ்சிதமலர், சரோஜாதேவி, (இடைக்காடு), காலஞ்சென்ற முத்தாம்பிகை (கனடா), இந்திராணி (கனடா), கிருஷ்ணகுமார் (இடைக்காடு ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரன் (இளைப்பாறிய சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (RDA) இடைக்காடு), செந்தில்குமரன் (கனடா), விஜிதாம்பரநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், சுஜர்ஷன் ( QS- டுபாய்), சிவாஜினி, சுதாகினி, வீரசிவாகரன், சினேகா, ரீபியன், பெனிஷா, சியாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.04.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 021 321 5400/ 077 900 4329 (98763) (40.7.8)

தகவல்: குடும்பத்தினர்

## திருநாவுக்கரசு கிருஷ்ணகுமார்

(ஆதிவிநாயகர் ஓட்டோ உரிமையாளர்-
(V.P.Park, மக்கள் வங்கி அருகில், வவுனியா)



சரவணைகிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கிருஷ்ணகுமார் 10.04.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - பூமணி தம்பதியரின் ஏக புதல்வனும், காரைநகரைச் சேர்ந்த காசிப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கலாஜோதியின் அன்புக் கணவரும், பிரதீபா, கிரிஜா, மதுஷா, திஷானி (மாணவிகள் - வவு/ சைவப்பிரகாச மகளிர்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஏகநாயகி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் பாக்கியலெட்சுமி, ரதிதேவி, திருவருட்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் செல்வராசா (முனியப்பர் ஓட்டோ), குணராசா (லண்டன்), சிறி, புஸ்பராசா குகன், (வைரவப் புளியங்குளம் ஓட்டோ), காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் சிவகுரு நாதன், தேவராசா, சைன்ராசா (ராசன் ஓட்டோ) செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், குமாரசாமி, சுமதி, ரஞ்சனாதேவி, வதனி, சிவாந்தினி, கிருஷ்ணவேணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வியாசர் வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்
077 4596202

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: கடந்த இரண்டு தினங்களாக இருந்த அசதி, சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக் கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**: சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தினர் சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வார்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**மிதுனம்**: உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரங்களில் அரவணைப்பு அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**: ராஜதந்திரமாகச் செயற்பட்டு சில காரியம் முடிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அதிகாரப்பதவியில் இருப்பவர்களின்நட்பு கிடைக்கும்.உத்தியோகத்தில்மதிப்புக்கூடும்.

**சிங்கம்**: உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். உத்தியோகத்தில் திறமைகள் வெளிப்படும்.

**கன்னி**: எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**துலாம்**: பூர்வீக சொத்துப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்புக்கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**விருச்சிகம்**: நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு**: சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**மகரம்**: விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**கும்பம்**: தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.பெற்றோரின்ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்தியோகத்தில் புது முயற்சிகள் பலிதமாகும்.

**மீனம்**: உறவினர், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

## நாளை

**பங்குனி-30
திங்கட்கிழமை
13.04.2015**

திதி: நவமி பி.ப.02.45 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.இ.01.22வரை
சுபநேரம்: 12.06-01.36 வரை
இராகுகாலம்: 07.36-09.06 வரை

# மரண அறிவித்தல்

## செல்லையா குஞ்சிதபாதம்

(இளைப்பாறிய ஆசிரியர் - திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை)



விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குஞ்சிதபாதம் 09.04.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், மகேஸ்வரி மற்றும் தில்லைநாதன், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தணிகாசலம், பூவிலிங்கம் மற்றும் குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான இராசையா, மயில்வாகனம், சிவக்கொழுந்து மற்றும் இராசேந்திரம், செங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகுமார் (ஆஸ்திரேலியா), சிவகுமார் (U.K), ரூபகுமார் (U.K),சுகிதா (ஆசிரியை கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), செந்தில்குமார் (கொமர்ஷல் வங்கி -வவுனியா), சுரேஸ்குமார் (முல்/பெரிய புளியங்குளம் GTMS), லவீந்திரகுமார் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனா (ஆஸ்திரேலியா), கார்த்திகா (U.K),கேமராகினி (U.K), பரமேஸ்வரன் (பிரதி அதிபர் - யா/இந்துக்கல்லூரி), சுபாசினி (ஆசிரியை - பாணந்துறை அல்ப்ஃறியா மத்திய கல்லூரி), தயாளினி (ஆசிரியை - யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), கெசந்திலி (U.K) ஆகியோரின் அன்பு மாமனும், ஆர்த்திகா, சைனுகா, அனுஸ்கா, வருண், துஷான், லகுஷியா, வாகினி, வாசகி, பரணி, சாயீஷன், ஸ்ரீகரி, பூர்வஜன், அம்சனா, அபீசனா, அர்ச்சனா, ஹரிணி, அருணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலடி, நல்லூர், வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (12.04.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலடி,
நல்லூர் வடக்கு.
தொ.பே. 021 222 4855

தகவல்: குடும்பத்தினர்.

## நடனப் போட்டி கைதடியில் இன்றிரவு

கைதடி, ஏப். 12

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் மாபெரும் நடனப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு கைதடி வளர்மதி கலையரங்கத்திலே மிகக் கோலாகலமாக நடைபெற இருக்கின்றது. இப்போட்டியிலே இலங்கையில் புகழ் பெற்ற மேலத்தேய நடனத்தை பயின்ற ஆண், பெண் நடனக் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளனர் என்பதுடன் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு பெருந்தொகை பணப்பரிசில்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15



ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் இரத்தினம் (கனடா)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினம் 09.04.2015 கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம்- இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (ஹற்றன்), கிருஸ்ணபிள்ளை (கொழும்பு), மற்றும் நாகபூசணி (வவுனியா) நீலாம்பிகை (கல்வி யங்காடு) குணபூசணி (சாவகச்சேரி) ஆகியோரின் சகோதரனும், சொரூபராணி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் கனகலிங்கம், துரைராசா, வேணி ஆகியோரின் மைத்துனரும், மாலினி, றஞ் சன் (கனடா), விமலினி, மனோகரன் (கனடா), நந்தினி (கனடா) ஆகி யோரின் அன்புத் தந்தையும், கஜான், சஜித், மதுசா, கிதுசன், தருண், விஸ்ணு, தூயவன், இனியவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2015) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலவர் வீதி, கல்வியங்காடு,
021 223 1108

தகவல் :
சகோதரி சின்னம்மா.

### முத்தர் பரமலிங்கம்



புளியங்கூடல் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் பரமலிங்கம் நேற்று (11.04.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தர்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், நாகபூசணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லம்மா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-கண்ணம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வர்களான இராசரெத்தினம், பார்வதி மற்றும் திருச்செல்வம், காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் மைத்துனரும், கருணாநந்தன், விமலாதேவி, விநாயகமூர்த்தி, சண்முகமூர்த்தி, உமாதேவி, நிர்மலாதேவி, சிவமூர்த்தி, கௌரீஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்பழகி, கோணேசபிள்ளை, ரேவதி, ராதிகா, சிறிவாசகன், சந்திரசேகரம், தர்மினி, தேவநேசன், ஜெகன் மோகன் ஆகியோரின் அன்பு மாமனும், துசிதா, துலக்சன், அமலன், காலஞ்சென்ற தாரணி மற்றும் நிருந்தன், தர்ஷிகா, ரஜிதா, நிருஷா, அபிஷா, ரஜிவன்,விஷ்ணுகா, மயூரன், கம்சன், அபிநயா, லக்சனா, தீபகா, அதீசன், சுவீட்சன், லதீசன், யோகிஷா, தசாகன், காருண்யா, தாரங்கன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2015) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் புளியங்கூடலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சுருவில் இந்து மயானத் தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல் : குடும்பத்தினர்.
077 87 80 334

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமி வேலுப்பிள்ளை

காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும் கள்ளித்தெரு செம்பாட்டை வசிப்பிடமாகவும், தற்போது 64/1 பொற்பதி வீதி, கெக்குவில் கிழக்கு கொக்குவிலில் வசித்து வந்தவருமான திருமதி சிவகாமி வேலுப்பிள்ளை நேற்று 11.04.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலாபேரம்பலம்-சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிமுத்துஉவேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், உமாபதி, செல்வராசா, சாரதா தேவி, சகுந்தலாதேவி, தியாகராசா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, ஆனந்தவசந்தகுமாரி, ஞானசுந்தரம், காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் புஸ்பராணி, நவரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக பி.ப. 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

077 844 9975
077 609 8688

### திருமதி சிவபாக்கியம் குமாரசாமி



நாகம்மாள் கோயிலடி அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் குமாரசாமி நேற்று (11.04.2015) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை (சபாபதி வாத்தியார்)- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், திருமதி. சி.நாகேஸ்வரி, கு.சிவசுப்பிரமணியம், பா.ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், வி.சிவஞானபோதன் (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி. சி. ஜெயசக்தி (நோர்வே), ஞா. பாசலச்சந்திரன்(ஞானம் அண்ணை) ஆகியோரின் மாமியும், திருமதி. சி. சுகந்தி (கனடா), சி. தனஞ்சயன்(அதிபர், வட்டு இந்து கல்லூரி), திருமதி ஜெ. சுகன்யா (ஆசிரியை, அராலி வடக்கு, அ.மி.த.க. பாடசாலை),திருமதி கி. சுஜித்தா (ஆசிரியை, யாழ்ரன் கல்லூரி), சி. ராம்நாத் (நோர்வே), பா.பிரியதர்சன், திருமதி. பி.கேமப்பிரியா (கனடா) ஆகியோரின் அம்மம்மாவும், டர்சி, யாழினி, கேசிதா, நிதுஷாரன், பிரிந்தவி, டிராகவன், தூறா, லீவ, ஏவன் ஆகியோரின் பூட்டியும், சிவபரமானந்தா (கனடா), நிசா (சுன்னாகம் மைலணி வித்தியாசாலை, அதிபர்) ஜெயக்குமார் (மானிப்பாய் தபால் கந்தோர்), கிருபாகரன் (ஆசிரியர், யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஈதா போள்க் (நோர்வே), பிரதீபன்(கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2015) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, 9.00 மணி யளவில் பூணாவோடை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0776544621

தகவல் : குடும்பத்தினர்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகை விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர் (ஆண்கள்) தேவை

லலிதாஜுவலரிஸ்
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2863

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27.05.1973 மறைவு: 11.04.2011

### கிருபானந்தன் சுமனேஸ்வரி

நீதி: அட்டமி

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரில் அஞ்சலிக்கின்றோம்
ஆண்டுகள் நான்கு ஆனபோதும்
ஆறவில்லை எம்மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்.

[illegible] குடும்பத்தினர்.

## இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2015/16

இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகக்கற்கைகள் துறையினரால் பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கைநெறிகள் | அனுமதித் தகைமைகள் | மொழி | கற்கை நெறிக்கான காலம் | விண்ணப் பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி (BA in Social Sciences) | க.பொ.த உயர்தரத்தில் (பழையபாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்தி **அல்லது** க.பொ.த உயர்தரத்தில் (புதியபாடத்திட்டம்) மூன்றுபாடங்களில் சித்தி **அல்லது** இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் யாதாயினும் அத்திவாரக் கற்கைநெறிச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் | ஆங்கிலம் | 3 வருடங்கள் | 24.03.2015 - 30.04.2015 |
| சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறி (Certificate in Social Sciences) | 18 வயதினைப்பூர்த்தி செய்த அனைவரும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் | தமிழ் | 2 வருடங்கள் | 24.03.2015 - 24.04.2015 |
| இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development) | க.பொ.த உயர்தரத்தில் (பழையபாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்தி **அல்லது** க.பொ.த உயர்தரத்தில் (புதியபாடத்திட்டம்) மூன்றுபாடங்களில் சித்தி **அல்லது** இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் யாதாயினும் அத்திவாரக் கற்கைநெறிச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் | தமிழ் | 2 வருடங்கள் | 24.03.2015 - 30.04.2015 |
| அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி (MA in Development Studies and Public Policy) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்டபட்டம் அத்துடன் அபிவிருத்தித் துறையில் இரண்டுவருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் | ஆங்கிலம் | 2 வருடங்கள் | 24.03.2015 - 24.04.2015 |

இக்கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் கற்கைநிலையங்களில் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி,கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டிவீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 – 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4 ஆம் வட்டாரம், இரணைப்பாலைவீதி, புதுக்குடியிருப்பு | 076 - 6596615 |

மேலதிக விபரங்களுக்கு உதவிப்பணிப்பாளர், இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
இலங்கைத்திறந்தபல்கலைக்கழகம்

## போராளிகளின்

உதவ வேண்டிய கடமை, கடப்பாடு எமக்கு உண்டு. அவர்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம் என்று வெள்ள வத்தை நித்திய கல்யாணி நகை மாட உரிமையாளர் ஜெயராஜ் தெரிவித்தார்.

வடக்கிலுள்ள முன்னாள் போராளி களுக்கு உதவித் திட்டங்கள் வழங் கும் நிகழ்வு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்றுமுற்பகல் இடம் பெற்றது. வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலை மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்களுக்கு உதவுவதன் மூல மாக நாம் கொடையாளிகள் ஆகி விடமுடியாது. அது எமது கடமை. மக்கள் சேவையே மகேசன் சேவை. நாட்டில் உள்ள மக்கள், வெளிநாடு வாழ் எமது மக்கள் சுகமாக நிம்மதி யாக வாழ்கிறார்கள் என்றால் அதற்கு நீங்கள் (முன்னாள் போராளிகள்) செய்த தியாகம், அதற்காகப் பட்ட கஷ்டம் தான் காரணம். நாம் அங்கு சுகமாக வாழ்கிறோம். எனவே நாங்கள் உங்களுக்கு உதவக் கட மைப்பட்டுள்ளோம். முன்னர் பல ருக்கு உதவியிருந்தாலும் இப்போது தான் உங்களுக்கு உதவுகிறோம்.

உங்களுக்குக் கடமைப்பட்ட இன் னும் பலரைச் சேர்த்து உங்களுக்கு உதவுவோம். எதிர்காலத்தில் இது தொடரும். தனிக் குடும்பப் பெண் களுக்கு, பாடசாலைக் கல்விக்கு உதவ வேண்டும். நாம் கல்வியில் முன்னேறுவோமாயின் வேறெது வும் தேவையில்லை –என்றார்.

**ஆலயங்கள்**
**உதவ வேண்டும்**

வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் அங்கு உரை யாற்றுகையில்,

வசதி படைத்த சமூக அலகுகளில் ஆலயங்களும் பங்கு வகிக்கின்றன. ஒரு ஆலயத்துக்கு அதிகமாகக் கிடைக்கும் பணம் மீளவும் மக்க ளுக்கே சென்றடைய வேண்டும் என்று தெல்லிப்பழை துர்க்காபுரம் தங்கம்மா அப்பாக்குட்டி முன்னர் கூறியிருந்தார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தினமும் புதன்கிழமை சந்திப்புக்க ளில் பல பிரச்சினைகளை முன் வைக்கின்றனர். அவர்களுக்கு உதவ வேண்டும். மக்களை மையப்படுத்தி யதாக வர்த்தக நிறுவனங்கள் உள் ளன. தற்போது குழுமச் சமூகப் பொறுப்புணர்வு என்ற தொனிப் பொருளில் வர்த்தக முனைப்பு முன் னேறி வருகிறது. அதனூடாக அவர் கள் உதவிகள் புரிகிறார்கள் என்று தெரிவித்தார்.

வெள்ளவத்தை நித்திய கல்யாணி நகைமாட உரிமையாளர், வெள்ள வத்தை மயூரபதி தேவஸ்தானம் என் பன உதவிப்பொருள்களைவழங்கின. யாழ். பல்கலை மாணவன் ஒருவ ருக்கு மடிக்கணினி வழங்கப்பட்ட தோடு பலருக்குத் தொழில் ஊக் குவிப்புக்காக காசோலைகளும் வழங்கப்பட்டன. சிலருக்கு மருத் துவ உதவிக்காகக் காசோலைகள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர் களுக்கு, மாணவர்களுக்குச் சைக் கிள்கள், தையல் இயந்திரங்கள், சமையலறைப் பொருள்கள், பாட சாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், பெண்களுக்கு சேலைகள் என்பனவும் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் நகைமாடத்தைச் சேர்ந்த ஜெயராஜ், மயூரபதி ஆல யத்தின் சுந்தரலிங்கம், வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், வட மாகாண அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், முதலமைச்சரின் செயலாளர், உள் ளூராட்சி அமைச்சின் செயலாளர், வேம்படிபாடசாலைஅதிபர்உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த–4)

## 85 வீத

இதேவேளை, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங் கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம், சுன்னாகம் பிரதே சத்துக் கிணறுகளில் 73 சதவீதமான கிணறுகளில் கழிவு ஒயில் மாசு இருப்பதாகத் தெரிவித்திருந்தார். தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப் புச் சபையினால் மேற்கொள்ளப் பட்ட ஆய்விலேயே அவ்வாறு குறிப் பிடப்பட்டிருந்ததாக அவர் நாடாளு மன்றத்தில் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டிருந்தார்.

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் கழிவு எண்ணெய் படிந்துள்ளதா என்பதை ஆராய்வ தற்குத் தேசிய நீர்வழங்கல் வடிகா லமைப்புச் சபையினால் நிபுணர் கள் குழுவொன்று நியமிக்கப்பட் டது. 150 கிணறுகளின் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில், அவற்றில் 109 கிணறுகளில் (73 வீதம்), நியம அளவுக்கு அதிகமான எண்ணெ யும், கிறீசும் கலந்திருப்பது தெரிய வந்துள்ளது.

7 கிணறுகளில் (4 வீதம்) எண் ணெய் கலப்பு தரநியமங்களுக்கு குறைவாக உள்ளது. 34 கிணறுக ளில் (23 வீதம்) எந்தக் கலப்பும் இல்லை என்பது உறுதியாகியுள் ளது. இந்த எண்ணெய்ப் படிம மாசு ஏனைய கிணறுகளுக்கும் பரவி வருகின்றது.

மேற்படி சுன்னாகம் பகுதியில் உள்ள மின் உற்பத்தி நிறுவனத்தைச் சுற்றி யுள்ள 2.5 கிலோ மீற்றர் பிர தேசங்களில் இந்த பாதிப்பு உள்ளது. இதனால், மக்களுக்கு தினமும் ஆறு நீர்த்தாங்கிகளின் மூலம், குடும்ப மொன்றுக்கு 250 லீற்றர் நீரை வழங்கி வருகின்றோம். இதற்கான செலவை நாம் அந்த மின்சார நிறு வனத்திடமே பெற வேண்டியுள்ளது. அவர்களால் தான் இந்தப் பிரச் சினை உருவானது. இந்த நிறுவனத் திற்கு எதிராக வழக்கு தொடரவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சுன்னாகம் பகுதியில் உள்ள கிண றுகளில் கழிவு எண்ணெய் – கிறீஸ் படிமங்கள் இருப்பதனால் மக்கள் அந்தக் கிணற்று நீரை அருந்தக் கூடாது. அத்துடன் நாம் எமது ஆய் வுகளை இன்னும் விரிவுபடுத்தியுள் ளோம். அந்தப் பகுதிகளிலுள்ள சகல கிணறுகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளோம். இதற் காக மக்களிடமிருந்து பணம் எது வும் அறவிடுவதில்லையெ னவும் தீர்மானித்துள்ளோம் – என்று அமைச் சர் ஹக்கீம் குறிப்பிட்டுள் ளார்.

இருப்பினும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 85 சதவீதமான கிணறுகளில் எந்தக் கழிவு ஒயில் பாதிப்பும் இல்லை என்று அறிக்கை வழங்கப்பட்டது. இன்னமும், 400 கிணறுகள் வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண் டியுள்ளது. அவற்றை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் குடிதண்ணீர் விநியோகம் இடர் முகாமைத்துவ அமைச்சி னால் வழங்கப்பட்ட நிதியில் செயற்படுத் தப்பட்டு வருவதாகவும் அரச அதி பர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இதேவேளை, வலி.வடக்குப் பிர தேச சபைத் தவிசாளர் சோ.சுகிர் தன் தெரிவிக்கையில், மக்களது கிணறுகளில் மாசு தொடர்பில் பரிசோதிப்பதற்கு எம்மிடம் ஆயி ரத்து நூறு ரூபாவும், போக்குவ ரத்துக் கொடுப்பனவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை யினால் அறவிடப்பட்டது என்று தெரிவித்தார். (த–5)

## காணிகள் எங்கே

முடியாமல் அந்தரித்தனர்.

வலி.வடக்கில் 7 கிராம சேவை யாளர் பிரிவுகள் நேற்று விடுவிக் கப்பட்டன. விடுவிக்கப்பட்ட ஒவ் வொரு கிராம சேவையாளர் பிரி வும் பகுதியாக விடுவிக்கப்பட்ட மையினால், இராணுவத்தினர் எஞ் சிய நிலத்தில் முகாம் அமைத்திருந் தனர். இராணுவ முகாம்கள், பல பிரதான வீதிகள், குச்சொழுங்கை களை ஊடறுத்து – மறித்து – அமைக் கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் தமது காணிகள் விடுவிக்கப்பட் டிருந்தாலும் செல்ல முடியாமல் அந்தரித்தனர்.

குறிப்பாகக் காங்கேசன்துறை தெற் கில் 109 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக் கப்பட்டிருந்தது. ஆனாலும், அந்தக் கிராமத்துக்கு தையிட்டியால் செல் லும் வீதியை மறித்து இராணுவத்தி னர் முகாம் அமைத்திருந்தனர். இதன் காரணமாக, காணி விடுவிக் கப்பட்டும் அதனைச் சென்று பார்ப்ப தற்கு மக்கள் சிரமப்பட்டனர். ரயில் பாதையினால் நீண்ட தூரம் சென்று, இராணுவத்தின் வேலியைச் சுற்றி வந்தே அவர்களது காணிகளைப் பார்வையிட்டனர்.

25 வருடங்களாக மக்கள் நடமாட் டம் இல்லாமல், பல வீதிகள் தூர்ந்து போயிருந்ததுடன் பற்றைகள் மேவி அவை இருந்த இடம் தெரி யாமல் அழிவடைந்திருந்தன. சில இடங்களில் இராணுவத்தினர் வீடு களை இடித்து தரைமட்டமாக்கி எல் லாவற்றையும் ஒன்றாக்கியிருந்த தால் அடையாளங்களைக் காண்ப தில் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டனர். (த–5)

## 20 வீதமே

உரும்பிராயிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 100 குடும்பங்கள் மீளக் குடியமர்வதற் கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் குற்றம் சுமத்தினார்.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 423 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இவ் வாறு விடுவிக்கப்பட்டுள்ள காணிக ளில், மக்கள் குடியிருப்புக்கள் மிகக் குறைவானது. அண்ணள வாக 20 சதவீதத்துக்கும் குறைவான காணிகளே மக்கள் குடியி ருப்புக்கு உரியவை. எஞ்சியவற் றில் சிறு பகுதி தோட்டக் காணிக ளாகவும் அமைந்துள்ளன.

வறுத்தலைவிளான் கிராம சேவை யாளர் பிரிவில் 46 ஏக்கரில் இரா ணுவத்தினர் முகாம் அமைத்துள் ளனர். இந்த நிலப்பரப்பினுள் 100 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள்உள்ளடங்குகின்றன.உரும் பிராயில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக் களின் காணிகளே இவை. அந்த மக்களின் மீள்குடியமர்வு இதனால் மறுக்கப்பட்டுள்ளது.

மக்கள் அடர்த்தியாகக் குடியமர்ந்த கட்டுவன், தையிட்டி தெற்கு ஆகிய பிரதேசங்களில் சிறு துண்டுக் காணி கள் விடுவிக்கப்பட்டமையால், பெரும்பாலான மக்கள் ஏமாற்றம டைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட் டினார். (த–5)

## காணிகள் துண்டு

கிராம சேவையாளர் பிரிவில், 109 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இன்னமும் 113.3 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினர் வசம் உள்ளது. பளை வீமன்காமம் வடக்கு (ஜே/ 236) கிராம சேவையாளர் பிரி வில், 55 ஏக்கர் நிலப்பரப்பு விடு விக்கப்பட்டுள்ளதுடன் இன்னமும் 98.4 ஏக்கர் நிலப்பரப்பு இராணு வத்தினர் வசம் உள்ளது. பளை வீமன்காமம் தெற்கு (ஜே/237) கிராம சேவையாளர் பிரிவில், 62 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப் பட் டுள்ளதுடன் இன்னமும் 36.8 ஏக்கர் இராணுவத்தினர் வசம் உள்ளது. தையிட்டி தெற்கு (ஜே/250) கிராம சேவையாளர் பிரிவில் 17 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இன்ன மும் 254.7 ஏக்கர் இராணுவத்தினர் வசம் உள்ளது.

கட்டுவன் (ஜே/238) கிராம சேவை யாளர் பிரிவில் 10 ஏக்கர் மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 237 ஏக்கர் இராணுவத்தினர் வசம் உள்ளது. தென்மயிலை (ஜே/240) கிராம சேவையாளர் பிரிவில் 26 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர் வசம் 226 ஏக்கர் உள்ளது. வறுத்தலைவிளான் (ஜே/ 241) கிராம சேவையாளர் பிரிவில் 118 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ள துடன் இராணுவத்தினர் வசம் 104.3 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது.

வளலாய் (ஜே/284), பலாலி தெற்கு (ஜே/252) கிராம சேவையாளர் பிரிவில் 147 ஏக்கர் நிலப்பரப்பும் நேற்றையதினம் மக்கள் பாவ னைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை நேற்றுக் காலை பெருமளவான மக்கள் பார் வையிட்டனர். இருப்பினும், மக்க ளின் குடியிருப்புக் காணிகள் பெரும்பாலானவை விடுவிக்கப்பட வில்லை. முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதனால் பார்வையிட வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும் பினர்.

பல கிராம சேவையாளர் பிரிவுக ளில் ஒவ்வொரு காணித் துண்டு கள் மாத்திரம் விடுவிக்கப்பட்ட மை யினாலேயே, மக்கள் காணிக ளைப் பார்வையிடலாம் என்று ஆவ லு டன் வந்து கவலையுடன் திரும்பி னர். (த–5)

## வீட்டை

அவர் தலைச் சுற்று வந்து வீட்டி லேயே தங்கி விட்டார். காணி யைப் பார்ப்பதற்கு வர மறுத்து விட்டார் என்று அவரது மனைவி தெரிவித் தார்.

பளை வீமன்காமம் வடக்கில், மக் கள் காணிகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர். முகாம் அமைப்பதற்காக அந்தப் பகுதிகளி லுள்ள வீடுகளை இராணுவத்தினர் தரைமட்டமாக்கியுள்ளனர். இந்த நிலையில் நேற்றைய தினம் பளை வீமன்காமம் வடக்கில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டது. அதனைப் பார் வையிடுவதற்கு மக்கள் சென்றனர். அப்போது அந்தப் பகுதியில் சு.கந்த சாமிப்பிள்ளை (வயது–74) என் பவரது வீடு இடித்து தரைமட்டமான நிலையில் இருந்துள்ளது. இதனைக் காலையில் வந்து குறித்த பகுதி யைப் பார்வையிட்ட ஒருவர், வீடு தரைமட்டமாக்கப்பட்ட செய் தியை கந்தசாமிப்பிள்ளைக்குத் தொலை பேசியில் தெரிவித்துள் ளார். இத னையடுத்து அவர் தலைச் சுற்று வந்து மயக்கமடைந்துள் ளார்.

அவர் காணியைப் பார்வையிடு வதற்குத் தயாரான நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதன் பின்னர், அவரது மனைவியே காணியை வந்து பார்வையிட்டார். அவர்களது காணி இராணுவத்தின் முகாம் அமைந்துள்ள பகுதியில் இருப்பதுடன், அவர்களது வீட்டு அடித்தளத்தை மாத்திரம் மிச்சம் வைத்து அதன் மேல் அவர்கள் முகாம் அமைத்துள்ளனர்.

**2011 ஆம் ஆண்டின் பின்**
**இடிக்கப்பட்ட வீடுகள்**

கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தப் பகு தியிலுள்ள ஆலயங்களில் பூசை மேற்கொள்வதற்கு இராணுவத் தினர் அனுமதித்து இங்கு வந்திருந் தோம். அதன்போது, எமது வீடுகள் கூரைகள் மற்றும் கதவு, யன்னல் நிலை என்பன இல்லாமல் காணப் பட்டன. தற்போது வந்து பார்க்கும் போது, வீடே இல்லாமல் எல்லா வற்றையும் தரைமட்டமாக்கியுள் ளனர். எமது வீடுகள் இருந்த இடங் களில் அவர்கள் முகாம் அமைத் துள்ளனர் என்று மக்கள் குறிப்பிட் டனர். (த–5)

## ஓகஸ்டிலேயே

பொதுத் தேர்தல் நடைபெறும் என அரசியல் வட்டாரங் களில் இருந்து அறியமுடிகிறது.

புதிய தேர்தல்முறை உருவாக்கத் துக்கு காலஅவகாசம்தேவை என்ப தாலேயே, ஓகஸ்டில் தேர்தலை நடத்துவதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தொகுதிவாரி மற்றும் விகிதாசாரமுறை உள்ளடங்களாக புதிய முறையிலேயே தேர்தல் நடைபெறும் எனவும் மேற்படி வட் டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

## இலங்கைத் தீவில்

வாழும் – புலம்பெயர்ந்த மக்களுக்கு, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சார்பிலும், அமெரிக்க மக்களின் சார்பிலும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி வாழ்த்துச் செய்தி வெளியிட் டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர், கடந்த சில மாதங்களில், இலங்கையில் ஏற்பட் டுள்ள அசாதாரணமான சாதக மான மாற்றங்கள், இலங்கைத் தீவில் உள்ள மக்கள் நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் அமைதிக் காக ஒன்றுபடும் புதிய வாய்ப்பு களை அளிப்பதாக இந்தப் புத் தாண்டு அமைந்துள்ளது.

வளமான – ஒன்றுபட்ட – ஜனநா யக, இலங்கையைக் கட்டியெழுப் பும் உங்களின் பணிகள் தொடரட் டும். புத்தாண்டு மகிழ்ச்சியானதா கவும், அமைதியானதாகவும் அமைந் திட எனது வாழ்த்துகளைத் தெரி வித்துக் கொள்கின்றேன்–என்று குறிப்பிட்டுள்ளார். (த–5)

## நீக்கப்பட்டார்

தம்மைக் கட்சியின் மத்திய செயற் குழுவில் இருந்து நீக்கி யுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் அனுப்பப்பட்ட கடிதம் தமக்கு நேற்றுக் கிடைத்துள்ளதாக பந்துல குணவர்த்தன தெரி வித்துள்ளார். எனினும் இதற்கான காரணங்கள் எவையும் இன்னும் வெளியாகவில்லை. (த)

## கடலில்

அவர் சக மீனவர்களுடன் நேற்று அதி காலை 3 மணியளவில் படகில் ஏறி பள்ளிக்குடாவைச் சென்றடைந் தார். அங்கு அவர் கடற்கரையில் சுமார் 3 அடி ஆழத்தில் நின்று மீன் பிடியில் ஈடுபட்டிருந்தார். ஒரு கட்டத்தில் தனக்கு இயலாமலுள் ளதாகச் சக தொழிலாளர்களுக் குக் கூறியுள்ளார். இதனால் மீன் பிடிக் காது ஓய்வெடுக்குமாறு கூறியுள் ளனர். அதனால் அவர் வலை இழுக் காது நின்றுள்ளார். சிறிது நேரத்தின் பின்னர் பார்த்தபோது அவர் எந்த உணர்வுமின்றிக் கடலில் மிதந் துள்ளார் என்று சக தொழிலாளர் கள் விசாரணையில் தெரிவித்துள் ளனர்.


அவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவி னர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு 6 பிள்ளைகள் உள்ளன ர். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் விசாரணை மேற் கொண் டார். (த–4)

## எதிர்க்கட்சித்

தலைவர் யார் என்பதைச் சபா நாயகரிடம் அறிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி தொடர்பான பொறுப் பைச் சரியான முறையில் நிறை வேற்றவதற்குத் தான் எதிர் பார்ப்ப தாகவும், அதற்கு எவ்வளவு கால மெடுக்கும் என்று தமக்குத் தெரியா தெனவும் அவர் கூறியுள்ளார். (த)

# சோமஸ்கந்தா, ஆவரங்கால் இந்து கரப்பந்தில் கலக்கிச் சம்பியன்



இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் சோமஸ்கந்தா கல்லூரி

யாழ்ப்பாணம்,ஏப்.12

வடக்கு மலையகக் கரப்பந்தாட்ட ஒன்றியத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலும் கழகங்களுக்கு இடையிலுமாக இரண்டு பிரிவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடர்களில் பாடசாலைகளுக் கிடையிலான தொடரில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் கழ கங்களுக்கிடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகியன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பாடசாலை அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட் டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (த-ரி-23)

# வென்றது ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம்,ஏப். 12

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வளர்மதி விளையாட்டுக் கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் சமீப காலமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-ரி-23)

# இறுதிக்கு பறந்தது புத்தூர்

யாழ்ப்பாணம்,ஏப்.12

அரியாலையின் 96ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் ஓர் அங்கமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இரு பிரிவாக சமீபகாலமாக அருணோதய சன சமூக நிலைய மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-ரி-23)

# யாழ்ப்பாண பல்கலையை வீழ்த்தி சம்பியனானது ஓல்ட் கோல்ட்ஸ்



யாழ்ப்பாணம் ஏப். 12

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கம் நடத்திய ஹொக்கித் தொடரின்; இறுதியாட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணி மோதிக்கொண்டது. பலம் பொருந்திய இரண்டு அணிகள் இறுதியாட்டத்தில் மோதிக் கொண்டதால் ஆட்டம் முதலே பரபரப்பான கட்டத்தை அடைந்தது. இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறவதற்காக கடுமையாக மோதிக் கொண்டனர். ஆனால் இரண்டு அணியினராலும் எது வித கோல்களையும் பெறமுடியவில்லை இதனால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் விறுவிறுப்புக்கள் இரட்டிப்பானது. இரண்டாவது பாதியின் மத்திய பகுதியில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் பாலு தனக்கு கிடைத்த பந்தினை கோலாக மாற்ற ஆட்டத்தில் கோல்ட்ஸ் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. ஆட்டம் முடிவடைவதற்கு 1 நிமிடம் இருக்கையில் ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழ அணி கிடைத்த கோணர் வாய்ப்பை கோலாக மாற்ற ஓல் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கோல்ட்ஸ் அணியின் பாலுவும், தொடர் நாயகனாக யாழ். பல்கலை யின் எஸ். பிரதாப் பும் தெரிவானார்கள். அரையிறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ்(சிவப்பு) அணியை வீழ்த்தியதன் மூலம் பல்கலைக்கழகமும், யாழ். ஸ்ராரை வீழ்த்தியதன் மூலம் ஓல்ட் கோல்ட்ஸும் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-23-422)



# வலயச் சம்பியனாகியது வயாவிளான் ம.வி அணி

வலி வடக்கு, ஏப்.12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் 17 வயதுப் பிரிவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இளவாலைக் கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தை வீழ்த்தி வலயக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

மூன்று செற்களைக்கொண்ட இந்த ஆட்டத்தில் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் முதல் இரண்டு செற்களையும் முறையே 25:10, 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி கன்னியர்மடத்தை இலகுவாக வீழ்த்தி வலயச் சம்பினாக மகுடம் சூடியது வயாவிளான் மத்தி. (த-ரி-86)

# மணற்காடு றோ.க எல்லே சம்பியன்

கரணவாய் ஏப். 12

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான எல்லே தொடரில் மணற்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் அபார வெற்றியீட்டி வலயச் சம்பியனாகியது.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான எல்லே தொடர் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமைநடைபெற்றது. 6அணிகள் பங்குபற்றிய இந்தத்தொடரில் இறுதியாட்டத்திற்கு மணற்காடு றோ.க.த வித்தியாலயமும் நெல்லியடி மத்திய கல்லூரியும் மோதின. 50 பந்துவீச்சுக்களை கொண்ட இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50பந்துவீச்சுக்களில்15 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக துசானி 3 ஓட்டங்களையும் துவாரகா 2 ஓட்டங்களையும் சாயிதா, ரொசானி, இந்து ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொடுத்தனர். பதிலுக்கு 09 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மணற்காடு றோ.க.த அணி, 30 பந்துவீச்சுக்கள் மீதமிருக்க 20 பந்துவீச்சுக்களிலேயே இலக்கை இலகுவாக அடைந்து வெற்றிபெற்றது.

இந்தத்தொடரில் மூன்றாமிடத்துக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை வீழ்த்தி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(த-ரி-108)

# சரித்திரம் படைத்த சாவகச்சேரி இந்து

தென்மராட்சி, ஏப்.12

மாகாண மட்ட சதுரங்கத் தொடர்களில் தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து சென்ற சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் நால்வர் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சதுரங்கத் தொடரில் தரம் நான்கைச் சேர்ந்த மாணவர்களான சுதேஸ்கரன் நிருத்திகன், ஜனந்தன் மகிழிசை ஆகியோரும், தரம் இரண்டு மாணவி நவாஸ்கர் நதி, மற்றும் தரம் ஒண்று மாணவி சுரேசன் அஸ்வினிஜா ஆகியோர் தேசிய மட்டத் தொடர்களுக்குத் தெரிவாகியுள்ளனர் எனப் பாடசாலையின் முதல்வர் திருமதி சியாமளா கந்தசாமி தெரிவித்துள்ளார்.

தேசியமட்டச் சதுரங்கத் தொடர் கொழும்பு றோயல் கல்லூரியில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாகாண மட்டத்தில் தெரிவானோர் தேசியமட்டப் போட்டிக்காகக் கொழும்பு றோயல் கல்லூரிக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி-105)

# விண்மீன், கொலின்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஏப். 12

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்குபற்றும்; உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்கம்பர்மலையங்கம்பன்ஸ்விளையாட்டுக்கழகமைதானத்தில்சமீபகாலமாக இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத அணி, கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மின் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து அராலிஜேம்ஸ் விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-ரி-23)








# சிங்கங்களின் வெறியாட்டத்தில்
# பீனிக்ஸ் பறவைகள் சாம்பலாகின



மக்கலத்தின் அதிரடிச்சதமும், டோனியின் அரைச்சதமும், பந்து வீச்சாளர்கள் அனைவரினதும் அசத்தல் பந்துவீச்சும் கைகொடுக்க 45 ஓட்டங்களால் ஹைதராபாத்தை விழ்த்தி வெற்றி நடைபோட்டது சென்னை.

பூமியை அதிரவைப்போம் நாங்க தமிழ் பசங்க என்ற ஒரு சினிமாப் பாடல் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே மைதானத்தில் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. இந்தப்பாடலின் அர்த்தம் தெரிந்த சென்னைவீரர் என்றால் அது அஸ்வின் மட்டும்தான் என்பது வேறு கதை. எது எவ்வாறாயினும் சென்னை தமிழரின் அணியாச்சே. சாம்பலுக்குள்ளும் இருந்து எழுந்து பறக்கும் அக்கிப்பறவையான பீனிக்ஸை இலட்சிணையாகக்கொண்டு இலட்சணைக்கேற்ப சென்னையுடன் போரிடுவது என்ற முடிவோடு களமிறங்கியது ஹைதரபாத்.

அதிர்ஷ்டக்காரத்தலைவரை நேற்றும் அதிர்ஷ்டம் கைவிடவில்லை. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றார்



களத்தில் மின்னல் வேக மக்கலத்துடன் சிமித்தும். சிமித் சற்று நிதானமாகவே சென்று கொண்டிருந்தார். சிமித்துக்கு நேர்எதிர் பாணியில் மக்கலம் அடித்து நொருக்கினார். அடிக்கடிகொருதடவை பந்து பவுண்டரி எல்லைக்குச் சென்று வந்தது. அவசரப்பட்ட சிமித்தை களத்தின் பாதியில்வைத்து பவிலியனுக்குஅனுப்பினார் போல்ட். புகுந்தார் புதுமாப்பிள்ளை ரெய்னா. மக்கலம் வலது கர அதிரடி ரெய்னா இடது கர அதிரடி. அங்கும் இங்குமாக மாறிமாறி ஓடித் திரிந்தனர் ஹைதராபாத் வீரர்கள். சிமித் சென்ற அதே பாணியில் ஆட்டமிழந்தார் ரய்னா. ஆடுகளத்தின் பாதியில் வைத்து பத்திரமாக அனுப்பினார் ராகுல். சென்னை 10 பந்துப்பரிமாற்றத்தில் 89 ஓட்டங்களை எட்டியது. பிளாஸிஸ்ஸை எதிர்பார்க்க- எதிர்பாராமல் களம் புகுந்தார் கூல் கப்டன். ஒரு முடிவோடுதான் வந்திருந்தார். சந்தித்த முதல் பந்திலிருந்து பிரித்து மேய்ந்தார். மக்கலமும் விடவில்லை. போட்டிக்கு அதிரடி காட்டினார்கள். பந்து வானில் வட்ட மிட ஆரம்பித்தது. 28 பந்துகளில் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் டோனி. மறுமுனையில் சதத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண் டிருந்தார் மக்கலம். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 3 பந்துகளே எஞ்சியுள்ளன. 11 ஓட்டங்களை பெற்றால் மக்கலம் சதம். இலக்குக் காப்பாளருக்கு பின்னால் இருக்கும் இடைவெளியை கச்சிதமாகப் பயன்படுத்தி பக்காவாக சதத்தை எட்டினார். முடிவில் சென்னை 209-4.

120 பந்துகளில் 210 ஓட்டங்கள். ஹைதராபாத்தின் துடுப்பாட்ட வரிசைக்கு இந்த இலக்கு சற்றுக் கடினம். ஏனெனில் ஹைதராபாத்தின் பந்துவீச்சுத்தான் பலமானதேயொழிய துடுப்பாட்டம் அவ்வளவு பலம் அல்ல. ஆனாலும் ஆரம்ப வீரர்களான டவான், வோர்ணர் இவர்களில் ஒருவரை களத்தில் நீண்டநேரம் விட்டுவைத்தால் கதை வேறுமாதிரி ஆகிவிடும். பவுண்டரி மூலம் அதிரடியைத் தொடக்கி வைத்தார் தவான். வோர்ணரும் தனது பங்குக்கு ஆரம்பித்தார். நடப்புச்சம்பியனின் நம்பிக்கை நட்சத்திரம் என்றால் சும்மாவா வோர்ணரின் ஆட்டத்தில் வெறித்தனம் வெளிப்பட்டது. ஐந்து பவுண்டரிகளுடன் களைத்துப்போய் அவசரமாக பவிலியனுக்கு புறப் பட்டார் தவான். போல்ட் முறையில் ஆட்டமிழந்து ஐந்துடன் சென்றார் ராகுல். இலக்குகள் விழுவதை நிறுத்த எவரும் தயாராக இல்லை. இலக்குகள் சரியத் தொடங்கியதும் 198 என்ற இமாலய ஸ்ரைக் ரேட்டில் சென்று கொண்டிருந்த வோர்ணரின் அதிரடி சடார் 119 ஸ்ரைக் ரேட் டுக்கு மாறியது. ஒரு முனையில் வோர்ணரின் அதிரடி குறையக்குறைய மறுமுனையில் சென்னையின் வெற்றி உறுதியாகி யது. வோர்ணர் ஆட்டமிழந்ததும் சென்னையின் வெற்றி நிதர்சனமாகியது. கடைசி நான்கு பந்துப்பரி மாற்றங்களும் சம்பிரதாயமாகவே நடைபெற்றன என்று சொல்லிக் கொண்டால் மிகையாகாது. முடிவில் ஹைதராபாத் பீனிக்ஸ் பறவைகள் சென்னை சிங்கங்களின் வேட்டைக்கு இரையாகின. ஆட்ட நாயகனாக மக்கலம் தெரிவானார். (ரி)

## கிரிக்கட் கடவுளின் இரண்டாம் வருகை சாத்தியமா?




நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக கிரிக்கட்டின் கடவுள் என்றழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் களமிறங்கப் போகிறாரா என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

2013ஆம் ஆண்டு மும்பை கிண்ணம் வென்றபோது அந்த அணியில் சச்சின் இடம்பெற்றிருந்தார். [illegible] வெற்றியோடு, ஐ.பி.எல்லில் [illegible]ந்தும் ஓய்வு பெற்றார். இந்த [illegible]லையில், நேற்று தனது ருவிட்டர் தளத்தில், சச்சின் வெளியிட்டுள்ள படம் ரசிகர்களை பலத்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கியுள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணியின் சீருடையுடன் உள்ள புகைப்படத்தை ருவிட்டரில் வெளியிட்டுள்ள சச்சின், கண்டுபிடியுங்கள் பார்ப்போம் என்று பதிவிட்டுள்ளார். மும்பை தனது முதல் ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் 7 இலக்குகள் வித்தியாசத்தில் தோற்றது. மும்பையின் துடுப்பாட்ட வரிசை பலவீனமாகவே உள்ளது. இந்நிலையில் மும்பைக்கு உயிர்கொடுக்க சச்சின் மீண்டும் களமிறங்க உள்ளாரா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கேற்ப கடந்த சில நாட்களாக மும்பை அணியுடன், சச்சின் நெருக்கமாக சுற்றிக்கொண்டுள்ளார். இன்று சொந்த மண்ணில் மும்பை விளையாடுவதனால் சச்சின் களமிறங்கினால் இந்த ஆட்டத்தில்தான் களமிறங்கக்கூடும் என்ற பொதுவான கணிப்பு கிரிக்கட் உலகில் உலாவுகின்றது. கிரிக்கட்டின் கடவுளை மீண்டும் களத்தில் காணலாமா? இன்று தெரிந்துவிடும். (ரி)



# வலி. வடக்கு மீள் குடியேற்றப் பதிவுகள்






சுற்றிச் சுற்றித் தேடிய போதும் அகப்பட்டதெல்லாம் இராணுவத்தின் பாதுகாப்பு வேலி மட்டுமே



தள்ளாத வயதிலும் 25 வருடங்களின் பின்னர் தனது வீடு தேடி



இராணுவத்தினருடன் கூடவே சென்று விட்டார் புத்தரும்



இராணுவத்தின் பயிற்சித் திடல்




25 வருடங்களின் பின்னரும் எஞ்சிய எச்சங்கள்



சாந்தைச் சந்தி- விடுவிக்கப்பட்டதன் முடிவிடம்



1979 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாஸவினால் கையளிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் நினைவுக்கல். இது மாத்திரம் எஞ்சியிருக்கிறது. கையளிக்கப்பட்ட வீடுகளைக் காணவில்லை.




உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள்கள் நிரம்பிய நல்லின யேமன் செப்பேட் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 0754985375,
திருநெல்வேலி

உயர்வகை பல் வைத்திய சேவைக்கு
INTERNATIONAL DENTAL CARE

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD

| Jaffna Branch | Colombo Branch | Vavuniya Branch |
|---|---|---|
| No.84, Stanly Road, Jaffna, Sri Lanka | No.67, W.A.Silva Mw, Wellawatta, Colombo-06, Sri Lanka | Raaj Medical Lab No:10, Bazaar Street, Vavuniya. Sri Lanka. |
| Tel: 021 222 0833<br>021 492 3353 | Tel: 011 250 7070<br>011 438 0803 | Tel: 024 222 1577<br>024 492 55 |

E-mail: internationaldentalcare@gmail.com

**விடுமுறைகால சிறப்பு விலைக்கழிவு விற்பனை**

எமது வாடிக்கையாளர்களின் நலன்கருதி 12.04.2015 - 22.04.2015 வரை சகல விதமான பரீட்சைப் புத்தகங்களுக்கும்

**15% முதல் 20% வரை**

சிறப்பு விலைக்கழிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தற்போது விற்பனையில்:
- இரண்டாந் தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் 1-11 வரை
- சகல விதமான போட்டிப் பரீட்சைப் புத்தகங்கள்
- English medium Books - 6 - 11- Model Papers, Short Notes.
- Gr.5 புலமைப்பரிசில் பரீட்சை விசேட வினாவிடைகள் (பனரச-நந்தவனம், பூங்கா, புலமை மஞ்சரி, அறிவுச்சாகரம் 2015)

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். T.P: 021 222 9881

www.Dialus.lk
No.1 Jaffna City Search Engine.


Rabeshan's studiochhaya.com Photo & Video
+(94) 11 2594492 +(94) 777 323174
நிஜத்தை நிலைநிறுத்தும் நெஞ்சத்தை நெகிழவைக்கும் rabeshen@gmail.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்

சூரியகாந்தி

ஞாயிறு சிறப்பிதழ்
12.04.2015



# விட்ட தவறு

## உயிரைப் பலி வாங்கிய செம் பிசாசுகள்

# விட்ட தவறு



■ வந்தியத்தேவர்

தமிழகத்தைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளர்கள் இருபது பேர்களின் படுகொலை தமிழகத்தில் பெரிய அதிர்ச்சியலையைத் தோற்றுவித்துள்ளது. ஆந்திரப் பொலிஸாரால் கொலை செய்யப்பட்ட அந்தக் கூலித்தொழிலாளர்களின் படுகொலைக்கு இந்தியத் தமிழர்கள் எமது தொப்புள் கொடி உறவுகள் என்று கொக்கரிக்கும் இங்குள்ள எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சரி தமிழ் அமைப்புக்கள் என்று கூறிக் கொள்ளும் எந்த ஓர் அமைப்பும் சரி கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது உண்மையிலேயே வருத்தப்பட வேண்டிய ஒன்று.

இந்த மண்ணில் அரசு நடத்திய இனப்போரால் சாவடைந்தவர்கள், அங்கவீனர்களாகியோர், குடும்பத் தலைவரை இழந்து விதவைகளாக்கப்பட்டவர்கள் என பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் நாளாந்தம் படும் அல்லல்களைக் கண்டு கண்ணீர் வடித்தவர்கள் தமிழ் நாட்டுத் தமிழர்கள். பல தரப்பட்ட அராஜகங்களுக்கும் வன்முறை களுக்கும் இலக்காகித் தம்மைக் காவு கொடுத்த இலங்கைத் தமிழருக்காக மட்டு மன்றி ஏதோ ஒரு வகையில் தப்பிப் பிழைத்து அரசினதும் படையினதும் தொடர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகள் வழங்கப் பட வேண்டும் என்பதற்காக இன்றும் இலங் கைத் தமிழருக்காகக் குரல் கொடுப்பதுடன் பல்வேறு வகையில் தமது உயிரையும் அர்ப்பணித்து வீரச்சாவுக்குள் நுழையும் உறவுகளாக அவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆந்திராவைச் சேர்ந்த பெரும்புள்ளிகளின் செம்மரக்கடத்தல் அங்கு இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களில் ஒன்று. கடத்தல்காரர்கள் இதற்கென கூலித்தொழி லாளர்களை பெருமளவு பணம் கூலியாகக் கிடைக்கும் என ஏமாற்றி அழைத்துச் சென்று செம்மரங்களை வெட்டுகிறார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் திருப்பதி காட்டுப் பகுதிக்குள் செம்மரங்களை வெட்டிக் கொண்டிருந்தனர் எனவும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து பலர் தப்பிச் சென்று விட்டனர் எனவும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது.

ஆனால் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த இந்தத் தொழிலாளர்களை ஆந்திரப் பொலிஸார் பஸ்ஸில் இருந்து இறக்கிக் கொண்டு சென்று சுட்டுக் கொலை செய்து எப்போதோ வெட்டப்பட்ட பழைய செம் மரங்களை இவர்களின் பிணத்துக்கருகே போட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரி விக்கின்றன.

இவர்களுடன் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த மற்றும் ஒருவர் தப்பிவந்து தெரிவித்த தகவல் இவையாகும். உண்மை இவ்வாறிருக்க செம்மரக்கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி ஆந்திரப் பொலிஸார் தமிழர்களைத் திட்டமிட்டே கொலை செய்துள்ளனர் என்றும் பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து தங்கள் வளங்களைப் பெருக்கலாம், ஏன் முதலமைச்சராகக்கூட வரலாம். ஆனால் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தமது மாநிலங்களில் எதுவும் செயயமுடியாது என்ற நிலை இந்திய மாநிலங்களிடையே உள்ளமை வருந்தத்தக்கது. தமிழகத்துக்குத் தண்ணீர் வழங்க மறுக்கும் மாநிலங் களும் உண்டு. இந்த அடிப்படையில் அடிக்கடி தமிழகத்துக்கும் ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கும் சர்ச்சை ஏற்படுவதும் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதும் உண்டு.

> “
> ஆந்திராவைச் சேர்ந்த பெரும்புள்ளிகளின் செம்மரக்கடத்தல் அங்கு இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களில் ஒன்று. கடத்தல்காரர்கள் இதற்கென கூலித்தொழிலாளர்களை பெருமளவு பணம் கூலியாகக் கிடைக்கும் என ஏமாற்றி அழைத்துச் சென்று செம்மரங்களை வெட்டுகிறார்கள்.

தமிழர்களுக்கு எனத் தனியான மாநில அரசு இருந்தாலும்கூட இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு உரிய சலுகை களை வழங்குவதில்லை என்ற குற்றச் சாட்டும் இல்லாமல் இல்லை. தமிழர்கள் பெரிய அளவு பேச்சுக்கு இடமில்லாத வாறு சிறிது சிறிதாக நசுக்கப்படுகின் றனர். ஆந்திரப் பொலிஸாரின் செயலும் தமிழர்கள் மீது திட்டமிடப்பட்ட படு கொலையே.

அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட இந்தத்தமிழ் மக்களுக்காக தமது கண்டனங்களையும் அனுதாபங்களையும் தெரிவிக்க இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அமைப்புக்களும் முன்வராதது கண்டிக்கத் தக்கது. இந்திய மத்திய அரசின் கோபத்துக்கு ஆளாகி விடலாம் என்ற பீதியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசாமடந்தைகளாகியிருக்கலாம் அல்லது இங்கே பேசிப்பேசியே எதையும் காணாத எங்களால் இந்தியத் தமிழருக்காகப் பேசி எதைத்தான் சாதிக்கப் போகிறோம் என்ற விரக்தியி லும் இருந்திருக்கலாம். எப்படியிருந்தா லும் தமிழ் மகளுக்கு எதிரான ஒரு வன்முறை என்பதால் இருபது அப்பா வித் தமிழ் மக்கள் கொலை செய்யப் பட்டதற்கு தமது கவலையையாவது தெரிவித்திருக்க வேண்டியது தொப்புள் கொடி உறவுகளின் கடமையே! தமிழ்த் தலைவர்கள் தமது இனத்துக்காக இந்தக் கடமையைமறந்துகொண்டதுஏற்புடையதல்ல. எங்கள் மக்கள் மற்றொரு இனத்தின் திட்டமிட்ட கொலைகளுக்கு உள்ளாகும் போது ஈழத்தமிழருக்காக குரல் கொடுக்கும் எங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இன்னல்கள் கண்டும் ஒதுங்கிக் கொள்வது முறையாஎன்றுகேட்கும்தமிழகமக்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம்.

## சிவப்புத் தங்கம்



ஆந்திராவின் சித்தூர் மற்றும் கடப்பா மாவட்டக் காடுகளிலும் தமிழகத்தின் சில இடங்களிலும் கிடைக்கின்றது.

இசைக் கருவிகள் செய்வதற்கும் அதிபர் மாளிகை அலங்காரங்களுக்கும் முக்கியமாகப் பயன்படுகின்றன.

அருகிவரும் பயிரான இது, ஜப்பான், சீனா போன்ற நாடுகளுக்குக் கடத்தப்படுகிறது.

தொன் 10 லட்சம் இந்திய ரூபாயில் ஆரம்பிக்கும் இந்த வியாபாரம் சீனா, ஜப்பானை எட்டும் போது தொன் 1 கோடி இந்திய ரூபாய்களை எட்டுகிறது.

இந்த மரங்களின் பாதுகாப்புக்காக கிலோ மீற்றருக்கு 40 வன இலாக்கா அதிகாரிகளை ஆந்திரா நிறுத்தி வைத்திருக்கிறது.

தான் கைப்பற்றிய செம்மரங்களை ஆந்திர அரசு அண்மையில் ஏலம் விட்டது. 41ஆயிரத்தி 160 தொன் மரத்துக்கு 4ஆயிரம் கோடி இந்திய ரூபாய்கள் கிடைத்தன.

ச.பாலமுருகன்



# ஏழைகளைப் பலிகேட்கும் அரச இயந்திரம்

ஆந்திரத்தின் சித்தூர் மாவட்ட வனப்பகுதியில் செம்மரக் கட்டைகளை வெட்ட வந்ததாக தமிழகத்தைச் சேர்ந்த 20 தொழிலாளிகள் ஆந்திரக் காவல் துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இந்த அதிர்ச்சியூட்டும் படுகொலை மூலம் கட்டமைக்கப்படும் உளவியல் செய்தியானது, அச்சப்படு என்பது மட்டும்தான். சட்டத்தின் ஆட்சி, தண்டனை வழங்கும் நீதிமன்ற அதிகாரம் என எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு நிகழ்த்தப்பட்டுள்ளது இந்தப் படுகொலை. மனித உயிரின் மதிப்பு என்ன என்பதைக் கேள்விக்குள்ளாக்கிவிட்ட அரச பயங்கரவாதமாகவும் இந்த விவகாரம் உள்ளது.

தமிழகத்தின் பழங்குடி மக்களின் மலைவாழ் கிராமங்கள் தொடர்ந்து அரசின் அலட்சியத்தாலும் மாற்றாந்தாய் மனப்பான்மையாலும் புறக்கணிக்கப்பட்ட பகுதியாகிவிட்டது. இந்தியாவிலேயே – அதிக பழங்குடி நிலங்கள் பழங்குடி அல்லாத பிறரால் கையகப்படுத்தப்பட்ட மாநிலம் தமிழகம்தான் என்கின்றனர். பழங்குடி மக்களின் நிலங்களைப் பாதுகாக்கச் சட்டம் இயற்றாத மாநிலமாகவும் தமிழகம் உள்ளது. தமிழகத்தில் பழங்குடி மக்களுக்கென உருவாக்கப்பட்ட வன உரிமைச் சட்டத்தின்படி ஒரு காணி உறுதி கூட வழங்காமல், அந்தச் சட்டத்தையே – நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டி – நடைமுறைப்படுத்தவும் தவறிவிட்டது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடி மேம்பாட்டுக்கென ஒதுக்கப்படும் தொகையை, பழங்குடி மக்கள் சாராத செலவுகளான நெடுஞ்சாலை அமைத்தல், இலவசங்கள் வழங்குதல் என மடைமாற்றம் செய்துவிடுகிறது அரசு.

இந்த நிலையில், வறுமையில் சிக்குண்ட தமிழகத்தின் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியான திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, சேலம், விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த ஜவ்வாது மலை, ஏலகிரிமலை, சித்தேரிமலை, சேர்வராயன்மலை, அறுநூத்துமலை, கல்வராயன் மலைப் பகுதி மக்களையும் ஈரோடு மாவட்டம் பர்கூர் மலைப் பகுதியினரையும் குறிவைத்து, சமூக விரோதக் கும்பல் அவர்களை அணுகி, கூலித் தொழிலாளிகளாக மரம் வெட்டும் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளது.

## கூட்டுச் சதி

இந்த மக்களுக்கு முன்கடன் கொடுத்தும் குறிப்பிட்ட அளவு மரத்தை அவர்கள் வெட்டித்தர வேண்டும் என நிர்ப்பந்தப்படுத்தியும் கொத்தடிமைகளாக அவர்களைப் பயன்படுத்தியுள்ளது இந்தக் கும்பல். இந்த சமூக விரோதக் கும்பல் பல்வேறு மாநில பணக்காரர்கள் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்புடனும் காவல்துறை, வனத் துறை கூட்டுடனும் செயல்பட்டு வந்துள்ளது. கடந்த வருடம் இதுபோன்ற மரம் வெட்டிய விவகாரத்தில் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியின் எஸ்.சிவா, எஸ்.விஜயகாந்த், எஸ்.வெங்கடேசன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன் ஈரோடு மாவட்டம் பர்கூர் வனப் பகுதியைச் சேர்ந்த மாதன் கடுமையாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதால் உயிரிழந்துள்ளார். சேலம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனா மரத்தூர் பகுதியில் சிலர் கொல்லப்பட்டு வெளியே தெரிவிக்கப்படாமல் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ஏராளமானோர் இன்றும் சித்தூர், கடப்பா மாவட்டச் சிறைகளில் வாடுகின்றனர். சிலரின் நிலை இதுவரை அவர்களின் குடும்பத்தாரால் அறியப்படாமல்கூட உள்ளது. சில மாதங்களுக்கு முன் ஒரு தொலைக்காட்சியில், இது போல மரம் வெட்டச்சென்ற ஒரு தொழிலாளி ஆந்திர வனத் துறையினரால் கடுமையாகத் தாக்கப்படும் வீடியோ பதிவும் ஒளிபரப்பானது.

## சட்ட விரோதச் செயல்

2010ஆம் ஆண்டு முதல் சுமார் 1,500க்கும் மேற்பட்ட வழக்குகள் இந்த மரக்கடத்தல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் 3,893 பேர் கைது செய்யப்பட்டுளளதாகவும் அறிய முடிகிறது. இவர்களை அப்பாவிகள் என்றோ, ஏதும் அறியாதவர்கள் என்றோ சொல்லவரவில்லை. ஆனால், இவர்கள் குற்றத்தின் கடைசிப்புள்ளிகள். கதை இவர்களோடு முடியக்கூடாது. முதல் புள்ளிகள் வரை அனைவரையும் சட்டத்தின் பிடியில் கொண்டுவர வேண்டும்.

இந்தக் கொடூர மாஃபியா கூட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள், அதிகாரிகள், கடத்தல்காரர்கள், முதலாளிகள், ஏற்றுமதியாளர்கள், இடைத்தரகர்கள் என்று அனைவரையும் சுற்றி வளைக்க வேண்டும். ஆனால், ஆந்திரக் காவல்துறை படுகொலைகள் மூலம் பிரச்சினையை எளிதாக்கப் பார்க்கிறது.

## மோதல் நாடகம்

ஆந்திரக்காவல்துறை, மரம் கடத்துபவர்களைச் சுடத் தீர்மானித்துள்ளதைக் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் திருப்பதி வனத் துறை அதிகாரிகள் ஊடகங்கள் வாயிலாக அறிவித்துள்ளனர். அந்த மாநில அரசும் சுடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இது முழுக்க முழுக்கச் சட்டவிரோதச் செயலாகும். இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 46ன்படி, ஒருவரைக் கைது செய்யும்போது, ஆயுள் தண்டனை அல்லது சாவுத் தண்டனை பெறும் குற்றத்தைச் செய்யாதவரை குற்றவாளி என்று சந்தேகப்படுபவரைக் கொன்று பிடிக்கக் கூடாது என்ற பிரிவைத்தான் காவல் துறை தனக்குச் சாதகமாக்கிக்கொள்கிறது. தன்னைத் தாக்க முயன்றபோது தான் திருப்பித் தாக்கியதாக, மோதல் நாடகத்தை அது அரங்கேற்றுகின்றது.

இதுபோன்ற மோதல் சாவுகளில் பெரும்பாலான சமயம் இறந்தவர்களையே குற்றவாளியாகச் சித்தரித்து வழக்கை மூடிவிடுவதை இந்திய தேசிய மனித உரிமை ஆணையம் ஏற்கனவே கண்டித்துள்ளது. "மோதலில் ஈடுபட்ட காவல்துறையினர் மீது கொலை வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும், பாரபட்சமற்ற விசாரணை செய்ய ஏதுவாக சிபிசிஐடி போலீஸார் விசாரிக்க வேண்டும். அதுவரை சம்பந்தப்பட்ட போலீஸாருக்குப் பட்டம், பதவி வழங்கப்படக் கூடாது" என்றும் ஆணையம் வழிகாட்டியது.



கடந்த சில மாதங்களுக்கு முன் மும்பையில் நடந்த மோதல் சாவுகள்குறித்து பி.யு.சி.எல். தாக்கல் செய்த வழக்கில் இதை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது உச்ச நீதிமன்றம். சட்டத்தின் வழியில் மக்கள் நடக்க முன்னுதாரணமாக முதலில் காவல்துறை சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மரம் வெட்டுவோர் 20 பேர் படுகொலை செய்யப்பட்டது அரச வன்முறையின் வெளிப்பாடாகவே உள்ளது. காவல்துறை தனக்கு, நீதிசார் நடைமுறையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழியுள்ளதாகக் கருதுவதும், அதற்கு வழிவகைகள் செய்ய அரசு துணை போவதும் இந்தப் படுகொலைகள் தொடர வழிகோலுகிறது. ஏழைகள் மீது அரசுக்குள்ள இவ்வளவு கோபம், எஜமானர்கள் மீது ஏன் வருவதில்லை என்பதுதான் நாம் கேட்க வேண்டியது.

> சில மாதங்களுக்கு முன் ஈரோடு மாவட்டம் பர்கூர் வனப் பகுதியைச் சேர்ந்த மாதன் கடுமையாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதால் உயிரிழந்துள்ளார்.' சேலம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனா மரத்தூர் பகுதியில் சிலர் கொல்லப்பட்டு வெளியே தெரிவிக்கப்படாமல் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாகக் கைதுசெய்யப் பட்ட ஏராளமானோர் இன்றும் சித்தூர், கடப்பா மாவட்டச் சிறைகளில் வாடுகின்றனர். சிலரின் நிலை இதுவரை அவர்களின் குடும்பத்தாரால் அறியப்படாமல்கூட உள்ளது.

# ஒரு புறம் தெற்கு மீனவர் மறுபுறம் இந்திய மீனவர் தவிக்கும் வடக்கு மீனவர்கள்



■ அதிரன்

சொல்லமுடியாததுன்பங்களுக் கும் அளவிடமுடியாத இழப்புக் களுக்கும் முகம் கொடுத்து நொந்து நூலாகிப் போயிருக்கும் வடக்கு மீனவர்களின் அவல வாழ்வைக் கவனிப்பார் யாரும் இல்லை. ஒருபுறம் தென்னிலங்கை மீனவர்களும் மறுபுறம் இந்திய மீனவர்களும் வடக்கின் கடல் வளத்தைச் சூறையாடிச் செல்ல எதுவுமே செய்ய முடியாதவர்களாக கொட்டாவி விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் வடக்கு மீனவர்கள்.

வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளையெல்லாம் தேர்தல் நேரத்தில் மட்டும் தூக்கிப் பிடிக்கும் அரசு தேர்தல் முடிந்த பின்னர் நீ யாரோ நான் யாரோ என்ற தோரணையில் எடுத்தெறிந்து நடந்து கொள்கின்றது. வடக்கு மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இந்திய மற்றும் தெற்கு மீனவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கும் விருப்பம் இல்லாத அரசு அந்தப் பிரச்சினையை அரசியலாக்கி அதில் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் போர் முடிவடைந்து 6 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும்இல்லாமல்பொருளாதார இழப்பையும், பொருள் இழப் பையும் சந்தித்து இனிமேல் இழப் பதற்கு எதுவுமில்லை என்ற விரக்தி யுடன் அவர்களின் வாழ்வு நகர்கின்றது.

படகுகள் சேதமாக்கப்பட்டும், வலைகள் அறுக்கப்பட்டும் தினமும் அவர்கள் சந்திக்கும் இழப்பு பல இலட்சங்களைத் தாண்டும். அதனைவிட கடல் வளமும் சூறையாடப்படுவது அதை விட வேதனையானது.

இந்திய மீனவர்கள் வடக்குக் கடலில் நாள் தோறும் ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான மீன்களைப் பிடிப்பதாகக் கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றம் சாட்டியுள்ளார். இந்திய மீனவர்களாலேயே வடக்குக் கடல் வளம் அழிக்கப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த மோசமான நிலைமையைத் தெரிந்து கொண்டு இலங்கை அரசு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணாமல் இழுத்தடிப்பதன் நோக்கம் தான் என்ன?

இந்திய மீனவர்களால் வடக்குக் கடலில் ஏற்படும் பாதிப்பை கூறும் அமைச்சர், தென்னிலங்கை மீனவர்களால் வடக்குக் கடலில் ஏற்படும் பாதிப்பைக்கண்டுகொள்ளாதமை ஏன்? தனது அரசியல் ஆதாயத்துக்காக வடக்கு மீனவர் பிரச்சினையை அரசு ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது என்பதே உண்மை நிலை.

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் அத்துமீறிக் குடியேறி மீன்பிடி நடவடிக்கைளில் தெற்கு மீனவர்கள் ஈடுபட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபின்னர், வடக்குக் கடல் பகுதி களில் தெற்கு மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. போர் நடைபெற்ற வேளையில், வடக்குக் கடலில் பிரவேசிக்க முடியாமல் இருந்த அவர்கள், போர் முடிந்த பின்னர் சர்வ சாதாரணமாக வந்து வடக்குக் கடல் வளத்தை அள்ளிச்செல்லும் நிலை தொடர்கிறது. தெற்கு மீனவர்களின் இந்த நடவடிக்கைகளுக்கு அரசினதும், அரச படைகளினதும் ஒத்துழைப்பு போதிய அளவு வழங்கப்படுகின்றது.

> அத்துமீறிச் குடியேறியி ருக்கும் தெற்கு மீனவர்கள் தினமும் பிடிக் கப்படும் கடல் உணவுகளை குளிரூட்டப் பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்வதாக வும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவித் தும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என அவர்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

தெற்கு மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுத்துநிறுத்துமாறு வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்ற போதும், அது தொடர்பில் அரசு நடவடிக் கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதனால், ஒரு புறம் இந்திய மீனவர், மறுபுறம் தெற்கு மீனவர் வடக்குக் கடலில் வளங்களை சூறையாடிச் செல்ல வருமா னம் இழந்து அன்றாட வாழ்வாதாரத்துக்கே வழியின்றி தவித்து வருகிறார்கள் வடக்கு மீனவர்கள்.

தெற்கு மீனவர்களின் இந்த அத்துமீறல் நடவடிக்கைகள் வடமராட்சி கிழக்குக் கடல் பகுதிகளிலேயே அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. மீன்பிடிப் பருவ காலங்களில் வடமராட்சி கிழக்குக்கு வருகைதரும் தெற்கு மீனவர்கள் அங்கு வாடிகளை அமைத்து, மாதக்கணக்கில் தங்கி நின்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 5 வருடங்களாக இந்தச் சட்ட விரோத நடவடிக்கை தொடர்கிறது.

இம்முறையும் இவ்வாறு வருகை தந்திருக்கின்றனர் தெற்கு மீனவர்கள். வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் வாடிகளை அமைத்து தங்கியிருந்து அவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு வடக்கு மீனவர்கள் எதிர்ப்பு வெளியிடலாம் என்ற அச்சம் காரணமாக தெற்கு மீனவர் களின் வாடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட் டுள்ளமை குறித்து அப்பகுதியில் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். சுண்டிக்குளம் பகுதி சட்டவிரோதமாக மரம் வெட்டுதல், மணல் அகழ்வு என்பவற்றைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம் அங்குள்ள தென்னிலங்கை மீனவருக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காகவே செயற்படு கிறது என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் வெற்றுக் காணிகளாகக் காணப்படும் இடங்களில் அத்துமீறிச் குடியேறியுள்ள தெற்கு மீனவர்கள் தமது வாடிகளைச் சுற்றி, முட்கம்பி வேலிகளை அமைத்துள்ளனர். இவ்வாறு குடியேறியுள்ளவர்களை வெளியேற்றுவதற்குச் செல்லும் காணி உரிமையாளர்கள் பொலிஸாரினால் விரட்டப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் அத்துமீறிச் குடியேறியிருக்கும் தெற்கு மீனவர்கள் தினமும் பிடிக்கப்படும் கடல் உணவுகளை குளிரூட்டப்பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்வதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என அவர்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த மைத்திரி அரசும் இந்த மீனவர் அத்துமீறல் விடயத்தில் பாரபட்சமாகவே செயற்பட்டு வருகிறது. தெற்கு மீனவர்கள் என்பதால் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அனைத்தும் அரச படைகளால் வழங்கப்படுகின்றன. இதனால், அந்தப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் பெரும் பாதிப்பையும், பொருளாதார இழப் பையும் சந்தித்துள்ளார்கள். இதனைப் புரிந்துகொள்ளாமல் புதிய அரசும் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் அநீதி இழைக்கவே வகை செய்கின்றது. தமிழ் மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அக்கறை கொள்ளாமல் தொடர்ந்தும் இழுத்தடித்து வருகிறது. இந்த நிலைமை உடனடியாக மாற்றப்படவேண்டும். வடக்குக் கடலில் தெற்கு மீனவர்களின் ஊடுருவல் தவிர்க்கப் படவேண்டும்.

வடக்கு மீன்பிடிக் குடும்பங்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்துக்காகப் படும் பாட்டை அறியாத அரசு இந்த விடயத்தைத் தொடர்ந்தும் அரசியலாக்கிக் குளிர் காய்வதை அனுமதிக்கமுடியாது. எனவே இந்த மீனவர் பிரச்சினைக்கு விரை வான–தெளிவான–உறுதியான தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும். மைத்திரி அரசு அதனை இதய சுத்துயுடன் மேற் கொள்ளவேண்டும்.



# அர்த்தமிழந்த உடன்பாடுகள்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் இலங்கை – இந்திய மீனவர் அமைப்புகளுக்கிடையே இடம் பெற்ற பேச்சுக்கள் சுமுகமாக இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் இந்திய மீனவர்களால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் அவை தொடர்பாக இலங்கை மீனவர் பிரதிநிதிகள் தாங்கள் மீனவர் அமைப்புகளுடன் கூடிப் பேசி அடுத்த சுற்றுப் பேச்சுகளின்போது முடிவுகளைத் தெரிவித்து பேச்சுகளை மேலும் தொடர்வதாகவும் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளிவந்திருந்தன.

ஆனால் அடுத்த ஓரிரு நாள்களிலேயே பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகள் பொருட்படுத்தப்படாமலே எல்லை தாண்டி வந்து இந்திய மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டனர். அதன் காரணமாக 27 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுவிட்டனர். மேலும், எல்லை தாண்டியமைக்காக ஆறு மீனவர்கள் இந்தியாவால் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளையில் இலங்கை மீனவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் செய்த கொண்ட முறைப்பாடுகளை அடுத்து ,அந்தச் சந்திப்பின் போதே அவர் எல்லை தாண்டும் மீனவர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்திருந்தார்.

நீண்ட இழுபறிகளுக்குப் பின் மீண்டும் இரு தரப்பு மீனவர்களுக்கிடையே இடம்பெற்ற பேச்சுக்கள் அடுத்து இடம் பெற்ற சம்பவங்கள் மூலம் அர்த்தமற்றதாக்கப்பட்டவை கவலையளிப்பதும் துரதிர்ஷ்டவசமானதாகும். சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய ஒரு சகோதர முரண்பாடு, மேலும் தீர்க்க முடியாத நிலையை நோக்கி நகர்த்தப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மன்னார் வளைகுடாப்பகுதி பவளப் பாறைகளும் கண்டத் திட்டுகளும் நிறைந்த ஒரு பகுதி. இது மீன்களின் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற ஒரு பொருத்தமான சூழலைக் கொண்டிருப்பதால் இங்கு பெருமளவு மீன்கள் காணப்படுகின்றன. ஆனால் இங்கு தடை செய்யப்பட்ட வலைகளையும் மீன்பிடி முறைகளையும் பயன்படுத்துவதன் மூலம் இப்பகுதியின் மீன்வளம் முற்றாகவே அழிந்து விடும் அபாயம் உண்டு. எனவே இந்திய மீனவர்கள் இந்தப்பகுதியில் தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இரு பகுதி மீனவர்களினது எதிர்காலமும் பாதிக்கப்படும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உடனடி இலாபங்களைப் பெறுவதற் காக எதிர்காலத்தையே பாழடிப்பதை எவராலுமே ஏற்றுக்கொள்ள முடியாது.

அதே வேளையில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன் பிடிப்பது அவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினை. உடனடியாக அவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்கு மாறுவது சாத்தியம் என்று சொல்லிவிட முடியாது. எனவே இந்தப் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்பட வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

எமது கடல்வளம் பாதிக்கப்படாத வகையில் அவர்களின் வாழ்வாதாரம் முடக்கப்படாத வகையில் ஒரு சுமுகமான தீர்வு எட்டப்பட வேண்டும். அது இரு தரப்பினதும் நிலைமைகளைப் புரிந்து கொண்டு, திறந்த மனதுடன் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு ஒரு தீர்வை எட்டுவதன் மூலமே இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியும். இலங்கைக் கடலில் தடை செய்யப்பட்ட முறைகளில் மீன்பிடியில் ஈடுபடுவதில் இந்திய மீனவர்களும் இலங்கைக் கடலில் இந்திய மீனவர்களை அனுமதிப்பதில்லை என்பதில் இலங்கை மீனவர்களும் பிடிவாதமாக இருக்கும் வரை நிலைமைகளில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. மாறாகக் கைதுகளும் கண்ணீரும் தொடர்வதுடன் மனக் குரோதங்களும் வளரும் நிலைமையே ஏற்படும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்குமிடையேஒரு நெருக்கமான தொப்புள் கொடி உறவு நிலவி வருகின்றது. இலங்கைத் தமிழர்களுக்கு இன்னல்கள் இழைக்கப்படும்போது தமிழகம் கொதித்தெழும். தமிழகத்தில் எமக்கு ஆதரவாக நடத்தும் போராட்டங்கள், கடந்த அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்கு இந்திய மத்திய அரசு வழங்கிய ஆதரவுக்குப் பெரும் இடையூறாக விளங்கின.

எனவே, இலங்கையின் ஆட்சியாளர்களும், இந்திய மத்திய அரசும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தவும், மோதல்களை ஏற்படுத்தவும் பல்வேறு சதி முயற்சிகளில் ஈடுபட்டனர். இப்படியான முயற்சிகளில் சுந்தர நாச்சியப்பன், சுப்பிரமணிய சுவாமி போன்றவர்கள் பகிரங்கமாகவே இறங்கிச் செயற்பட்டனர். அதில் ஒரு பகுதியாகவே கடந்த காலங்களில் சரி, இப்போதும் சரி இலங்கை –இந்திய மீனவர்கள் பிரச்சினை கையாளப்பட்டு வருகிறது.

பிரச்சினைக்கு நிரந்தர ஒரு தீர்வை எட்டுவதை விடுத்து மீனவர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதும் பின்பு நல்லெண்ணத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படுவதாகக் கூறி விடு விப்பதுமாக ஒரு கண்துடைப்பு நாடகம் நடத்தப்பட்டு வருகிறது.

முதலில் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இந்தியத் தமிழ் மக்களுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நோக்குடனேயே மீனவர்கள் பிரச்சினை இரு அரசுகளாலும் கையாளப்படுகின்றது என்பதை இரு தரப்புமீனவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை வந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இந்தப்பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் இன்றுவரை அதற்கான எந்தவித முயற்சிகளையும் எடுக்கவில்லை. பிடிக்கப்படும் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலே போதும் என்ற வகையில் செயற்பட்டு வருகிறார். இலங்கைப் பிரதமரோ எல்லைமீறும் மீனவர்களைச் சுட இலங்கைக் கடற்படைக்கு அதிகாரம் உண்டு எனக் சவால் விட்டு இந்திய மக்களை ஆத்திரமூட்டியுள்ளார்.

இப்போதைய நிலைமையில் கூட எல்லை மீறும் இந்திய மீனவர்களை இந்தியக் கரையோரக் காவற்படையும் எல்லை மீறும் இலங்கை மீனவர்களை இலங்கைக் கடற்படையும் கைது செய்வது அல்லது ஒரு நாட்டுப் படை மற்றநாட்டு மீனவர்களைக் கைது செய்தால் அந்த நாட்டுப் படையிடமே ஒப்படைப்பது என ஒரு ஒழுங்கு பின்பற்றப்படுமானால் பிரச்சினை எழ வாய்ப்புக்கள் இல்லாமற் போய் விடும். அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் மீது எல்லை தாண்டிய குற்றச்சாட்டில், அந்தந்த நாட்டிலேயே அந்தந்த நாட்டு நீதி மன்றங்களே சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால் அதை இரு அரசுகளுமே செய்யப்போவதில்லை. எப்படியிருப்பினும் மீன்பிடி என்பது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. எனவே இது எதிர்காலக் கடல் வளத்தை பாழடித்து விடாமலும், அதே வேளையில் மனிதாபிமானத்துடனும் அணுகப்பட வேண்டும்.

இலங்கை மீனவர்கள் தமது நலன்களின் அடிப்படையிலும் இந்திய மீனவர்கள் நமது நலன்களின் அடிப்படையிலும் மட்டும் நிற்பதன் மூலம் தீர்வை எட்ட முடியாது. இரு தரப்பினரதும் நலன்களின் அடிப்படையில் விட்டுக்கொடுப்புக்களுடனான அணுகுமுறை மூலமே நிரந்தரத் தீர்வை எட்ட முடியும்.

இலங்கை மீனவ அமைப்புகள் இந்தியாவில் பேச்சுக்களை நடத்திவிட்டு, வந்த அடுத்தடுத்த நாள்களிலேயே இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்தமையும் எல்லை தாண்டிய மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பதும் அவ்வளவு ஆரோக்கியமான நகர்வுகளாகத் தெரியவில்லை.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதையும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளையும் எவராலுமே ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆனால் அந்தப் பிரச்சினை எப்படி அணுகப்படவேண்டும் என்பதே கேள்வியாகும். இதை ஒரு பகை முரண்பாடாக மாற்றி இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்குமிடையே நிரந்தர பகையாக மாற்றச் சிலர் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கை மீனவர்களுக்காக கண்ணீர் விடுவதாகக் காட்டிக் கொண்டு, இந்திய மீனவர்களுக்கு எதிராக உரத்தும் குரலெழுப்பி எமது மீனவர்களை உசுப்பி விட முயன்றமையை நாம் மறந்து விட முடியாது.

ஆனால் சம்பூரில் மீன் இனப் பெருக்கம்செய்யக்கூடிய பல கண்ட மேடைகளைக் கொண்ட பகுதியில் ஓர் அனல் மின்சார நிலையம் அமைக்கப் படுவது தொடர்பாக அவர் வாய் திறக் கவே இல்லை. இந்த மின் நிலையங்களிலிருந்து வெளியேறும்நீர் அப்பகுதி யின் மீன் வளத்தை முற்றாகவே அழித்து விடும் அபாயம் கொண்டது. மீன் இனப் பெருக்கம் செய்யுமிடம் அழிவுற் றால் கிழக்கின் மீன் வளமே பாதிக்கப் பட்டு விடும். நாயாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் படையினரின் உதவியுடன் எமது மீன் வளங்களை சிங்கள மீனவர் அள்ளிச் செல்வதையோ, முல்லைக் கடலில் சிங்கள மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் தடைசெய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி அந்தப் பகுதியினரின் மீன் வளத்தை அழிப்பதையோ அவர் கண்டு கொள்வதில்லை.

ஆனால் இலங்கை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே பகைமையை வளர்க்கும் வண்ணம் துணிந்து இருக்கிறார் என்றால் இவற்றின் உள் நோக்கங்களை நாம் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் தமிழக அரசியல்வாதிகள் கச்சதீவை இந்தியா திரும்பப் பெற வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். அதுதொடர்பாக தமிழகச் சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்திய மீனவர் அமைப்புகள் எதுவுமே இப்படியான ஒரு கோரிக்கையை அண்மைய நாள் வரை முன்வைத்ததில்லை.

இலங்கை இந்திய மீனவ அமைப்புகளிடையேயான மூன்றாம் சுற்றுப் பேச்சுகளின் பின்பு , அடுத்தடுத்து இடம் பெறும் சம்பவங்களின் பின்பு இந்திய மீனவர்கள் இந்தியா கச்சதீவை மீளபெற வேண்டுமென குரல் எழுப்பி யுள்ளனர். அதுமட்டுமன்றி அந்தக் கோரிக்கையை வைத்து திருவோடு ஏந்திப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

இந்தக்கோரிக்கையை மேலும் வலுவூட்டும் வகையில் இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் அமரவீர இலங்கைக் கடலில் இந்திய மீனவர்கள் ஒரு நாள் கூட மீன் பிடிக்க அனுமதிக்கப் போவதில்லையென சவால் விட்டுள்ளார்.

இவற்றிலிருந்து இந்தியத் தமிழ் மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இடையே உள்ள உறவுகளை அழிக்க எவ்வாறு திட்டமிட்ட வகையில் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

எனவே இத்தகைய முயற்சிகளிலிருந்து இலங்கை இந்திய மீனவர்கள் தங்களை விடுவித்துக் கொண்டு மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் நான்காம் கட்ட பேச்சுக்களை நோக்கி நகரும் வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.




# வெற்றிகரமாக முடிந்துள்ள ஊவாமாகாண தமிழ் சாகித்திய விழா

ரம்யன்

ஊவா மாகாண தமிழ் சாகித்திய விழா மிகக் கோலாகலமாக நடந்து முடிந்திருக்கும் தகவல்கள் வந்துள்ளன. ஊவா மாகாண அமைச்சர்களில் ஒருவரான வடிவேல் சுரேஷ் இந்த விழாவை முன்னின்று வழி நடத்தி வெற்றிகரமாக முடித்திருக்கின்றார்.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கலைஞர்களும் தமிழ் அறிஞர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்தும் தமிழ் அறிஞர்கள் க்லந்து கொண்டுள்ளார்கள்.

ஊவா மாகாணத்தில் இதற்கு முன்பும் பல சாகித்திய விழாக்கள் நடைபெற்றுள்ளன. நாட்டில் போர் ஓய்ந்து 5 வருடங்களுக்குப் பின்னர் சிங்கள பெரும்பான்மையினர் அதிகமாக வாழுகின்ற ஒரு பிரதேசத்தில் மிக சிறப்பாக ஒரு தமிழ் விழாவை நடத்தி முடித்தமை மகிழ்ச்சி தருவதாகும். அது மட்டுமன்றி விழாவில் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் பிரமுகர்களையெல்லாம் அழைத்து கௌரவித்திருப்பது இன சௌஜன்யத்துக்கு ஒரு முன் முயற்சியாகவும் திகழ்ந்துள்ளது. இன முரண்பாடுகளும் சமய வேறுபாடுகளும் விரிவடைந்து குரோத உணர்வுகள் மிக மோசமான நிலைக்கு உந்தித்தள்ளப் பட்டுள்ள நிலையில் மலையகத்தில் சகல மக்களையும் இணைத்துக்கொண்டு ஒரு தமிழ் விழாவைச் சிறப்பாக நடத்த முடிந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். இது அந்தவிழாவை முன்னின்று நடத்தியவர்களின் சாதுரியமென்றும் குறிப்பிடலாம்.

இந்த சாகித்திய விழாவில் சப்ரகமுவ முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கலந்து கொண்டு விழாக் குழுவினருக்கு பாராட்டுத் தெரிவித்திருப்பது வரவேற்புக்குரிய விடயம். தமிழ் சாகித்திய விழாவின் வெற்றிக்கு தம்மால் சகல உதவிகளும் வழங்கப்பட்டிருப்பது குறித்து அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்திருந்தது மட்டுமன்றி இதனை வேறுயாரும் நடத்தியிருந்தால் தங்களை சிவாஜிகணேசன் போலும் ரஜினிகாந்போலும் நினைத்துக் கொண்டு செயல்பட்டிருப்பார்கள் என்பதாகக் கூறி மலையகத்தில் சில தலைவர்களின் போக்கைக் கிண்டல் செய்திருந்தார்.

சப்பிரகமுவ தமிழ் சாகித்திய விழாவைக் கண்டுகளித்த வேறு பல பிரதேசங்களைச் சேர்ந்த தலைவர்களும் அவ்வாறான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஆர்வம் காட்டியிருப்பதும் தெரியவந்துள்ளது.

விழாவின் மூலகர்த்தாவாக விளங்கியவரான அமைச்சர் வடிவேல் சுரேஷ் மலையக மக்களின் ஆதங்கங்கள் சிலவற்றையும் விழாவில் வெளியிட்டிருந்தார்.

இந்திய அரசு மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளியினரைக் கண்டு கொள்ளாமல் இருந்துவருகிறது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர் ஏழ்மையில் வாடும் மலையக மக்களின் வாழ்வை உயர்த்தவும் மலையக மக்களின் கல்விக்கு உதவவும் இந்தியா நிறையவே உதவி செய்யவேண்டிய கடப்பாடு இருக்கிறது. இந்திய மக்களின் தொப்புள் கொடி உறவினரான இந்தியர்களை இந்திய அரசு கண்டுகொள்ளாமையை பெரும் வருத்தத்துடன் அந்த நிகழ்வில் எடுத்துரைத்துள்ளார். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்த இந்திய பிரதி உயர் ஸ்தானிகள் ராதா வெங்கட் ராமன் முன்னிலையிலே தமது இந்த ஆதங்கத்தை வெளியிட்டவரான வடிவேல் சுரேஷ் தமது இந்தச் செய்தியை இந்தியாவுக்கு எடுத்துச் சென்று உதவுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

மலையகத்தில் மறைந்து கிடக்கும் கலைவடிவங்கள் தோட்டப்புறங்ளில் மட்டும் தேங்கிவிடாமல் ஏனைய பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் சாகித்தியவிழா நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக அவர் எடுத்தியம்பினார்.

205 பாடசாலை மாணவர்களது கலை வடிவங்கள் விழாவில் மேடையேற்றப் பட்டுள்ளன. ஊவா கல்விச் சமூகத்தின் பூரண பங்களிப்புடன் அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்புக்களுடனும் சாகித்திய விழாவை நடத்தியுள்ளதாக அவர் பெருமையுடன் கூறியுள்ளார். இந்திய அரசும் வருகை தந்திருந்த பிரதி உயர் ஸ்தானிகரும் பேராசிரியர்களும் மலையக மாணவர்களின் கல்விக்கண்களைத் திறக்க ஆக்கமுறையில் உதவ முன்வர வேண்டும் என்றும் அவர் வினயமாக வேண்டுகோள் வைத்துள்ளார்.

ஒரு மக்கள் சமுதாயத்தின் இயல்பு அவர்கள் ஏதோ ஒரு குழுமமாக வாழ்கிறார்கள் என்பதால் மட்டும் நிலைபெறுவதில்லை. அவர்களின் மொழி, கலை, கலாசார விழுமியங்கள் முறையாகப் பேணப்பட வேண்டும். அதற்கு அந்தச் சமூகத்தவர்கள் தனித்து நின்று எதனையும் சாதித்துவிட முடியாது. அதற்கு ஏனைய சமூகங்களின் ஆதரவும் இனக் குரோதமற்ற அரசியல்தலைவர்களின் ஆதரவும் தேவை. அதனைச் சரியாகவே ஊவா மாகாண சாகித்திய விழா ஏற்பாட்டாளர்கள்செய்து முடித்துள்ளார்கள் என்று கருத வேண்டும். பின் தங்கியுள்ள ஒரு சமூகத்தை சகல துறைகளிலும் ஏனைய மக்களுடன் இணைத்து முன்னேற்றுவதற்கு அதன் தலைவர்களுக்கு அக்கறையும் ஆற்றலும் வேண்டும். அந்தவகையில் ஊவா சாகித்திய விழா மலையகத்தின் ஏனைய பகுதிகளுக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழும் என்று நம்புவோம்.




## 9யானைகளின் பாரம் 75 அடி உயரம் புதிய டைனோசர் கண்டுபிடிப்பு

சுமார் 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்துள்ள ஒரு டைனோசரின் எச்சங்கள் கிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

சைபிரோஸோரஸ் (Sibirosaurus) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மிருகம் 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்துள்ள மிகப்பெரிய மிருகங்களில் ஒன்று. டைட்டனோசொரஸ் (Titanosaurus) என்றழைக்கப்பட்ட 13 அடி உயரம் 90 தொன் பாரமும் ஒன்பது ஆபிரிக்க யானைகளின் பாரம் அளவுக்கு வளர்ந்ததாகக் கருதப்பட்ட மிருகத்துடன் இந்த புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மிருகம் இனஉறவு கொண்டதாக இருந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

ரஷ்யாவில் மேற்கு சைபீரியாவில் 2008 ஆம் ஆண்டு கியா ஆற்றங்கரையில் காணப்படும் பாறைகளில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்களில் இருந்து இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. பாறைகளை அகற்ற முடியாததனால் ரஷ்ய டொம்ஸ்க் மாநில பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சுண்ணாம்புப் பாறைகளிலிருந்து துண்டுகளை வெட்டியெடுத்து ஆய்வு நடத்தியுள்ளார்கள். முதலில் இது ஒரு விசாலமான தாவர உண்ணியின் எச்சமொன்றாகக் கருதப்பட்டதாகவும் பலவருட ஆய்வுகளின் பின்னர் அது முற்றிலும் புதுமாதிரியான டைனோசர் என்பது தெரியவந்ததாகவும் டாக்டர் ஸ்டீபன் இவான்ஸ் டொவ் என்ற ஆய்வாளர் கூறினார். 1995 ஆம் ஆண்டில் அதே பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட டைனோசர் பாதமும்கூட இந்த புதிய மிருகத்தின் எச்சமாகத்தான் இருக்கும் என்று கருதப்படுகின்றது.

கிடைக்கப்பெற்ற எல்லாவித துண்டுப் பாகங்கள் மற்றும் எலும்புகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து மீள அமைத் துப் பார்த்ததில் இது ஒரு புதிய வகை மிருகம் என்பதை எங்களால் நம்பிக்கையுடன் சொல்ல முடியும் என்றார் அவர்.



டைட்டனோசரஸ் மிருகத்துக்கு நீளமான கழுத்தும் சாட்டைபோன்ற வாலும் இருந்துள்ளது. சிறிய தலை மற்றும் கால்கள் மொத்த மாகவும் கட்டையாகவும் இருந்துள்ளது. அவைதாவரங்களையே சாப் பிட்டுள்ளன. முதுகில் சிறிய எலும்பு அமைப்பு இருந்துள்ளது. எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இது உதவியாக இருந்துள்ளது என்று கூறியுள்ளார் அவர்.

# ஊர்வலங்கள் நேர்நேர்வின்?

பிரேத ஊர்வலம் செல்லும்
பாதையில் திருமண
ஊர்வலம்
வரேக்கை என்ன தோன்றும்
வாழ்வா, சாவா என்றோ?

ஊர்வலம் ஏதோ வீதியில்
ஊர்வதில் இடையூறு
தோன்றும்
சேர்வழி இரண்டில் கூடிய
சனத்தின் நெரிசல் தன்னால்!

ஒன்றை முன்னே செலுத்தி
ஒழுங்கு செய்தல் நன்றாம்;
என்கின் எதனை முன்பாய்
அனுப்ப வேண்டும்
சொல்மின்?

வாழ்வா, சாவா தேர்வீர்
வாழ்தல் நீண்ட காலம்;
ஆழ்ந்த சாவை மதித்தல்
ஆக்கும் வாழ்க்கைச் சிறப்பு!

திருமண பிரேத ஊர்வலம்
திட்டம் இன்றியே நேர்வின்
ஒருவரும் அச்சம் தவிர்த்தல்
உகந்த மேன்மை என்பார்!

இரண்டும் ஒவ்வோர்
வாழ்வில்
இல்லாமற் போவதும்
உண்டோ?
மருண்ட கண்ணுக்கு இருண்ட
மாதரி மனங்கள் தவிக்கும்!


ஏற்றம் இறக்கம் வாழ்வில்
இல்லாப் போதலே இல்லை;
கூற்றிவ னழைப்பு எப்போ
கூறுமே சாதகம் கணிப்போம்!

விதியை முந்தி விபத்து
வந்தால் போவதும் உண்டு;
அதிலிது சரத்து வகுத்து
அறிவுரை சாதகம் பகரும்!

என்றால் மனிதர் வாழ்வை
எப்படி நிரந்தர மென்பர்?
இன்றி ருப்போர் தன்னை
இனியெப் போதுமே காணார்!

வாழ்க்கை என்பதை மனிதா
வடிவா அறிந்தும் நீயோ;
மாழ்க்கை வாழ்வை வரிந்து
மாயையி லுழன்று போனாய்!

*'நவாலியூர்க் கவிராயர்'*





# காலநிலைக்கேற்ப உணவு உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்துவோம்!

Dr.(திருமதி) அருள்மொழி சுதர்மன், மருத்துவப் பொறுப்பதிகாரி,
இ.சி.ஆ.மருந்தகம் நகரம்,
மாநகர சபை யாழ்ப்பாணம்.

அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்தில் அதிகரித்த வெப்பநிலையை நாம் யாவரும் உணருகின்றோம். ஒரு வருடத்தின் சுழற்சியில் பங்குனி மாதம் கோடை காலதுக்குரிய காலம் என்பதும் யாமறிந்த உண்மை. அதனால் தான் இந்தக் காலங்களில் அனேக கோயில்களில் உற்சவங்கள், பொங்கல்கள், குளிர்த்திகள் நடைபெறுகின்றன. இவை காலத்துக் கேற்ற செயற்பாடென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலப் பகுதியில் மக்களுக்கு ஏற்படும் ரோகங்களும் உஷணம் (Heat)அதிகரிப்பதினால் ஏற்படும் நோய்களாகவே காணப்படுகின்றது. இந்தக் காலத்தில் வைத்தியசாலைத் தரவுகளின் படி (Hospital datas) வைரஸ் காய்ச்சல், தடிமன், சளி, சிறுநீராகத் தொற்று (Urinary Tract infection)சிறுநீரக கல்(Renal stones)போன்ற நோய்களினால் அவதியுறுவோர் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இதுதவிர வாய் அவியல் (Apthous Ulcer)மூல ரோகம் (Haemarroids), மலச்சிக்கல் (Constipation) இவைகளும் இந்தக் காலப் பகுதியில் ஏற்படுகின்ற நோய்களாக இருக்கின்றன.

அதிகரித்த வெப்பநிலைக்கு ஏற்றவாறு நாம் எமது அன்றாட உணவுப் பழக்கவழக்க முறைகளையும் செயற்பாடுகளையும் சற்று மாற்றியமைப் போமானால் மேற் கூறிய வருத்தங்கள், நோய்களில் இருந்து எம்மை ஓரளவு பாதுகாத்துக் கொள்ள முடியும். நான் ஒரு வைத்தியர் என்ற முறையில் மலச்சிக்கல் என்று என்னிடம் மருந்தெடுக்க வரும் நோயாளிக்கு நீங்கள் வாழைப்பூ அதிகம் உள்ளெடுக்க வேண்டும் என்று கூறினால், இன்று பெரும்பாலானோர் வாழைப் பூவா? அப்படி ஒரு பொருள் சாப்பிடுவதா என்கின்ற மாதிரி என்னைப் பார்க்கின்றனர். ஏன் நாம் சூழலுடன் இயைந்து வாழப் பழகுவதில்லை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இன்று எம்மில் பலர் எது இலகுவாகக் கிடைக்கின்றதோ அதையே வாங்கி உண்ணப் பழகி விட்டனர். இதனாலேயே மிகவும் இளம் வயதிலேயே எமக்கு தொற்றா நோய்கள் (Non communicable Disease)ஏற்படுகின்றது. அத்துடன் சோம்பேறித் தனமான வாழ்க்கை முறையும் (Life style)இதற்கு காரணமாக அமைகின்றது.

கோடை காலத்தில் அதிகளவு வியர்வை வெளியேறுகின்றது. இதனால் உடலில் இருந்து அதிகளவு நீர் இழப்பு ஏற்படுகின்றது. எனவே இழந்த நீரை ஈடு செய்வதற்காக அதிகளவு நீரை உள்ளெடுத்தல் வேண்டும். வெறுமே நீராக உள்ளெடுக்க சிரமம் எனின் பழரசமாக (Juices), சூப் (Soup) ஆக மோர், இளநீர் இவைகள் மூலமாகவும் நீரை உள்ளெடுக்கலாம். தூர இடங்களில் வேலை செய்பவர்கள் கட்டாயம் நீரை கொண்டு சென்று குடித்தல் வேண்டும். பல பேர் நீரை காவிச் செல்லும் சோம்பேறித் தனத்தினால் நீரைக் குடிக்காது விட்டு சிறுநீரக செயலிழப்பு (Kidney failier) ஏற்படக் காரணகர்த்தாவாக இருக்கின்றனர்.

உடலில் குளிர்ச்சித் தன்மையைக் கூட்டும் பழங்களை அன்றாடம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். பழங்கள் என்றால் அப்பிள் தான் பழம் என்று நினைப்போர் இன்று அதிகம். இதரை வாழைப்பழம், பப்பாசிப் பழம், பேரீச்சம்பழம், வத்தகப்பழம் இந்தக் காலங்களில் சந்தைகளிலும் அதிகம் கிடைக்கக் கூடியதாகவும் உள்ளது. இவைகளை உணவில் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

இவைகளுடன் மரக்கறிகளான முள்ளங்கி, புடோல்,பீர்க்கு, சுரைக்காய், பூசணிக்காய், வெண்டிக்காய், இலைக்கறி வகைகளான அகத்தி, பொன்னாங்காணி, வல்லாரை, முசுட்டை, கங்குன், முளைக்கீரை இவற்றை தேடி வாங்கி கறி சமைத்து உண்ணுங்கள்.

அதிக காரமான உணவுகள் எண்ணெயில் பொரித்த உணவுகளை கட்டாயமாக தவிர்த்தல் வேண்டும். அன்றாடச் செயற்பாடுகளில் அதிகமாக வியர்வை வெளியேறுவோர் தினமும் இருவேளை குளிப்பது (Bathing)நல்லது. உள்ளாடைகள், ஆடைகளை பருத்தியிலான (Cotton) ஆடைகளை அணிவது உடலுக்கு சௌகரியமாக இருக்கும். இறுக்கமான ஆடைகளை தவிர்த்து தளர்வான ஆடைகள் அணிதல் நன்று.

இயற்கையுடன் இயைந்து காலநிலை மாற்றங்களுடன் இயைந்து வாழப் பழகுவோமானால் உடலியல் செயற்பாடுகளும் (Physiological Activities) சீராக செயற்படும் இதற்கு மாறுபடில் எமக்கு ரோகம் ஏற்படும்.



# விவாகம் செய்வது ஏன்? விவாகரத்து எடுப்பதும் ஏன்?

அரியாலையூர்
செல்வி மிஷாந்தி செல்வராஜா.



பண்டைய காலத்தில் விவாகம் செய்வது ஓர் ஆண் தனது சந்ததி விருத்திக்கே எனவும், இல்லற வாழ்க்கை அனுபவித்து தனது இல்லத்தை வழி நடத்த இல்லாள் ஒருத்தி தேவைப்பட்ட பொழுது ஆணுக்கு பெண் என்ற ஒரு துணை தேவைப்பட்டது. இல்லறத்தை நல்லறமாக வழிநடத்த மனைக்கு உரியவளாக வீட்டிலே பெண்கள் தங்கியிருந்து பிள்ளைகளைப் பெற்றெடுப்பதும் சமைப்பதுவுமே குடும்ப வாழ்வியலாக இருந்தமை நாம் பண்டைய புராணக் கதைகள் மூலம் படித்துள்ளோம். ஆனால் இன்றைய காலத்தில் விவாகம் என்பது மிகவும் மலிவானதொரு விடயமாகிவிட்டது. ஏனெனில் பார்த்தவுடன் காதல், இரண்டு நாள் பழக்கத்தினால் திருமணம் செய்வது. ஒரு மாதமாய் பழக்கம் என்றவுடன் உடனே திரு மணம் செய்வது. சரியான புரிந்து ணர்வு இல்லாத வேளையில் "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்" என்ற நிலை முடிந்தவுடன் உடனே விவாகரத்துக்கு போய் விடுகின்றார்கள்.

விவாகம் செய்வது ஏன் என்ற ஒரு கேள்வி கேட்கப்படுமானால்? அதற்கான பொருத்தமான பதில்தான் என்ன? குறிப்பாக ஒரு பெண் வளர்ந்து பருவமெய்திய பின் அவளுக்கு மிகுந்த கட்டுப்பாடுகள் குடும்பத்திலே ஏற்படு கின்றது. பெண்கள் எவ்வளவு தான் படித்தாலும் உயர் தொழிலில் இருந்தாலும் திருமணமா காத நிலையில் இருந்தால் சமூகத்தில் பல கேள்விகள் எழுகின்றன. திரு மணம் என்பது கட்டாயமாக செய்ய வேண்டுமா? எனக் கேட்டால் நிச்சயம் ஆண்களை விட பெண்களுக்குத்தான் முக்கியம் என்பார்கள். உடலியல் ரீதியாக ஆண்களை விட பெண்கள் மாற்றமடைந்து இருப்பதால் பாது காப்பு என்பது நிச்சயம் பெண்களுக்கே அன்று தொடக்கம் இன்று வரை போதிக்கப்படுகின்றது. ஆனால் இவ்வு டலமைப்பு இறைவனால் வழங்கப் பட்ட கொடையே.

இன்றைய கால கட்டத்தில் எமது யாழ். குடா நாட்டில் அதிகளவான திருமணமாகாத முதிர்கன்னிகளே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வீட்டில் முடங்கி வாழும் பெண்கள் அல்ல. ஒவ்வொருவரும் ஏதோவொரு துறைகளில் சாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் யாழ்.குடா நாட்டில் சாதக பொருத்தம் பார்ப்பதும், சாதக குற்றங்களாலுமே பெண்கள் அனேகம் திருமணமாகாமல் இருக் கின்றார்கள். மற்றும் சீதனம் என்னும் கொடிய பணவெறி ஆண்கள் சமுதாயத்தை ஆட்டிப்படைகின்றது. தமக்குத்தானே ஏலம் கூறி தம்மையே விற்பனை செய்வது ஆண்கள். ஆனால் பெண் என்பவள் விலையற்ற செல்வம். ஆண்கள் தங்கள் பெறுமதியை கூறி ஏலம் செய்யும் போது பெண்கள் அத்தகைய ஆண்களை விலைகொடுத்து வாங்க விரும்புவது இல்லை.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும், விவாகம் கட்டாயமாக செய்ய வேண்டும் என்பது பொதுவான கருத் தாகும். விவாகம் செய்வது ஆணும் பெண்ணும் வெறும் உடல் ரீதியான காம இச்சைக்கே என்று ஒரு சிலர் தப்பாக நினைக்கின்றார்கள். அற்பத்தனமான ஆசைக்காகவா? ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து திருமணம் செய்கின்றார்கள்? இல்லை. விவாகம் செய்யும் முன் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்களும் தத்தம் துணைவரை வெறும் உடல் ரீதியாக நேசிக்காது தம் எதிர்காலக் கணவரது விருப்பு வெறுப்புக்கள் அனைத்தையுமே நேசிக்க வேண்டும். உண்மையான அன்பு மலரும் போதே புனிதமான காதல் தோன்றும். தமது வாழ்க்கைத்துணையை தாமாகவே விரும்பி நேசித்தாலும், அல்லது பெற்றோரின் சம்மதத்துடன் பேசி முடிவெடுத்தாலும் தமது எதிர்கால கணவனை உள் அன்போடு நேசிக்க வேண்டும். கணவனின் உறவுகளையும் தமது கணவனோடு சார்ந்த அனைத்து உறவுகளையும் நேசிக்க வேண்டும். எந்தவொரு ஆணும் தமக்கு வரப்போகும் மனைவி தனது தாயைப் போலவே அன்பாக நேசிக்க வேண்டும் என நினைப்பான். பணத்தை செலவழித்து பாசத்தை கொடுக்க வேண்டும் என்பது உண்மையான அன்பல்ல. வறுமையாக இருந்தாலும் பேசுகின்ற வார்த்தை பிரயோகங்களை இனிமையாகக் கூறி உரையாடுவதலே உண்மையான அன்பு, பாசம், காதல் கணவன் மனைவியிடையே உருவாகும்.

அதேபோலவே பெண்களைப் பல கவிஞர்கள் பூவென்றும், நிலவென்றும் வர்ணித்துள்ளார்கள். எத்தனையோ சினிமாப் பாடல்களில் பெண்களையே அதிக கவிஞர்கள்கவிவடித்துப் பாடியுள்ளார்கள். ஆனால் அத்தகைய பெண்களை மென்மையாக ஆண்கள் சிலர் கையாள்வதே இல்லை. ஒரு சில ஆண்களே தத்தம் மனைவியரை அன்பாகவும் – பாசமாகவும் நேசிக்கின்றார்கள். தாயுடன் இருக் கும் போது ஆண் பிள்ளைகள் அம்மா போல பாசமான மனைவி அமைந்தால் சொர்க்கம் என்று நினைப்பது போலவே தான் திருமணமான பின்பு பெண்களும் தத்தம் தந்தை போல பாசமான ஒரு கண வனை எதிர்பார்க்கிறாள். திருமண மானபின் சில கணவன் மனைவிக்குள் சிறு சிறு சண்டைகள் பிரச்சினைகள் உருவாகி, பின்பு நாளடைவில் பெரும் விரிசல்களை ஏற்படுத்துகின்றது.

திருமணம் செய்யும்போது பல எதிர்பார்ப்புக்கள், கனவுகளுடனே ஒவ்வொரு பெண்ணும், ஆணும் தமது திருமண வாழ்வை வாழ விரும்புகின்றார்கள். ஆனால் சில தவறான வார்த்தைப் பிரயோகங்களே குடும்ப பிளவுகளை ஏற்படுத்துகின்றது. இது ஏன்? உதாரணமாக பிறந்தவொரு குழந்தைக்கு பால் கொடுக்கும் போது கோப்பைக்குள்ளோ அல்லது ஒரு குவளையிலோ கொடுக்கும் போது அந்தக் குழந்தையால் சரியாக அந்த உணவை உட்கொள்ள முடியாமல் போய் விடுகின்றது. தனது பசியைத் தீர்த்துக்கொள்ள முடியாத போதே குழந்தை அழுகின்றது. சரியான முறையில் உணவு அளிக்கப்படும் இடத்து பிள்ளை அழுவதை நிறுத்திவிடும். இதே போல கணவன் மனைவி உறவுக்குள் ளும் நிலவும் அன்பை வளர்த்துக்கொள்ளக் பொருத்தமான முறையில் தேவையான போது வேண்டிய கனிவான வார்த்தைப் பிரயோகங்கள் தான் உறவை வளர்த்துக்கொள்கின்றது. ஆத்திரத்தில் பேசி விட்டு மன்னிப்புக் கேட்பதும் வீணான மன உளைச்சலுக்கும் உள்ளாகி விரக் தியின் விளிம்பில் போய் தூக்கு மாட்டி செத்தால் என்ன என்று முடிவுகள் எடுப் பதும் எதிர்பாராத அன்பு கிடைப்பதி னாலே. எது எவ்வாறாயினும் உங்களுக்கு என்று தெரிந்து எடுக்கப்பட்ட உறவை இறுதிவரை அன்போடு நேசிக்க வேண் டும். உங்கள் கணவன் ஆக இருந்தாலும் சரி, மனைவியாக இருந்தாலும் சரி, உங்கள் இன்ப துன்பங்களை மனம் விட்டு பேச இறைவனால் எனக்கு அளிக் கப்பட்ட ஒரு அற்புதமான உயிரினம் எனது வாழ்க்கைத் துணை என்று ஏற்று இல்லற வாழ்வை நல்லறமாக வாழ்ந்து ஏனையோருக்கும் திருமணம் செய்து இவர்களைப் போல வாழ வேண்டும் என்ற எண்ணங்களை உருவாக்க நீங்கள் இருவரும் ஒருவராக வாழ்க்கையில் விருப்பை ஏற்படுத்துங்கள். தத்தம் துணையை தெரிவு செய்து தமது வாழ்க்கை முழுவதும் வாழ ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தத்தம் துணையின் விருப்பு வெறுப்புக்களை நேசித்து வாழ்க்கை முழுவதும் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். வாழ்வில் எதுவும் நிரந்தரம் இல்லை என்ற எண்ணத்தை மனதிலே வைத்துக் கொண்டு உண்மையான அன்புக்கு அடி பணிந்து அத்தகைய அன்பை உங்கள் கணவருக்கோ அல்லது மனைவிக்கோ கொடுங்கள். உண்மையான அழகு என்பது அகக் கண்களால் தோன்ற வேண்டுமே ஒழிய புறக் கண்களால் தோன்றக் கூடாது. புறத்தோற்றத்தை பார்த்து காதலித்துக் கல்யாணம் செய்வதாலேயே இன்றைய காலகட்டத்தில் பல விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி உங்கள் துணைவர் உங்களோடுதான் இறுதிவரை உறவாய் இருப்பார் என நினைத்து உங்கள் இன்ப துன்பங்களை உங்க ளுக்குள்ளே கதைத் துப்பேசி விட்டுக்கொடுத்து வாழ் வீர்களா னால் வீதி வரை சென்று விவாதம் செய்து சட்டத்தரணியிடம் போய் விவாகரத்து கேட்கும் நிலை ஒருபோதும் தோன்றாது. எனவே எமக்கு கிடைத்த வாழ்க்கையைப் பிறர் போற்றும்படி வாழ்ந்து காட்டி திருமண வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உலகுக்கு உணர்த்துவோம்.



# சோள புட்டு

மாலை வேளையில் பசிக்கும் போது, வடை, பஜ்ஜி என்று மட்டும் செய்து சாப்பிடாமல், ஆரோக்கியமாக புட்டு செய்து சாப்பிடலாம். அதிலும் எப்போதும் போல ஒரே மாதிரியாக அரிசி மாவை கொண்டு மட்டும் புட்டு செய்யாமல், சோளம் பயன்படுத்தி செய்து சுவையுங்கள். இங்கு சோளம் கொண்டு எப்படி புட்டு செய்வதென்று கொடுக்கப்பட்டுள் ளது. அதைப் படித்து செய்து சுவைத்துப் பாருங்கள்.

**தேவையான பொருள்கள்**

சோள ரவை – ஒரு கப்,
அரிசி மாவு – ஒரு கப்,
துருவிய தேங்காய் – ஒரு கப்,
உப்பு – தேவையான அளவு,
சர்க்கரை – ஒரு மேசைக்கரண்டி,
வெதுவெதுப்பான தண்ணீர் – 3/4 கப்

**செய்முறை**

முதலில் சோள ரவையை வாங்கி அதனை மிக்ஸியில் போட்டு அரைத்து பொடி செய்து கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பௌலில் அதனைப் போட்டு, அத்துடன் அரிசி மா , உப்பு, சர்க்கரை சேர்த்து, அத்துடன் வெதுவெதுப்பான நீரை சேர்த்து புட்டு பதத்துக்குப் பிசைந்து கொள்ள வேண்டும். பின்பு இட்லி பாத்திரத்தை எடுத்து, அதில் தண்ணீர் ஊற்றி, மூடி வைத்து கொதிக்க வைக்க வேண்டும். பிறகு இட்லி தட்டில் ஈரத் துணியை விரித்து, அதில் புட்டு மாவை தூவி தனியாக வைத்துக் கொள்ளவும். இட்லி பாத்திரத்தில் உள்ள தண்ணீர் கொதித்ததும், மூடியைத் திறந்து, அதில் இட்லி தட்டை வைத்து மீண்டும் மூடி வேக வைத்து இறக்க வேண்டும். இறுதியில் அதனை இறக்கி, அதன் மேல் துருவிய தேங்காயை போட்டு பிரட்டி பரிமாறினால், சோள புட்டு தயார்.



# பட்டுப்போன்ற தலை முடிக்கு முட்டை ஹேர் பேக்

*சிலருக்கு கூந்தல் பார்க்க கவர்ச்சி இல்லாமல் இருக்கும். மேலும் வலுவிழந்தும் காணப்படும். அப்படிப்பட்டவர்கள் இந்த ஹேர் பேக்கை பயன்படுத்தி பலன் பெறலாம்.*

**தேவையான பொருள்கள்**

முட்டைகள், தேங்காய் எண்ணெய்

**தயாரிக்கும் முறை**

முட்டையின் மஞ்சள் கரு இரண்டை எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டு, நுரை வரும் அளவுக்கு அதை நன்றாக அடியுங்கள். பின் அதனுடன் 2 தேக்கரண்டி தேங்காய் எண்ணெயைச் சேர்த்து நன்றாக கலக்கவும். உங்கள் தலைமுடியைக் கழுவிய பின்பு, இந்தக் கலவையை உங்கள் முடியில் தேய்த்து 5 நிமிடத்திற்கு அப்படியே விட்டு விடுங்கள்.
பின் தண்ணீரைக் கொண்டு முடியை கழுவினால் ஆழமான கண்டிஷனிங் பயனை பெறலாம். இப்படி செய்வதால் சொரசொரப்பான மற்றும் சுருண்ட முடி பிரச்சினைகள் நீங்கி தலை முடியை மென்மையாக மாற்றும்.

# கருவளையத்தை நீக்கும் சமையலறை பொருள்கள்



சமையலறையில் இருக்கும் ஒருசில பொருள்களைக் கொண்டே கருவளையங்களைப் போக்கலாம். அவை என்னவென்று பார்க்கலாம்.
தக்காளியை அரைத்தோ அல்லது வட்டமாக வெட்டியோ கண்களின் மேல் வைத்து, 10 நிமிடம் ஊற வைத்து பின் கழுவ வேண்டும். இப்படி தினமும் 2 முறை செய்து வந்தால், கருவளையங்கள் மறைந்து விடும்.
உருளைக்கிழங்கை சாறு எடுத்தோ அல்லது வட்டமாக வெட்டியோ கண்களின் மேல் வைத்து, 15 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி தினமும் தவறாமல் செய்து வர கருவளையம் காணாமல் போகும்.
க்ரீன் டீ பேக்கை நீரில் சிறிது நேரம் ஊற வைத்து, பின் அந்த டீ பேக்கை குளிர்சாதனப் பெட்டியில் சிறிது நேரம் வைத்து, கண்களின் மேல் வைத்து 10 நிமிடம் ஊற வைத்து கழுவினால், கருவளையம் மறைவதோடு, கண்களும் புத்துணர்ச்சி பெறும்.

# மலச்சிக்கலை நீக்கும் ஆசனங்கள்

உங்களுக்கு மலச்சிக்கல் பிரச்சினை வராமல் இருக்க தினமும் ஒருசில யோகாக்களைச் செய்து வாருங்கள். உடல் ஆரோக்கியமாக இருக்க யோகா பெரிதும் உதவியாக இருக்கும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்து, அதனைத் தவறாமல் செய்து வர வேண்டும்.

**பவனமுக்தாசனம்**

பவனமுக்தாசனம் செய்வதற்கு முதலில் தரையில் படுத்துக் கொண்டு, முழங்கால்களை மடித்து, மார்பை தொடும் வண்ணம் தூக்கி, பின் இரு கைகளால் முழங்கால்களைப் பிடித்து கொண்டு, தலையால் முழங்காலைத் தொட முயற்சிக்க வேண்டும். இந்த ஆசனத்தின் போது மூச்சை சீராக விட வேண்டும். இந்த ஆசனம் செய்து வருவதன் மூலம், மலச்சிக்கல் நீங்கி, தொடைகளில் உள்ள கொழுப்புக்கள் கரைந்து, சீரற்ற மாதவிடாய் சுழற்சி நீக்கி, இனப்பெருக்க மண்டலம் ஆரோக்கியமாக இருக்கும்.

**திரிகோணாசனம்**

முதலில் நேராக நின்று கொண்டு, வலது காலை சற்று பக்கவாட்டில் தள்ளி வைத்து, பின் கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டி, வலது கையால் வலது காலைத் தொட்டுக் கொண்டு, இடது கை மேல் நோக்கி நீட்டியிருக்க வேண்டும். இதேப்போன்று மற்றொரு காலிலும் செய்ய வேண்டும். இப்படி ஒவ்வொரு பக்கமும் 7 முறை செய்ய வேண்டும்.



**பாலாசனம்**

பாலாசனம் என்பது தரையில் உட்கார்ந்து கொண்டு, கால்களை பின்புறம் மடக்கி, கால்களின் மேல் அமர்ந்து, கைகளை பின்புறம் கட்டிக்கொண்டு, நெற்றி தரையை தொடும் படி குனிய வேண்டும். இந்த ஆசனத்தின் மூலம் மலச்சிக்கல் மட்டுமின்றி, மன அழுத்தம், சோர்வு நீங்கி, இடுப்பு, தொடை போன்றவை வலிமையடையும். முக்கியமாக இதனைத் தொடர்ந்து செய்து வந்தால், முதுகு வலி இருந்தாலும் குணமாகிவிடும்.



# உதடுக்கு லிப்ஸ்டிக் போடுவது எப்படி?

மெல்லிய, தடிமனான, சொப்பு என உதடுகளின் அமைப்பு, நிறம் ஆகியவற்றைப் பொறுத்து லிப்ஸ்டிக் பூசி மேலும் அழகாக்குங்கள். முகத்துக்கு ஏற்ற மாதிரி இல்லாமல் சிறிதாக சொப்பு போன்ற வாய் உள்ளவர்கள் லிப்ஸ்டிக்கை உதடுகளின் இரு முனைகளிலும் சற்று அதிகப்படியாக பூசுங்கள். வாய் சற்றுப் பெரிதாகத் தெரியும்.
தடித்த உதடுகள் உள்ளவர்கள் உதட்டுக்கு உட்புறமாக லிப்ஸ்டிக் போடுங்கள். இயற்கை நிற லிப்ஸ்டிக்கை இலேசாகத் தடவினால் போதும். மெல்லிய உதடு உள்ளவர்கள் கீழ் உதட்டில் டார்க் நிறமும் மெல்லிய நிறத்தை மேல் உதட்டிலும் பூசுங்கள். பின்னர் உதட்டுக்கு வெளியில் பென்சிலால் கோடு போடுங்கள். தடித்த உதடு என்றால் உட்புறமாக போடுங்கள். மாநிற பெண்கள்–லைட் ஒரேஞ்ச் கலர், கறுப்பு நிற பெண்கள்–லைட் சிவப்பு, சிவப்பு நிற பெண்கள் – லைட் ரோஸ் (பிங்க்) லிப்ஸ்டிக் பயன்படுத்தலாம். உதடுகளின் ஈரப்பசையை நீக்கிவிட்டு லிப்ஸ்டிக் போட்டால் சீக்கிரம் அழியாது. காலையில் லைட் கலர் லிப்ஸ்டிக்கும், மாலையில் பளிச் நிறத்திலும் போடுங்கள். ஆடைக்கு ஏற்ற நிறத்தைத் தேர்ந்தெடுத்துப் போடலாம். டார்க் கலர் போட்டால் வயது அதிகமாகக் காட்டும். லைட் கலர் கவர்ச்சியாக இருக்

# சிறகுகள் இல்லாத பறவை



“ பாதுகாப்பு என்ற போர்வையிலேயே பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள். உண்மையில் பெண்களுக்கு அந்தப் பாதுகாப்பு கிடைக்கிறதா? நீங்கள், நான் என்று ஒவ்வொருவருமே ஏதோ ஒரு வகையில் பெண்களுக்கான கொடுமைகளைச் செய்து கொண்டேதான் இருக்கிறோம்.

பெண் என்பவள் ஆணாதிக்கச் சமூகத்தில் சிக்கித் தவிக்கும், சிறகுகள் இல்லாத பறவை. அந்தப் பறவைக்கு அனைத்து சுதந்திரமும் கொடுத்து விட்டோம். ஆனால், பறவை கூண்டைவிட்டு எங்கும் செல்லக் கூடாது என்ற ஒரே ஒரு கட்டுப்பாட்டை மட்டும் செயல்படுத்த வேண்டும் என்கிறது இந்தச் சமூகம். அப்படியும் சில பறவைகள் கூண்டை விட்டு வெளியே வந்து வானில் சிறகு விரித்து பறக்கத் தொடங்கிவிட்டன. ஆனால், இன்னும் சில பறவைகளுக்கோ வாய்ப்புகள் மறுக்கப் படுகின்றன. மனிதனின் அடிப்படை உரிமை யான உடையில்கூட பெண்ணுக்குக் கட்டுப்பாடு தான். பெண்களை விலைப் பொருள்களாக மாற்றிவிட்ட ஊடகங்களும், திரைப்படங்களும்தான் இதற்குக் காரணம். பொழுதுபோக்குதானே, இதை ஏன் பெரிதாக எடுத்துக் கொள்கிறீர்கள் என்று பலர் கேட்கலாம். ஆனால் இன்றைய தலைமுறையினர் அதிலிருந்து கற்றுக்கொள்ளக் கூடாததை எல்லாம் நிறைய கற்றுக் கொள்கிறார்கள் என்பதுதான் நிதர்சனம்.

பாதுகாப்பு என்ற போர்வையிலேயே பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள். உண்மையில் பெண்களுக்கு அந்தப் பாதுகாப்பு கிடைக்கிறதா? நீங்கள், நான் என்று ஒவ்வொருவருமே ஏதோ ஒரு வகையில் பெண்களுக் கான கொடுமைகளைச் செய்து கொண்டேதான் இருக்கிறோம். இங்கே யாரையும் தனித்துக் குறை கூறுவதிற்கில்லை. சாதுவாக, அமைதியாக இருப்பதற்குப் பெண்மை என்று பெயரில்லை. பெண்மை என்பது வீரம் நிறைந்தது. ஆனால் அந்தப் பெண் மையை இந்தச் சமூகம் தன் கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்துக் கொள்கிறது. மாற்றம் முதலில் பெண்ணிடம் இருந்தே வர வேண்டும். தனக்கு என்ன தேவையோ அதைத் துணிச்சலோடு எடுத்துச் சொல்லும் மன உறுதி பெண்களுக்குத் தேவை. பெண்கள் தங்களுக்குத் தேவையான உரிமைகளுக்காக யாரிடமும் யாசகம் கேட்கத் தேவையில்லை. இந்தச் சமூகம் பெண்ணை கண்ணே, மணியே என்று பாராட்டி, வேலைக்காரி யாக மட்டுமே வாழப் பணிக்கிறது. எப்போதும் எதற் காகவும் பெண் ஒரு குறுகிய வட்டத்துக்குள் தன்னை குறுக்கிக் கொள்ளக் கூடாது. கனவுகள் சுமந்த பெண்ணே, கலங்கி நிற்காதே. விடியும் பொழுது உனக்காகத்தான்

## பெண்கள் விடயத்தில் மாற்றமடையாத சமூகம்



**இன்றைக்கும் பெண் அலுவலகம் ,குடும்பம் என்று இரட்டை சுமைகளை தாங்கி கொண்டு வலம் வருகிறாள். அதற்கு காரணம் அவளின் பொறுமை, பொறுப்பு, சகிப்புத் தன்மை, ஆனால் அந்த தன்மைகளை தகர்க்க நினைக்கும் போது அவள் பூகம்பமாய் சீறுகிறாள்.**

ஆண்துணை இல்லாமல் தனித்து இருக்கும் பெண் சமூகத்தின் கண்களால் ஆரோக் கியமாக பார்க்கபடுவதில்லை. இதையெல் லாம் நூற்றாண்டுகள் பின்னோக்கி இருந்த நிலை என்று சொல்லாதீர்கள் இன்றைக்கும் பெண் பெரிய மாறுதலை சந்திக்கவில்லை. புறத் தோற்றத்தில் நாகரிகத்தின் உச்சத்தில் இருந்தாலும் அகத்தில் அவள் மரபுச் சிறைக்குள் கைதியாக தான் இருக்கி றாள். சிறைக் கதவை திறந்தாலும், சிறகுகள் இருந் தாலும் பறக்க முடியாத நிலையில் இருக்கிறாள். காரணம் நூற்றாண்டு காலமாக இருண்மைக்குள் இருந்து பழக்கப்பட்ட கண்கள் வெளிச்சத்தை பார்க்கும் போது கூசுகிறது. அந்த கூச்சத்தை அகற்றி உலகை பார்க்க பெண் முனைப்போடு வர வேண் டும் தன்னுடைய கண்களால் உலகை பார்க்க எப் போது வருகிறாளோ அன்றைக்கு அது அவளுக் கான நாளாக இருக்கும். பெண்கள் இயல்பிலே சகிப்பு தன்மை கொண்டவர்கள் அதனால்தான் உலக உயிர்கள் அனைத்தையும் தாங்கும் பூமியை பெண்ணாக பார்த்த நம் முன்னோர்கள் பெண் ணுக்கான மரியாதையை கொடுத்தார்கள். அவளை தெய்வ வடிவமாக பூஜித்தார்கள் ,பெண் குழந்தை பிறந்துவிட்டால் “லட்சுமி பிறந்துவிட்டாள் இனி எல்லாம் நன்மையாக இருக்கும்” என்று கொண் டாடினார்கள். ஆனால் இன்றைக்கு அதற்கு நேர் எதிராக பெண் இழிவுப் படுத்தப்பட்டு சிதைக்கப் பட்டு, அழிக்கப்படுகிறாள். பெண்ணை சக மனுசியாக பார்க்க தவறியதால் இந்த சமூகம் தீவிரவாததிலும், வன் முறையிலும் அழிந்து கொண்டு இருக்கிறது. இயற்கை கூட அதன் கோபத்தை வெளிபடுத்துகிறது. ஒரு நாடு வளமுடன் இருக்குமானால் அங்கு பெண்ணை போற்றுகிறார்கள் என்று அர்த்தம். ஒரு நாடு வளம் இழக்கிறது என்றால் அங்கு பெண் அழிந்துகொண்டு இருக்கிறாள் என்று அர்த்தம் .

இன்றைக்கும் பெண் அலுவலகம் ,குடும்பம் என்று இரட்டை சுமைகளை தாங்கி கொண்டு வலம் வருகி றாள். அதற்கு காரணம் அவளின் பொறுமை, பொறுப்பு, சகிப்புத்தன்மை ஆனால் அந்த தன்மைகளை தகர்க்க நினைக்கும் போது அவள் பூகம்பமாய் சீறுகிறாள். ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்வு சிறப்பானது அந்த சிறப்பான வாழ்வை வாழ பெண்களுக்கு வழி விடுங்கள் அவளை போற்ற வேண்டாம் குறைந்த பட்சம் அவளை அவளாக மதித்து நடத்துங்கள். அவளை இயல்பாக இருக்க விடுங்கள் நீங்கள் வரைந்த வட் டங்களில் அவளை அடைத்து வைக்க நினைக்காதீர் கள். பெண்ணுக்கு ஆண்களால் இழைக்கப்படும் குற் றங்களை போல பெண்களாலும் மனதளவில் பாதிக்க படுகிறாள் ஆகவே வேறுபாடற்ற மனிதநேயமிக்க ஒரு சமத்துவ சமூகம் உருவாகும் போது பெண்மை போற்றப்படும்.

cmyk

த.மோகன்ராஜ்,
"மடத்துக்கடவை"



# மாற்றப்படும் தலைவிதிகள்....!

தம்பி! எப்படியடா சோதினை?" வடிவாச் செய்தனியே? சும்மா சத்தம் போடாம இருங்கோ அம்மா நான் நல்லாத்தானே எழுதினான்."ஏனோ தெரியாது? நான் நானாகவே உணர்ந்து படிப்பன் யாரும் படிப்பைப் பற்றி கேள்விமேல் கேள்வி கேட்டா எனக்கு ஒரே எரிச்சலாத்தான் இருக்கும். மீண்டும் அம்மாவின் கதாப் பிரசங்கம்.... இங்கபார் தம்பி! அப்பாவா லையும் ஏலாது படுத்த படுக்கையாக படுத்திருக்கின்றார்.

கடவுளே! என்ரை மூத்தவன் இருந்திருந்தா நான் இவ்வளவு கஷ்டப் படத்தேவையில்லை. அந்தப் பிள்ளை கூலிவேலை செய்தாவது எங்களையெல்லாம் காப்பாத்தினவன், சாப்பாட்டுக்காவது கஷ்டப்படாமல் இருந்தனாங்கள். இப்ப.................? ஐயோ! என்று கடவுளே உனக்கும் கண்ணில்லையோ? என்ரை இளந்தாரி எங்கட கண்ணுக்கு முன்னுக்கு இந்த பாழ்பட்டுப் போன சண்டையால ஷெல்பட்டு கடவுள் கொண்டு போயிட்டானே! தகப்பனுக்குக் கொள்ளி வைக்கிற நேரத்தில என்ரை பிள்ளைக்குத் தகப்பன் கொள்ளி வைக்க வேண்டியிருக்கே! என்னை எடுத்தியே! இல்லாட்டிலும் இந்தப் படுத்த படுக்கையில கிடந்து கஷ்டப்படுதே இந்த மனுஷன் இரண்டு பேரில ஒருவரையாவது எடுத்திட்டு என்ரை பிள்ளையை வாழவைச்சியே! என்ன கொடுமை கடவுளே!.............. இவ்வாறாக இன்னும் அம்மாவின் ஒப்பாரி தொடர்ந்த வண்ணம்............. இருந்தது.

எனக்குமோ அம்மாவின் ஒப்பாரியைக் கேட்டதும் அண்ணனின் கடந்த கால நினைவுகள்.... கண்ணுக்குள் நிழலாட கண்கள் குளமாகி... நெஞ்செல்லாம் கனக்கவே.... நான் அந்த இடத்தில் இருந்து நகர்ந்து கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துவாயால் கண்களைத் துடைத்துவிட்டு துணிந்தவன் போல அம்மாவின் அருகில் சென்று "அம்மா! அழாதேங்கோ நடந்ததெல்லாம் நடந்து போச்சு! உங்களைப் பாத்து தங்கச்சிமாரும் அழுகுதுகள், அப்பாவும் வருத்தத்தில் கிடந்து கொண்டு அண்ணாவைப் பற்றி யோசிக்கிறது போதாமல்...உங்களைப் பற்றியும்யோசிக்கப்போறார்" சரி நான் இருக்கிறன் தானே அம்மா உங்களை எல்லாம் வடிவா உழைச்சுப் பாப்பன் தானே அழாதேங்கோ.

அம்மா மெதுவாக எழுந்து, தம்பி! சோதினைக்குஇரண்டு மாதங்கள் தான் இருக்கடா நீ இந்தக்கவலைகளையெல்லாம் விட்டு நல்லாப் படியப்பு. என்றவாறு அடுப்படியை நோக்கி நகர்ந்தார். தனக்குள் இருக்கும் கவலைகளை எனக்கு இப்போ தெரியப் படுத்துவதில்லை. அழுவதும் இல்லை "தூண்டிலில் அகப்பட்ட மீன் போல " மனதுக்குள் தவிப்புக்கள் ஆனாலும் எனக்கு ஏ.எல்.சோதினை நெருங்குவதாலோ என்னவோ?

சோதினையும் தொடங்கி முடியவும் போகிறது. இன்று இறுதிப் பாடம் "அப்பாடா.....! ஒரு மாதிரி இன்றோடு சோதினை முடிஞ்சுது!" என்று பெருமூச்சு விட்டபடி பாடசாலையிலிருந்து வெளியே வந்து சைக்கிளை மிதிக்கின்றேன்.... எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கு "மூன்று ஏ"(3ஏ) சித்திகள் கிடைக்கும். ஏனென்டால் படிச்ச மாதிரியே பிழைகளின்றி எழுதினான். வகுப்பிலேயும் இரண்டு வருடங்களும் நான்தான் முதல் மாணவனாகவும் சித்தி பெற்றிருக்கிறன், இதைவிடவும் எனக்கு அசையாத நம்பிக்கை இரண்டாம் பாடம் தொடங்குவதற்கு முதல்நாள் இரவு சரியான மழை. மழை பெய்தால் எங்கட வீட்டில உள்ள பாத்திரம் எல்லாம் வீட்டை அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறைத்து விடும். வீட்டுக்குள் கட்டிய குளங்கள் போல் இதற்கிடையில் எனது புத்தகம், கொப்பிகளையும் தங்கைமாரின் பாடசாலை உபகரணங்களையும் ஒழுக்கிலிருந்து பாதுகாக்கவும் அன்று இரவு நான் பட்ட பிரயத்தனங்களுக்குள்ளும் படித்தவையும் சொல்லில் அடங்கா

என்ன செய்வது? நன்றாகப் படித்து "கம்பஸ்" போக வேணும் என்ற ஆசையும் குடும்பத்தைத் துன்பத்திலிருந்து மீட்டுக்கொள்ள நிரந்தரமான ஒரு உத்தியோகத்தைப் பெற வேண்டும் என்பதாலும் இவையெல்லாம் எனக்கு பெரிய கஷ்டங்களாகத்தோன்றவில்லை. இத்தனை கஷ்டங்களுக்குள்ளும் "நன்றாகப் படித்தேன்.... என எனக்குள் பல கற்பனைகளை அடுக்கிச் செல்கின்றேன்..." அவ்வாறாக கற்பனைகள் மனதுள் பரந்து விரிய வீட்டுக்குள் நுழைகின்றேன். அம்மாவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது....! என்னைத் திடப்படுத்திக்கொண்டு அம்மா வின் அருகே செல்கின்றேன்.

"தம்பி! எப்படியடா சோதினை?" வடிவாச் செய்தனியே? சும்மா சத்தம் போடாம இருங்கோ அம்மா நான் நல்லாத்தானே எழுதினான்."ஏனோ தெரியாது? நான் நானாகவே உணர்ந்து படிப்பன் யாரும் படிப்பைப் பற்றி கேள்விமேல் கேள்வி கேட்டா எனக்கு ஒரே எரிச்சலாத்தான் இருக்கும். மீண்டும் அம்மாவின் கதாப் பிரசங்கம்.... இங்கபார் தம்பி! அப்பாவாலையும் ஏலாது படுத்த படுக்கையாக படுத்திருக்கின்றார். கொண்ணனும் இல்லை உன்ரை தங்கச்சிமார் இரண்டு பேரும் உன்னை நம்பித்தான் இருக்கினம். அது கனவு. ஒரு மாதிரி படிப்பிச்சு கரைசேர்க்க வேண்டிய பொறுப்பு உன்ரை கையிலதான் இருக்கு "ஏதோ எல்லாம் கடவுள்தான்" எனக் கெண்டா ஒண்டும் தெரியேல்ல....? இவ்வாறாக அம்மாவின் ஒலி அநாகதமாக....

அம்மாவின் அறிவுரைகளையும் எனது எதிர்காலப் பொறுப்புக்களையும் எல்லாம் சிந்திக்கின்ற போது... சில வேளைகளில் இவையெல்லாம் என்னால் சுமக்க முடியாத சுமைகளைப் போல் இருப்பதை நான் இடையிடையே உணர்வதும் உண்டு. இருப்பினும் "தன் குடும்பம் துன்பக் கடலில் மூழ்கும்போது அதிலிருந்து அவர்களை மீட்பது தலைமகனின் பொறுப்பு" என்பதற்கு இணங்க இப்போதோ நான்தான் வீட்டில் தலைமகன். இருப்பினும் பக்குவப்படாத வயது. ஆனால் என்னிடம் இருப்பது "தன்னம்பிக்கை" ஒன்று மட்டும்தான்.

இதற்கிடையில் நண்பர்களின் அன்புக்கும் நான் ஆட்பட வேண்டிய தேவை! படிக்கிற காலத்தில் என்னிடமிருந்த இரண்டு "யூனி போம்களையும்" அம்மா வடிவாக "உஜாலா நீலம்" போட்டு கரிப்பெட்டியால் அயன்பண்ணித் தருவதுண்டு. இதனால் பழுப்படைந்து பென்சன் பெறும் காலத்திலும் எனது ஜீன்ஸ் அழகாக இருப்பதுண்டு. இதனால் எனது நண்பர்களுக்கு எனது குடும்ப வறுமை புரியவில்லையோ? என்னவோ? தெரியாது. நானும் என் முக பாவனையில் கூட வறுமையைக் காட்டிக் கொள்வதில்லை. ஆனால் என்னை நான் உணர்ந்து கொள்ளக் கூடிய ஒருவனாக இருந்திருக்கின்றேன். ஏனெனில் எனது குடும்பநிலை எனக்கு மட்டும் தெரிந்தமையால்.

சோதினை முடிஞ்சுது லீவை எப்படிக்கழிப்பது? என நண்பர்களின் ஏக்கம்! ஆனால் எனக்கோ ஒரே திண்டாட்டம்! நண்பர்களில் சிலர் படம் பார்க்க "தியேட்டர்" போவதெனவும், இன்னும் சிலர் "ரூர்" போவதெனவும்...பல்வேறு திட்டங்களைத் தீட்ட அதற்குள் என்னையும் "வாடா மச்சான்..." என்ற பாசப்பிணைப்பு. ஆனால் எனக்குத் தெரியும் "பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும்" என நான் சென்று யாரிடம் கேட்பது? அம்மாவிடம் ஒரு சல்லி காசு கூட இடுப்பில் இருப்பதில்லை. அங்க, இங்க கடன்வாங்குவதும் தனது ஒரு சங்கிலியையும் ஒருசோடி .காப்பையும் அடைவு வைப்பதும், மீட்பதும், கடன் கொடுப்பதும் என குடும்பச் சக்கரம் சுழன்றுகொண்டிருக்கிறது. இதற்கிடையில் ஆக மிஞ்சிப் போனால் வீட்டுக் குசினியிலுள்ள சீரகம்,மிளகு, வெந்தயம் போன்றவை போடப்பட்டிருக்கும் போத்தல்களை தடவிப் பார்த்தால் ஒரு ஐந்து ரூபாவோ. பத்து ரூபாவோ, சில சில்லறைகளோ தடக்கும். அதைவிடவும் எனக்கு களிப்பூட்டுவது அந்த சில்லறைக் குற்றிகளில் இருந்து எழும் சீரக வாசனை... இந்தப் பணம் எப் படிப் போதும் "ரூர்"போக இவற்றையெல்லாம் நண்பர்களுக்குக் காரணம் காட்டாது, மச்சான்எனக்கு கொஞ்சம் வேலை இருக் கடா என்று கூறித் தட்டிக் கழித்து விடுவேன். அவர்களின் மனதுக்கும் கசப்பில்லாத படி....

இவ்வாறாக நண்பர்கள் ஒரு புறம் லீவை சந்தோஷமாகக் கழித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கோ தலையில் ஏதோ "இரும்புக் குண்டொன்றை கட்டிவிட்ட பாரம்" "றிசல்ஸ்" வரும் வரை ஏதாவது ஒருவேலை செய்து வீட்டுக் கஷ்டத்தை ஓட்ட வேண்டிய நிலை. படித்துப் பட்டம் பெறுமுன்னே எனக்கு "வேலைதேடும் படலம்..." அப்போது கூட எனக்குள் ஒரு சிந்தனை. எமது நாட்டில் படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகள் எத்தனைபேர் வேலைக்கு காத்திருக்கும் காலம், வேலையில்லாத அவலம். இதெல்லாம் இப்படி இருக்க எனக்கு என்ரை அவசரத்துக்கு அரச உத்தியோகம் எப்ப கிடைக்கப்போகிதோ...? இல்லையென்று தனியார் நிறுவனத்துக்குச் சென்றால் எம்மைப் போன்றவர்களை வைத்துத்தான் அவர்கள் "றியே சல்" பார்ப்பார்கள். அதுவும் குறைந்த சம்பளத்தில் இவ்வாறான மாதச் சம்பளத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மாற்றப்படும் தலைவிதிகள்....!

## தொடர்ச்சி



(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

வாழும் நிலையிலும் தற்போது எனது குடும்பம்...?

ஏதோ என்னால் இயலுமானவரை நாள் கூலிக்கு "பெயின்ரிங் வேலை" செய்தேன். சித்திரக் கலையில் ஆர்வம் இருந்தமையால் படங்கள் ஓவியங்கள், சிற்பங்கள் என செய்து கொடுத்து ஓரளவு வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பணம் இப்போது புரளத்தொடங்கியது ஒரு பக்கம் சந்தோசம்!இருப்பினும் எனது எதிர்பார்ப்பு சிந்தனை முழுவதும் பரீட்சை முடிவுதான்...

அன்றும் வழமைபோல வேலை செய்த களைப்புடன் நித்திரை கண்ணை முட்ட வானொலியைச் செவிமடுக்கின்றேன் "இன்று நள்ளிரவு க.பொ.த.(உ.த) பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும்" என்ற செய்தி செவிகளில் பட, படுக்கையில் இருந்து தலையைத் தூக்கி உன்னிப்பாய்ச் செவிமடுக்கின்றேன். தூக்கமோ.... "வெயிலைக் கண்ட பனிபோல" விலக ... சேவல் கூவுகிறது. படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்து கடைக்குச் சென்று பத்திரிகை ஒன்றை வாங்கினேன். அதிலும் கட்டமிடப்பட்ட செய்தியாக பரீட்சை முடிவுகள் பற்றிய செய்திதான். இவ்வாறாக ஒவ்வொரு நாளும் பரீட்சை முடிவுகளை ஆங்கிலத்தில் உச்சரிப்பது காற்றோடு கலந்து செவிகளை நிறைக்கின்றது. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் தத்தமது கைத்தொலைபேசிகளிலும், இணையத்தளங்களிலுமாக பெறுபேறுகளை அறிந்து கொள்வது காட்டுத்தீயாய் பரவ... எனது சுட்டிலக்கத்தையும் ஆசிரியர் ஒருவரிடம் வழங்கினேன். "3பி" என்ற எனது பெறுபேறு என் சிந்தையை மயக்க எனது உள்ளத்தில் கற்பனைகள்யாவும் தீயாய் எரிவதை உணர்கின்றேன்... எனக்கோ ஏதும் புரியவில்லை! இத்தனை நாள்களாக எனது குடும்பத்தின் எதிர்பார்ப்புக்கள், வறுமையின் நெருடல்கள் என பல்வேறு சம்பவங்கள் தற்போது என் முன்னே மேலும் தலை விரிகோலமாய் தாண்டவமாடுவதையும் எனது கற்பனைகள் யாவும் சிதைந்து போன சிலையாகவும் மாற....எனக்குள் ஒரு பிரமை.....?

அப்படியே வீட்டினுள் கொடியில் தொங்கிக் கொண்டிருந்த அம்மாவின் ஒரு சேலையையும் நான் உட்கார்ந்து படிக்கும் ஸ்ரூலையும் தூக்கிக்கொண்டு வீட்டின் பின்புறமாகச் செல்கின்றேன்... என் இதயம் தற்போது "கற்பனைகளால் ஊதிப்பருத்த பலூன் குண்டூசி முனையில் வைக்கப்பட்டிருப்பதாய் உணர, அசைவற்ற ஜடமாகி, மதில் மேற் பூனையாக சேலையை இறுகப் பற்றி சுருக்கினுள் தலையை நுழைக்கும்போது.....! "மச்சான் ரிசல்ஸ் எல்லாம் மாறி வந்திட்டுதடா!" இப்ப திருத்தியமைக்கப்பட்டு "புதிய ரிசல்ஸ்" வந்திட்டுதடா! உனக்கு '3ஏ' ஆம்! மாவட்ட நிலை யும் முதலாவதாமடா! எனது நண்பன் ராஜ் கத்திக் கொண்டே ஓடி வருகின்றான்.... அப்போது எனது எண்ணங்கள் எனது சிந்தையைத் தொடவே சுய நினைவுக்கு வருகின்றேன். எனது கைகளையும் உடலினையும் கால்களையும்...ஓரிருவர் தாங்கிப் பிடித்த படி என்னடா படிச்சு றிசல்ஸ் வராட்டி இப்படி....?விபரீதமான முடிவுக்கே வாறது? நீ ஒரு படிச்ச புத்திசாலி பெடியன் என்று நாங்கள் நினைக்க .... ச்சீ, ச்சீ யோசிக்கவே வெட்கமாக இருக்கு என பக்கத்துவீட்டு கமலம் அன்ரியின் வாய் முணு முணுக்கவே... கீழ் நோக்கிப் பார்க்கின்றேன்... அருகிலே அம்மா! தங்கைகள், முச்சக்கரவண்டியில் அப்பா, எனது அன்புத்தோழன்! உறவுகள், ஊர் மக்கள்... என....? நம்பிக்கையாலும், உயரிய முயற்சிகளாலும் தியாகத்தாலும் நான் அடைந்த வெற்றியை... மகிழ்ச்சியாக...?அனுபவிக்க முடியாதவனாய்.....!"மாற்றப்படப்பார்த்த என் தலைவிதியாக" எண்ணி... எனக்குள் நானே.......?

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 364

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ✿ | 4 | 5 | 6 |
| 7 | | | ✿ | 8 | | | |
| 9 | | | | | | ✿ | |
| | ✿ | | | 10 | | 11 | ✿ |
| ✿ | 12 | | 13 | | ✿ | 14 | 15 |
| 16 | | ✿ | | ✿ | 17 | | |
| 18 | | | ✿ | 19 | | ✿ | |
| 20 | | ✿ | 21 | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................................

பூரணமாக தபால் விலாசம்: ..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

### இடமிருந்து வலம்

1. சாதகமானது அல்ல
4. பதற்றம்
7. இரந்து பெறுவது
8. ஒரு யோகம்
9. தமிழ் அரசியல் கட்சியொன்றின் தலைவர்
10. பசுவை இப்படியும் அழைப்பர்
12. அரி
14. சீமெந்துடன் கலந்து பயன்படுத்தப்படும் ஒரு வர்ணப் பொருள்
16. (மீனை) துண்டாக வெட்டிய பகுதி
17. ஒரு கண்டம்
18. கெண்டை மீன்
19. ஒன்றுடன் ஒன்றைச் சேர்
20. உடலுக்கு மிகவும் தேவையான உலோகச் சத்து
21. இது திரண்டால் மிடுக்காமே

### மேலிருந்து கீழ்

1. திரவ வடிவிலான உணவுப் பதார்த்தம்
2. பத்து என்பதைக் குறிக்கும்
3. (பெரும்பாலும்) ஆட்டு ரோமத்தின் இழைகளால் நெய்யப்பட்டது.
4. விசாலமான
5. வடக்கு என்பதன் பெயரடை
6. ஒரு நாட்டின் தலைநகரம்
8. நூறு பாடல்களால் ஆன சிற்றிலக்கிய வகை
11. ஒரு தமிழ் மாதம்
12. குறுகிய ஒன்று
13. அறிவு
15. ஒரு கிழமையில் உள்ளடங்கியுள்ள ஒரு நாள்.
16. முன்னிலையில்
17. ஒரு மரம்
19. இடத்தை, பொருளை, நபரைத் தாண்டிச் செல்லுதல்.

---

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 362 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விவசாயி (4) மாதவி (7) வாரம் (8) ஈர்க்கு (9) தம்பிமார் (11) கதி (12) ராசி (13) மது (14) அணி (15) அரி (17) திண் (18) நடித்தல் (19) கடகம் (21) தில்லை (22) கல்லாமை

### மேலிருந்து கீழ்

(1) விவாதம் (2) வரம் (3) சாம்பிராணி (4) மார் (5) தக்கது (6) விகுதி (8) ஈர் (10) மாசி (13) மரித்தல் (14) அண்டல் (15) அடி (16) கொல்லாமை (17) திகதி (18) நம் (20) கலை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.364 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (22.04.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.364 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.04.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

---

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 362 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
சு.யசீலன்,
கொக்காம் பாலை,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

**2 ஆம் பரிசு**
அபிராமி சிவகுமாரன்,
இல.36, கரம்பைக்காடு,
வவுனியா.

**3 ஆம் பரிசு**
தே.எறிக் தேவமைந்தன்,
மெதடிஸ்த திருச்சபை,
ஓட்டுமடம், வண்ணார்பண்ணை.

**4 ஆம் பரிசு**
ரமேஷ் கஜமதி
இல.18 - 7/4, பெரெயிரா வீதி,
கொழும்பு - 6

**5 ஆம் பரிசு**
த.அஜந்தராஜா,
பிரதான வீதி,
மாதகல்.

**பாராட்டுப் பெறுவோர்**

மு.அமுதலிங்கம்
சன்னதி வீதி,
இடைக்காடு,
அச்சுவேலி.

சி.ஜெகசோதி,
இல.49/4, புதுவளவு,
ஏழாலை மேற்கு, ஏழாலை.


இ.இராஜேந்திரா,
இல.21 - B கனகரட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி 362 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# மேட்டு நிலத்து ஊற்று

தேவி பரமலிங்கம்

தொடர்கதை



"என்ன மச்சான் தந்தி..." பாலசிங்கம் விசாரித்துக் கொண்டே வந்து சேர்ந்தான். அவனுடைய வருகை அந்தநேரம் பெரிய அனுகூலமாக அமைந்தது. பல தடவைகளில் அவனது குறுக்கீடு உபத்திரவமாக அமைந்ததுமுண்டு.

ஆனாலும் தன்னுடைய இயலாமையை தூண்டும் தந்தியைப் பார்த்து ஆடிப்போய் தடுமாறி நிற்கையில் பாலசிங்கத்தின் வருகையானது அனுகூலமாகவே அமைந்தது கணேசனுக்கு.

"ஓம் மச்சான்.... அம்மாவுக்குச் சுகமில்லை எண்டு வந்திருக்கு" உடனே கணேசன் சொல்லி முடித்திருந்ததை அவதானித்த பாலசிங்கம் கேட்டான் "ஏன் மச்சான் அதுக்குப் பதறுகிறாய். " "இல்லை மச்சான் உனக்கு விளங்காது. அவவுக்கு ஒண்டெண்டா பக்கத்தில் நான் இல்லாமல் ஒண்டும் நடக்காது..

ஏனெண்டா உதவியில்லாத தனிச் சீவனது..." குரல் தளதளக்கக் கூறினான்.

"கணேசன் எனக்கு விளங்கும்... நீ உன்ர அம்மாவில எவ்வளவு அக்கறை உள்ளனியெண்டு... அதால ஊருக்குப் போகாமல் இஞ்ச நிண்டு சமாளிக்க மாட்டாய்..."

"ஏலாது மச்சான்... கட்டாயம் ஊருக்குப் போயோ ஆக வேணும்...." பாலசிங்கம் கதை கூறி முடிக்க முன் பாகவே கணேசன் சொன்னான் .

"அப்புடியெண்டால் இப்புடி செய் கணேஸ்... ஐஞ்சு நாள் லீவை எழுதிக் குடுத்திட்டு ஊரில போய் ஒருகிழமை நிண்டு அம்மாட வருத்தத்தைப் பாத்திட்டு வரலாம் ...ஏனெண்டா இடேல சனி, ஞாயிறும் வருகுது எல்லோ..." இந்த யோசனையை மட்டுமே பாலசிங்கத்தால் சொல்லக் கூடியதாய் இருந்தது. அதை ஏற்றுக் கொண்ட கணேசன் சொன்னான்.

"ஓம் மச்சான் அப்புடித்தான் செய்வம்"

லீவு எழுதிக் கொடுத்து, யாழ்ப்பாணம் போய்த் திரும்பும் றெயில் வாரண்ட் முடித்து, தங்கும் வீட்டைச் சேர்ந்த போது முற்பகல் பத்து மணிக்கும் மேலாகி விட்டது.

கணேசன் வந்ததும் ஒன்றும் பேசாமல் அறைச்சாவியை எடுத்து உள்ளே நுழைந்ததை நடு அறையில் நின்று கண்ட பாமாவினுடைய உள்ளம் பலவாறாய் யோசனை செய்தது. வழக்கம் போல வேலைக்குப் போயிருந்தவன் கடமை நேரத்தில் வந்து அறையிலே நுழைந்ததைப் பார்த்த அவளுக்குத் தந்தி கிடைத்து ஊருக்கு வெளிக்கிடும் உண்மை எங்கே தெரியப்போகிறது? "அம்மா... அவர் வந்து அறைக் குள்ளே போயிருக்கிறார்... என்னெண்டு போய் விசாரி யுங்கம்மா..."

குசினிக்கு ஓடிப்போன பாமா தாய்க்குச் சொல்லிக் கொண்டு இருக்கையில் முகம் கால் கழுவப்போன கணேசன் சொல்லியவனாய் அவசர அவசரமாய் பாத்ரூமுக்குள் நுழைந்தான். "அம்மாவுக்கு சுகமில்லையெண்டு தந்தி வந்திருக்கு... அதுதான் ஊருக்கொருக்காப் போட்டு வர வேணும்..." அவ்வார்த்தைகளைக் காதுற்ற பாமாவின் இதயம் சில வினாடிகள் ஸ்தம்பித்தது.

"ஊருக்குப் போகப் போறாரா..."

கேள்வியைத் தன்னுள்ளேமென்று விழுங்கினாள். பாத்ரூமால் வந்த கணேசன் விறாந்தையில் ஈரத்தைக் துவட்டிக் கொண்டு நின்றான். பாமாவும் பின்னாலே வந்து வாசலுடன் சாய்ந்து நின்றாள் "கட்டாயம் நீங்க போக வேணுமா..." ஈனஸ்வரத்தில் அவள் கணேசனிடம் கேட்டதை வந்த விசாலாட்சி கேட்டுச் சொன்னாள்.

"என்ன பாமா கேள்வியது.... தாய்க்குச் சுகமில்லையெண்டு தந்தி அடிச்சிருக்க போகாமல் விடேலுமா..."

"ஓம் பாமா... அம்மாவுக்கு அங்கை ஒருத்தருமே உதவியில்லை ...போயிட்டு ஒரு கிழமேல திரும்பிடுவன்..."

இருவருக்குமாகக் கூறிய அவன் வெளிக்கிடுவதில் அவசரம் காட்டினான். அங்கிருந்து குசினிக்கு போன விசாலாட்சி மதிய உணவுக்குக் கொடுத்து விட மீதிச் சமையலையும் செய்து முடிக்கத் துரித மானாள்.

"அப்ப போட்டு வாறன் . எல்லோருக்கும்... ராஜன் டாட்ட..."

விடைபெற்று கணேசன் வீதியில் இறங்கி நடந்தான். இதுவரை எந்த உணர்ச்சியும் இல்லாமல் நின்ற பாமா அவன் தெருக் கோடியில் மறையும் வரை பார்த்திருந்தாள்.

காதலர் ஒருவரை ஒருவர் புரிந்து நெருங்கியதன் பின்பாக ஏற்படக் கூடிய சிறிய பிரிவு கூடத்தாங்க முடியாமல் இருப்பது பாமாவைப் பொறுத்தவரை, எவ்வளவுக்கு உண்மையா விளங்குது.

கணேசன் இவ்விதம் .... பிரிவான் என்பதை அறிந்திராத பாமாவின் இதயத்தைப் புரிந்தும் புரியாமல் அவன் பிரயாணம் போயிருப்பதால் அவளால் தாங்கும் சக்தி இருந்ததால் சமாளித்து விட்டாள்.

எனினும் அவ்வதிர்ச்சி அவளைப் பாதிக்கத்தான் செய்தது. அதே உணர்வு கணேசனுக்கு ஏற்படாமல் திடுதிப் பென்று போன தன் அடிப்படை என்ன?

அவனைப் பொறுத்த வரையில் பாமாவின் காதலை விடவும் தாயின் பாசமே அதிகமாய் ஈர்த்து விட்டது.

பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் தகவல் எங்கிருந்து கிடைக்கிறதோ உறவுடைய நெஞ்சங்களுக்கு அதிக கவனம் அங்கே செல்வதைத் தவிர்க்க முடியாமல் இருக்கையில் கணேசன் மட்டும் விதிவிலக்கா? அவனுடைய அன்பைப் பங்கிட்டுக் கொண்டிருக்கும் பாமாவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்கையில் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தாயின் பால் ஈர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் விரைவதில் தவறேதும் இருக்க முடியாது.

பாமா இதனால் பாதிக்கப்படுவாள் என்பதை அவனால் அந்தநேரம் சிந்திக்க முடியாமல் போனது உண் மைதான். பிரிவு நிரந்தரம் இல்லாததும் ஒரு காரணம். கணேசன் இதயத்தில் தாயின் முன்பாய் போய்ச் சேரும் வரை காதல் உணர்வுகளுக்கு இடமளிக்க முடியாமல் இருந்தது.

ஊருக்குப் போகக் கணேசன் வீட்டில்........ *(தொடரும்)*

> "விடைபெற்று கணேசன் வீதியில் இறங்கி நடந்தான். இதுவரை எந்த உணர்ச்சியும் இல்லாமல் நின்ற பாமா அவன் தெருக் கோடியில் மறையும் வரை பார்த்திருந்தாள்.
> காதலர் ஒருவரை ஒருவர் புரிந்து நெருங் கியதன் பின்பாக ஏற்படக் கூடிய சிறிய பிரிவு கூடதாங்க முடியாமல் இருப்பது பாமாவைப் பொறுத்தவரை, எவ்வள வுக்கு உண்மையா விளங்குது.

## திரும்ப முயற்சியுங்கள் திகழ்ந்திடுவீர்

ஐந்தாம் தரத்து எங்கள் பிஞ்சுப் பிள்ளைகளை
அங்கேயும் இங்கேயும் கூட்டிச்சென்று
ஆட்டுக்கடாவுக்கு ஊட்டுதல்போல் கல்வியை
அவர்களுக்குத் திணித்து ஊட்டிவிட
இதில் வெற்றிபெற்றோர்க்கு "துல்லா" அணிந்து
இவரைப் புகழ்ந்தேத்தி விழா எடுக்க
இவர்களில் எத்தனை பேர் எங்கள் பல்கலை
சென்றார்கள் என்பதை அறிவீரோ?

ஒன்பது "ஏ" பெற்றுவிட்டோமென்றிவரை
வானுயரப் புகழ்ந்து ஏற்றுகின்றார்
தன்பலம் பெரிதென்று தலைக்கனம் கொள்ளாதீர்
தடுக்கி விழுந்தவர் பலருண்டு
மட்டுமட்டாகச் சித்திகள் பெற்ற பலர்
மாண்புடன் பல்கலை செல்வதுண்டு
குட்டிச் சுவராகி விட்டோம் நாம் என்றிடாது
தொடர்ந்து படியுங்கள் துலங்கிடுவீர்

பட்டறிவுதந்த பாடத்தைச் சொல்கிறேன்
இட்டமுடன்கேட்டு இன்றே நீங்கள்
திட்டமிட்டுப் படியுங்கள் திகைத்துவிடாதீர்கள்
திரும்ப முயற்சித்து திகழ்ந்திடுங்கள்

*கவிமணி அன்னைதாஸன்*
*ஊரெழு*



14
12.04.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# Facebook வலைப் பக்கம்

கோட்டிக்காரன்

தன் உடம்பைத் தானே புரட்டிக் கவிழ்த்துத் தலையை நிமிர்த்திப் பார்த்துச் சிரிப்பதில் தொடங்குகிறது குழந்தையின் உலக சாதனைப் பூரிப்பு

முழுதாய் புறந்தள்ளிவிட முடியாததுமாய், எப்பொழுதும் தூக்கி கொண்டாட முடியாததுமான உறவுகளுக்குள் மட்டுமே எப்பொழுதும் கட்டமைகிறது வாழ்க்கை.

மணிமைந்தன்

பெருந்துயரத்துடன் நீயற்ற உன் விதியை கடக்கிறேன்... உன் சாயலில் ஒருத்தி எதிர்ப்படுகிறாள்..

முத்தமிடும் ஸ்மைரியையும் கண்கள் மூடியபடி வடிவமைத்தவன் ரசனையாளன்.

Naveen Kumar

கையறுநிலை என்பது பக்கத்தில் அமர்ந்திருப்பவர் சாப்பிடும் உணவின் பெயரை மெனு கார்டில் கண்டுபிடிக்க முடியாதது.

கொடுக்கும் அன்பு முழுவதையும் பெறும் பாக்கியம்கூட.. பெரும் பாக்கியம்தான்.

நந்து Talks

"போய்த் தொலை" என்பது தற்காலிக தீர்வு...

நீங்கள் காதலித்துக் கொண்டிருப்பது ஒரு ராட்சசியை என்று ஒருபோதும் உங்களுக்கு தோன்றவில்லையெனில்.. இன்னமும் நீங்கள் காதலிக்கவே தொடங்கவில்லை.




## ஆண்கள் பெண்களிடம் நல்ல பெயர் வாங்க

- காலையில் எழுந்தவுடன் 'ஹாய்.. குட் மோர்னிங்' என்று ஒரு மெசேஜ்
- அவங்களைப் பார்க்க போறதுக்கு முன்னாடி உங்க கைத்தொலைபேசி ஸ்கிரீன் சேவரில் அவங்களோட புகைப்படத்தை கண்டிப்பா போடுங்க.
- அவங்க பெயரோட முதல் எழுத்தை பைக் கீ– செயினில் தொங்க விட்டுட்டு எப்பவும் நீ என் கூடவே இருக்கணும் என்றுதான் இந்த மாதிரி செய்யுறேன்னு ஒரு பிட்டை போடுங்க.
- சினிமாவுக்கு போய் படத்தை பார்க்கறீங்களோ இல்லையோ கண்டிப்பா ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தடவை அவங்களை திரும்பி திரும்பி பாருங்க.
- அவங்க பெயரில நிச்சயம் ஏதாவது தமிழ் பாட்டு வந்திருக்கும். அந்த பாட்டை எப்படியாவது தேடி கண்டுபிடிச்சு ரிங்டோனா போடுங்க.
- கவிதை என்கிற பெயரில எதையாவது நீங்க கிரீட்டிங் கார்ட்ல கிறுக்கிக் கொடுங்க.
- நீ ரொம்ப அழகா இருக்கே என்ற உலக பொய்யை ஒரு நாளைக்கு ஐந்து தடவையாவது நீங்க சொல்லியே ஆகணும்.
- ஹோட்டலுக்கு கூட்டிட்டு போனீங்கன்னா முதலில் நீங்கள் ஓடர் செய்யக்கூடாது. மெனு கார்டை அவங்க கையில கொடுத்து, அவங்களைத்தான் ஓடர் பண்ணச் சொல்லணும்.
- அவங்க எப்படித்தான் உடை உடுத்தினாலும், இந்த உடையில நீ தேவதை மாதிரி இருக்கேன்னு மனசாட்சியை கழட்டி வைச்சிட்டு பொய் சொல்லணும்
- அவங்க தோழிங்ககிட்ட பேசும்போது ரொம்ப கவனமா பேசுங்க.

வேற வழி இல்லை. இந்த மாதிரி எல்லாம் செய்தாத்தான் பெண்கள் மனதில் இடம்பிடிக்கலாம்.
*இந்த விஷயங்களை எல்லாம் கடைபிடிச்சு பாருங்க. உங்க காதலி உங்களை தலையில தூக்கி வைச்சு கொண்டாடுவாங்க....*





முன்னெல்லாம் கீழே விழுந்தால் எங்க அடிபட்டு இருக்குன்னு தான் பார்ப்போம் ஆனால் இப்ப செல்போனுக்கு என்ன ஆச்சுன்னு தான் முதல்ல பார்க்கிறோம்....

## தற்கொலை

இரண்டு காதலர்கள் தற்கொலை செய்ய முடிவெடுத்து மலை உச்சிக்குச் சென்றனர். இருவரும் கண்ணை மூடிக்கொண்டு குதிக்கத் தயாராகினர். காதலன் முதலில் குதிக்க, காதலி காதலுக்குக் கண்ணில்லை என்பதை உணர்ந்துவிட்டேன் என்று கூறிக்கொண்டு பின்வாங்கி விட்டாள். பாதாளத்துக்குப் போய்க் கொண்டிருந்த காதலன், தெரியும்டீ, உங்களப்பத்தி என்று கூறிக் கொண்டு முதுகில் மறைத்து வைத்திருந்த பாராசூட்டை விரித்துக்கொண்டு பறந்தான்.



# முயற்சி திருவினையாக்கும்




பழுவூரை ஆண்டு வந்த மன்னர் கிருஷ்ண பூபதி தன் குடிமக்களின் நலனில் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தார். அவருடைய பட்டத்து ராணியான ஜோத்சனா சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்தாள். ஒருமுறை, ராணி அவரிடம் மக்களின் நலனை மந்திரிகளின் வாயிலாக அறிவதை விட, தானே நேரில் சென்று கண்டறிவது சிறப்பானது என்றும், அதற்காக இரவு நேரங்களில் மாறுவேடமணிந்து மக்களோடு கலந்து பழகி, அவர்களுடைய குறைகளை அவர்கள் வாயிலாகவேக் கேட்டறிய வேண்டுமென அறிவுரை பகன்றாள். அது சரியென்று தோன்றவே, மன்னர் அன்று முதல் மாறு வேடமணிந்து நகர்வலம் வரத்தொடங்கினார்.

ஒருநாள் இரவில் மன்னர் முதியவர் போல் வேடமணிந்து நகர்வலம் வருகையில், சத்திரத்தின் வாயிலில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த ஒரு தம்பதியைப் பார்த்தார். உடனே, தன் குதிரையை விட்டு இறங்கிய மன்னர் அவர்களுடைய உரையாடல் செவிகளில் விழும் தொலைவில் அமர்ந்து கொண்டார். நமது தலைநகருக்கு வந்து நான்கு நாள்கள் ஆகிவிட்டன. கையிலிருந்த பணமும் செலவாகி விட்டது. இன்னமும் உங்களால் மன்னரைச் சந்திக்கவே முடியவில்லை. அப்படியே சந்தித்தாலும் என்ன லாபம் என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்த ஒன்றேயொன்று கதை சொல்வது மட்டும்தான்! அந்தத் திறமைக்கு மன்னர் அள்ளிக் கொடுப்பார் என்று எப்படி நம்புகிறீர்கள்? என்று கேட்டாள் அந்த நபரின் மனைவி! அதைக் கேட்ட அவர் புன்னகையுடன், வேறு யார் அதை பாராட்டாவிட்டாலும், மன்னர் கிருஷ்ணபூபதி கட்டாயம் ரசிப்பார்! அவரை மட்டும் ஒருமுறை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தால் போதும்! அதன் பிறகு என் கதை சொல்லும் திறமையினால் அவரைக் கட்டாயம் மகிழ வைத்து விடுவேன்! இப்படித்தான் ஒரு நாவிதன் ஒரு நாட்டு மன்னரை சந்திக்க முயன்று வெற்றி பெற்றான். அதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளைக்கதையாகக்கூறுகிறேன், கேள்! என்று அவர் சொல்லி விட்டு, கதையைத் தொடங்கினார்.

பல ஆண்டுகளுக்கு முன், கங்கைபுரியில் சுந்தரம் என்ற ஒரு நாவிதன் வசித்து வந்தான். முடி திருத்துவதை வெறும் கடமையாக மட்டும் கருதாமல், அதை ஒரு கலையாகப் பாவித்தான். அந்தக் கிராமத்தில் அனைவரும் சுந்தரத்திடம்தான் முடி திருத்திக் கொள்வர்! ஊரிலுள்ள அனைவரும் அவனைப் பாராட்டுவதைக் கண்டு, நாளடைவில் அவனுக்குள் ஓர் ஆசை துளிர் விட்டது. தனது ராஜ்யத்தின் மன்னருக்கே முடி திருத்தும் வாய்ப்பு கிடைத்தால், மன்னர் அகமகிழ்ந்து போய் தன்னை ஆஸ்தான நாவிதனாகவே ஆக்கிவிடுவார் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அதனால் ஒருநாள் தன் மனைவியுடனும்; பிள்ளையுடனும் தலைநகரை அடைந்தான். ஆனால் அவன் நினைத்ததுபோல் அவன் எண்ணம் அத்தனை எளிதாகக் கைகூடவில்லை. அரண்மனை வாயிலை அடைந்ததும், வாயில்காப்போரிடம் நான் முடிதிருத்தும் கலையில் மிக வல்லவன். மன்னரிடம் என் திறமையைக் காட்ட விரும்புகிறேன். தயவு செய்து மன்னரைச் சந்திக்க என்னை அனுமதியுங்கள் என்று கெஞ்சினான்.

அவனுடைய வேண்டுகோளைக் கேட்ட காவலர்கள் அவனை ஏளனம் செய்து திருப்பியனுப்பி விட்டனர். ஆனால் சுந்தரம் தன் முயற்சியைக் கைவிடவில்லை. தினமும் அரண்மனை வாயிலில் மணிக்கணக்காக நின்று பலமுறை காவலர்களைக் கெஞ்ச ஆரம்பித்தான். ஆனாலும் அவர்கள் மசியவில்லை. ஒருநாள் அவர்களில் ஒருவன், ஏன் தம்பி வீணாக இங்கு வந்து தினமும் உன் நேரத்தை வீணாக்குகிறாய்? மன்னருக்கு ஏற்கெனவே ஒரு ஆஸ்தான நாவிதன் இருக்கிறான். அவன் பெயர் மாதவன். அவனைத் தவிர மன்னர் யாரிடமும் முடிதிருத்திக் கொள்ள மாட்டார். அதனால் நீ இங்கு வந்து நின்று கொண்டு எங்களைக் கெஞ்சிப் பயனில்லை என்றான். தன் முயற்சியில் சற்றும் தளராத சுந்தரம் உடனே மாதவனின் முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டதுடன், அவனைப் பற்றிய விவரங்களையும் சேகரித்தான். மாதவன் அறுபது வயதுக் கிழவன் என்றும், அவனுக்குப் பிள்ளை, குட்டிகள் கிடையாது என்றும் தெரிந்து கொண்டான். உடனே, தன் மனைவியுடன் கூடிப் பேசி ஒரு திட்டம் தயாரித் தான். அதன்படி, தன் மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு மறுநாளே மாதவனைத் தேடிச் சென்றான். அந்த சமயம்



மாதவன் தனது வீட்டு வாயிலில் கொய்யா மரத்தினடியில் அமர்ந்திருக்க, அவன் மனைவி சமையலுக்கு காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். எந்தவிதத் தயக்கமுமின்றி உள்ளே நுழைந்த சுந்தரம், அப்பா! சௌக்கியமா? என்று குசலம் விசாரித்துக் கொண்டே, மாதவனின் அருகில் அமர, சுந்தரத்தின் மனைவி மாதவனின் மனைவியை அணுகி, அத்தே! மருமகள் நானிருக்க நீங்கள் ஏன் காய் நறுக்க வேண்டும்? என்று அந்த வேலையைத் தான் செய்யத் தொடங்கினாள். சுந்தரத்தின் சிறு பிள்ளை அப்பா! எனக்கு இந்த மரத்திலிருந்து கொய்யாப் பழம் பறித்துத் தா! என்று அடம்பிடிக்கத் தொடங்கினான். இன்னொருத்தர் வீட்டில் வந்து இப்படியெல்லாம் கேட்கக் கூடாது என்று கூற, அந்தச் சுட்டிப் பையன் இது இன்னொருத்தர் வீடு இல்லை! என் தாத்தாவின் வீடு! என்று ஒரு போடு போட்டான். தன்னைத் தாத்தா என்று அந்த சிறு பிள்ளை சொந்தம் கொண்டாடியதும் மாதவன் அந்தச் சிறுவனைக் கட்டியணைத்துக் கொண்டான். பிள்ளை பாக்கியம் அற்ற மாதவன் தம்பதி சுந்தரத்தைத் தங்கள் மகனாகவும், அவன் மனைவியைத் தங்கள் சொந்த மருமகளாகவும் நடத்த ஆரம்பித்தனர். தவிர சுந்தரமும் முடிதிருத்தும் தொழில் செய்கிறான் என்று தெரிந்ததும், மாதவனுக்கு அவனிடம் நெருக்கம் அதிகரித்தது. சில நாள்களிலேயே, மன்னருக்கு முடி திருத்தச் செல்லும்போது மாதவன் தன்னுடன் சுந்தரத்தையும் அழைத்துச் செல்ல ஆரம்பித்தான். ஒருநாள் தற்செயலாக, மாதவனால் செல்ல முடியாமற்போக, சுந்தரத்திற்குத் தன் திறமையைக் காட்ட வாய்ப்பு கிடைத்து விட்டது. மாதவனுக்குப் பிறகு அவனே ஆஸ்தான நாவிதனாக மாறினான். ஆனால் மாதவன் தம்பதியை தங்களுடனே வைத்துக் கொண்டு பராமரிக்கவும் செய்தான். இந்த இடத்தில் கதையை நிறுத்திய அவர், ஒருவனுக்குத் திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் இருந்தால் அவன் எடுத்த காரியத்தில் நிச்சயம் வெற்றி பெறுவான். அந்த அரிய குணங்கள் என்னிடமும் உள்ளன. அதனால் நானும் என் திறமையைக் காட்டி மன்னரை மகிழ்விப்பேன் என்றும் உறுதியாக நம்புகிறேன் என்றார்.

பிறகு, அவர் தனது உரையாடலை சற்றுத் தொலைவில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மன்னரை சுட்டிக்காட்டி, அதோ உட்கார்ந்து இருக்கிறாரே, அவரும் நான் கூறியதைக் கேட்டிருப்பார்! யார் கண்டது? அவரே ஒருக்கால் மன்னரிடம் சிபாரிசு செய்யலாம்! என்றார். அதைக் கேட்ட மன்னர் தனது மாறு வேடத்தைக் கலைத்து விட்டு அந்த நபரிடம் விரைவிலேயே, மன் னரை சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும்! என்று கூறிப் புன்னகையுடன் வெளி யேறினார்.



## கடல் ஆமைகள் பற்றிய உண்மைகள்

ஆமைகளின் புதை படிவங்கள் டிராசிக் காலத்தைச் சார்ந்தவை என்று கண்டறியப்பட்டுள்ளன, அதாவது 245 மில்லியன் ஆண்டுகள் முன்பானது. இதனால் கடல் ஆமைகள் ஊர்வன இனத்தைச் சார்ந்திருப்பதால், ஊர்வன இனம் டைனோசர்கள் (200 மில்லியன் ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவை) தோன்றும் முன்பாகவே இருந்ததை குறிப்பிடுகிறது.

மேலும் கடல் ஆமைகளின் ஓடுகள், பல அடுக்குகளால் ஆன எலும்பு பிளேட்டுகள் மற்றும் கொம்புகளால் ஆன கவசத்தையும் உடையது. ஆதலால் ஓடுகள் எதையும் தாங்கும் வலிமையாக உள்ளது. ஆயினும் ஓட்டில் நரம்புகள் இருப்பதால் உணர்திறன் பெற்றுள்ளது.

ஆமைகளின் முதுகு மற்றும் விலா எலும்புகள் ஓட்டுடன் இணைந்திருப்பதால் இதனை ஓடுகளில் இருந்து வெளியே கொண்டு வர முடியாது. மேலும் ஓடுகள் ஆமைகளுக்கு பாதுகாப்பாகவும் திகழ்கிறது.

லெதர்பேக் என்ற கடல் ஆமை தான் மிகவும் நீண்ட வாழ்நாள் கொண்டது, அது 540 கிலோ எடை வரை வளரும் தன்மைக்கொண்டது.

கேலபாகோஸ் பனிப்பிரதேசங்களில் வாழும் ஜியோகிலோனி எலபென்டோஸ் என்ற ஆமைகள் பரந்து விரிந்த மிகப்பெரிய நிலங்களில் வாழ்கின்றன.

## விலங்குகளை பற்றி....

- எறும்புகள் தூங்குவதே இல்லை
- மரங்கொத்தி பறவையால் மரத்தை ஒரு நொடியில் 20 முறை தொடர்ந்து கொத்த முடியும்.
- கரப்பான்பூச்சியால் ஒன்பது நாள்கள் வரை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ இயலும்
- பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட இருமடங்கு நீளமாக இருக்கும்
- ஒரு நத்தையால் மூன்று ஆண்டுகள் வரை தூங்க முடியும்
- பட்டாம்பூச்சிகள் அதன் கால்களை கொண்டுதான் உணவை ருசிக்கின்றது
- உலகளவில் பெரும்பான்மையாக விலங்குகளால் ஏற்படும் மரணங்களை ஏற்படுத்துவது கொசு.
- பூச்சிகளின் இரத்தம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்
- பனிக்கரடிகள் அனைத்தும் இடது கை வழக்கமுடையவை
- முதலைகளால் நாக்கினை வெளியே நீட்ட இயலாது



ட.லக்ஷிகன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

# ஓய்வூதியர்களின் பா(ட்)டு இனி அவ்வளவு தான்

கே.எஸ்.சிவஞானராஜா.

ஓய்வூதியர்கள் எல்லோருமே பல்லவி இல்லாத சரணாங்களாகி விட்டனர். காவோலைகளுக்கு இனியென்ன வேலை? நுழை விசைவு எடுக்க வேண்டியதுதான். சம்பள அதிகரிப்பு அவர்களுக்குத் தேவையில்லை! ஏனென்றால் அவர்கள் ஒரு நேரம்தான் சாப்பாடு. அவர்களுக்கு வருத்தமோ, துன்பமோ இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு பழைய இரத்தம் பாருங்கோ. நோய் நொடி இல்லை. வருத்தம் இல்லையென்றால் பண்டிகை முற்பணம் எதற்கு? அவர்களுக்கு எல்லாநாளும் வருஷம் தான். ஆதலால் பண்டிகை முற்பணம் எதற்கு? அவர்கள் நல்ல சந்தோஷமாக இருக்கிறார்கள். தேர்தல் வரும் போது சுகம் வரும். ஓய்வூதியர்களுக்கென ஒரு தனி இராஜ்ஜியம் அவசியம் தேவை. அங்கு இல்லாமை, போதாமை இல்லாத வரம் வேண்டும். ஓய்வூதியர் போல முதியவர்களின் நலன்களையும் பேணுங்கள். மூத்தவர்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் மூலதனம் அறுபது வயதுக்குப் பின்னர் ஓய்வூதியராகட்டும், முதியவராகட்டும் அவர் ஆணோ, பெண்ணோ வீட்டுக்கும் நாட்டுக்கும் காவல் காக்கும் நன்றியுள்ள பிராணிகளேயாவர். எல்லோரும் வேலை வேலையென்று பறந்திடுவார்கள். குஞ்சு குருமனும் ஒரு மூன்று நான்கு இருந்து விட்டால் ஒரே அமர்க்களமாயிருக்கும். என்னதைச் சொல்ல! காவோலைகள் பாருங்கோ கெதி கெதியாய்ப் போய்க் கொண்டே இருக்கினம். பாவங்கள் அவர்கள் பா(ட்)டு இனி அவ்வளவுதான். அவர்களது தேவைகள், சுயநலத்துக்காக ஒரு தனியான அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சு, பாதுகாப்பு, வைத்தியசாலை, போக்குவரத்து, வங்கி எனச் சேவைகள் பல்கிப் பெருக வேண்டும். கலியுகம் அனைவரையுமே கைவிட்டுவிடும். மூத்தோர்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கும் பட்சத்தில், அவர்களது துன்பங்களைச் சம்பந்தப்பட்டோர் சுமந்தேயாக வேண்டும். இதே போலவே அரசும், ஊழியர்களும் தத்தமக்குரிய கடமைகளைச் செய்யாது தப்பித்துக்கொள்வார்களாயின், நாட்டை ஆண்டவனாலேயே காப்பாற்ற முடியாமற் போய்விடும். இனி அவ்வளவுதான்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**12.04.2015 முதல்**
**18.04.2015 வரை**




## மேடம்

துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு கூடும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் வர்த்தகம் லாபம் தரும். புதியவர்கள் அறிமுகமாகி, உங்களுக்கு உதவுவார்கள். மன அமைதி குறையும். உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். வீண் விவகாரங்களில் ஈடுபடலாகாது. நேரான பாதையில் செல்வதன் மூலம் பிரச்னைகளுக்கு ஆளாகாமல் தப்பலாம்.



## இடபம்

புதிய சொத்துக்கள் சேரும். சொத்துக்களால் ஆதாயமும் கிடைக்கும். நிர்வாகத்திறமை வெளிப்படும். வாழ்க்கை வசதிகள் பெருகும். அயல்நாட்டுத் தொடர்பு ஓரளவு பயன்படும். உத்தியோகத்தர்களும் ஆசிரியர்களும் பொறுப்புடன் காரியமாற்றுவது நல்லது. வீண் சண்டை, சச்சரவுகளைத் தவிர்க்கவும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. மனமகிழ்ச்சி உண்டாகும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும்.



## மிதுனம்

நல்ல தகவல் வந்து சேரும். அரசியல், நிர்வாகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். உடன்பிறந்தவர்கள் உதவி புரிவார்கள். கலைத்துறையினருக்கு சுபிட்சம் கூடும். தொழிலாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அனுகூலமான போக்கு தென்படும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். பிரச்சினைகள் எளிதில் தீரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும்.



## கடகம்

பயணத்தால் அனுகூலம் உண்டாகும். புதியவர்களது தொடர்பு பயன்படும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். கலைத்துறையினருக்கு வெற்றிகள் குவியும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி காண வழிபிறக்கும். புனிதமான காரியங்களில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். கணவன் மனைவி உறவு நிலை திருப்தி தரும். கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி காணலாம்.



## சிம்மம்

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சல் அதிகமாகும். பெற்றோர் நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். தெய்வப் பணிகளிலும் தர்மப் பணிகளிலும் ஈடுபாடு கூடும். அதனால் மனத்தில் தெளிவும் தன்னம்பிக்கையும் உண்டாகும். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்பட்டு விலகும். பிற மொழி, மத, இனக்காரர்களிடம் எச்சரிக்கை தேவை. நண்பர்கள், உறவினர்களால் பிரச்சினைகள் சூழும்.



## கன்னி

அலைச்சல் அதிகரித்தாலும் அதற்கான பயன் கிடைத்துவரும். பொதுப் பணிகளில் ஈடுபாடு கூடும். உத்தியோகத்தர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். கலைஞர்களது நிலை உயரும். பிறரிடம் கோபப்படாமல் நிதானமாகப் பேசிப் பழகுவது நல்லது. வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சுபிட்சம் கூடும். நல்ல தகவல் வந்து சேரும். முக்கியமான எண்ணங்கள் இனிது நிறைவேறும்.



## துலாம்

எதிர்ப்புக்களைக் கடந்து வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். முக்கியஸ்தர்களின் சந்திப்பு நிகழும். அதனால் நலம் ஏற்படும். ஆன்மிகத்தில் ஈடுபாடு கூடும். முக்கிய பதவிகளும் பட்டங்களும் சிலருக்கு இப்போது கிடைக்கும். கலைஞர்களுக்கு மந்தநிலை விலகி, உற்சாகமான சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தர்களுக்கு சிறுசிறு பிரச்சினைகள் சூழும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.



## விருச்சிகம்

வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எதிரிகள் அடங்குவார்கள். எடுத்த காரியத்தில் திறம்பட ஈடுபடுவீர்கள். பண வரவு அதிகமாகும். திடீர்ப் பொருள்வரவுக்கும் இடமுண்டு. பயணத்தின் மூலம் முக்கியமான எண்ணம் ஈடேறும். அலைச்சலும் உழைப்பும் அதிகமாகும். புனிதமான காரியங்களில் ஈடுபாடு கூடும்.



## தனுசு

தொலைதூரத் தொடர்பு பயன்படும். புனிதமான காரியங்களில் ஈடுபாடு கூடும். புதியவர்களது சந்திப்பும் அதனால் அனுகூலமும் உண்டாகும். பயணத்தால் நலம் ஏற்படும். நண்பர்களும் உறவினர்களும் உதவுவார்கள். கலைஞர்களுக்கும் மாதர்களுக்கும் அனுகூலமான போக்கு தென்படும். பெண்களாலும் வாழ்க்கைத்துணைவராலும் பிரச்சினைகள் சூழும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.



## மகரம்

புனிதமான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். தொலைதூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். வாழ்க்கை வசதிகள் பெருகும். நண்பர்களும் உறவினர்களும் ஓரளவு உதவுவார்கள். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். பெண்களாலும் வாழ்க்கைத்துணைவியாலும் நலம் ஏற்படும்.



## கும்பம்


பயணத்தால் சிறு சங்கடம் ஏற்படும். விஷத்தாலும் விஷ ஜந்துக்களாலும் பாதிக்கப்பட நேரலாம். உடல் நலனில் கவனம் தேவை. முன்னேற்றத்துக்கான நல்ல தகவல் வந்து சேரும். தொலைதூரத் தொடர்பு பயன்படும். உழைப்புக்கும் திற மைக்கும் உரிய பயன் கிடைக்கும். பொதுப்பணிகளில் ஈடுபாடு கூடும். நில புலங்களின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைத்துவரும். மன உற்சாகம் பெருகும். பொருளாதாரம் சம்பந்தமான காரியங்களில் விழிப்புத் தேவை.



## மீனம்

பொருள் வரவு கூடும் நேரமிது. காரியத்தில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். நல்லவர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். உத்தியோகத்தர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். தலை, கண் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும். பல வழிகளில் ஆதாயம் கிடைக்கும்

# நந்திக்கொடி ஏற்றும்பொழுது பாட வேண்டிய ஏழு பாடல்கள்



திருக்கைலாய பொன் மலையினிலே
திருவருள் பாலிக்கும் சிவபார்வதிக்கு
தீர்க்கமுடன் காவற்பணி புரிந்திடும்
அதிகார நந்தியே கொடி ஏறிடுவாய்!!

வேதத்தின் அதிபதி பிரமனும்
நாதனாம் சிவனைத் தாங்கிடவே
பெரிய ஏறுவாய் வடிவெடுத்த
பிரம்ம நந்தியே கொடி ஏறிடுவாய்!!

தேவர்கள் தலைவனாம் இந்திரனும்
ஆதி முதல்வனைச் சுமந்திடவே
ஏகமாய் நின்று உருவெடுத்த
போகநந்தியே கொடி ஏறிடுவாய்!!

முப்புரம் எரித்த முக்கண்ணனின்
ஒப்பரித் தேரச்சு முறிந்திடவே
திருமால் தாங்கி மகிழ்வித்த
மால்விடை நந்தியே கொடி ஏறிடுவாய்!!

சிவாலயம் தன்னில் லிங்கத்தையே
சிரத்தையுடன் நோக்கி அமர்ந்துள்ள
அடிய வர்க் கனுமதி வழங்கி வரும்
ஆன்ம நந்தியே கொடி ஏறிடுவாய்!!

சங்கார காலத்தில் உலகத்தை
ஓங்காரத்தில் அடக்கும்
ஊழிமுதல்வனை
தாங்கிடவே வந்து தோன்றிய
தரும நந்தியே கொடி ஏறிடுவாய்!!

ஆலம் உண்டவன் குடிகொள்ளும்
ஆலய உட்பிர காரத்திலே
கருவறை பின்புறம் வீற்றிருக்கும்
விருஷப நந்தியே கொடி ஏறிடுவாய்!!

சைவப்புலவர்
அம்பலவாணர் இராஜரட்ணம்.

# பனையோலை இராமன் க(ா)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்–1



ம.பா.மகாலிங்கசிவம்

*(தெனாலிராமன் கதை மாதிரித்தான் பனை யோலை இராமன் கதையும் இருக்கும். அதைக் கொப்பிய டிச்சுத் தான் இவர் தாழிக்கின்றார் எண்டு பூதக் கண்ணாடி போட்டுத் தேட நினைக்கும் 'குறை காணிகள்' தயவு செய்து இதைப் படிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.)*

எங்கள் பக்கத்து வீட்டில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் இருந்தார். (வாழ்ந்தார் என்று சொல்லாமல் இருந்தார் என்று சொல்லுவதற்குரிய காரணம் பின்னர் சொல்லுகின்றேன்.)

அவரது பிள்ளைத் திருநாமம் யாதென்பதை அடியேன் அறிந்திலேன் ஆயினும் 'பனையோலை இராமன் சேர்' என்று என் ஊரவர்கள் அழைத்துக் கேட்க காதுப்பழக்கத்தால நானும் அந்தத் திரு நாமத்தாலேயே அவரை எப்போதும் அழைப்பேன்.

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் இரண்டுடன்தான் அவர் எப்போதும் காட்சியளிப்பார். நான் வெள்ளை என்று சொல்லுறது அவர் அந்த உடுப்பை முதல் நாள் போடேக்கை இருந்த நிறத்தைத்தான். அவர் என்னோட சம்பாஷிக்கின்ற வேளை களிலை அடிக்கடி எனக்குச் சொல்லிறது "எனக்கு இந்த உலகத்திலை இரண்டே ரண்டு பூக்களைத்தான் பிடிக்காது. ஒண்டு குளிப்பு, மற்றது தோய்ப்பு" இந்த இரண்டு காரணங்களுக்காகவே ஊரவர் அவரை அதிகம் அண்டுவதில்லை.

தடிமன் காரணமாக மூக்கடைப்பு உள்ள சிலர் அவருடன் அடிக்கடி சென்று கதைப்பதாக ஊரினுள் அவர் தூற்றுவதுமுண்டு.

அவரவர் குளிப்பு அவரவர் இஷ்டம். நாம் அதற்குள் வீணாக மூக்கை நுழைப்பானேன்? இருந்தாலும் எப்போதும் அவர் திருநீற்றுப் பூச்சுடன் 'ஞானப் பழமாகவே' காட்சியளிப்பார்.

வேறு வேலை வெட்டி இல்லாது வெளிநாட்டுக் காசில் சாப்பிட்டுக் கொண்டு மற்றவர் சங்கதிகளை நோண்டுவதையே பொழுது போக்காகக் கொண்டவர்களுக்கு மட்டுமே ஓர் இரகசியம் தெரியும்.

கோயில் திருநீற்றைத்தான் அசுக்கிடாமல் சரைகளாகச் சுற்றி வந்து வீட்டில் வைத்து பூசுகிறார் என்பதுதான் அந்த இரகசியம். என்றாலும் அவரது ஏனைய கஞ்சத்தனங்களை ஊர் அறியும்.

அவரை ஒரு 'தெருப் பொறுக்கி' எண்டு கூடச் சொல்லலாம். ஓர் ஆசிரியரை இப்படிக் கேவலமாக பேசுவதா? எண்டு சண்டைகிண்டைக்கு வந்து விடாதீர்கள். தெருவில் உள்ள பொருள்களையெல்லாம் (மற்றவர்கள் இனிமேலும் பயன்படுத்த முடியாது என்று வீசியதை) பொறுக்கிச் சேர்ப்பதாலேயே அவருக்கு இந்தப் பெயரை வைத்தேன்.

பனையோலை இராமன் சேர் எப்போதும் தெருவில் கண்டெடுக்கப்பட்ட பிளேடுகளைக் கொண்டுதான் சேவ் எடுப்பார். இதை விடக் குண்டூசி, சட்டைக்குக் குத்தும் ஊசி போன்ற வகையறாக்களைக் கண்டால் அலாதிப் பிரியம். பூனைக் கண்கள் குவித்துப் பார்த்து நடுநடுங்கும் கைகளை ஓரிடத்தில் நிலைப்படுத்தி ஊசியை அவர் பொறுக்கி எடுப்பதே தனி அழகு தான்.

பொறுக்கப்பட்ட ஊசிகள் தொலைந்து விடாமல் இருக்க பனியன் முழுவதுமே குறுக்கும் மறுக்குமாக அதனை குத்தியிருப்பார். அவை தோய்ப்புக்குள் அகப்படா விட்டாலும் பல இடங்களில் மழைத் தண்ணீர்பட்டுக் கறள் பிடித்திருக்கும்.

கியூவில் பொருள்களுக்காகக் காவல் நிற்கும் சந்தர்ப்பங்களில் குண்டூசிக் குத்தல், அவருக்குப் பிடிக்காத பூ என்பவற்றால் எல்லோரும் அவரை மனமொத்து முதல் ஆளாக விட்டு விடுவார்கள். தனது ஆசிரியர் தொழிலுக்குக் கிடைத்த மகத்தான மதிப்புத்தான் இது என்று அவர் அப்பாவித்தனமாகப் பெருமையடிப்பதைப் பலமுறை கேட்டிருக்கிறேன்.

அவரது மனைவி திருமணமான மறுவாரமே ஓடிப் போனதற்கு ஊசிக் குத்தல் காரணமா? அவருக்கு பிடிக் காத பூக்கள் காரணமா? என்று ஊருக்குள் பெரும் பட்டிமன்றமே நடந்து கொண்டிருக்கும்.

> பனையோலை இராமன் சேர் எப்போதும் தெருவில் கண்டெடுக்கப்பட்ட பிளேடுகளைக் கொண்டுதான் சேவ் எடுப்பார். இதை விடக் குண்டூசி, சட்டைக்குக் குத்தும் ஊசி போன்ற வகையறாக்களைக் கண் டால் அலாதிப் பிரியம். பூனைக் கண்கள் குவித்துப் பார்த்து நடுநடுங்கும் கைகளை ஓரிடத்தில் நிலைப்படுத்தி ஊசியை அவர் பொறுக்கி எடுப்பதே தனி அழகு தான்.

ஒருவரது எந்த விபரீதமான பழக்கத்துக்கும் சிறு வயதில் இருந்த நிறைவேறாத ஆசைகளே காரணம் எனச் சிக்கின் பராட்டாவே, சிக்மன் புரொட்டோ யாரோ சொன்னதாக ஞாபகம். அவர் அதிகளவில் ஊசிகளைக் குத்திக் திரிவதற்கான காரணத்தை அறிய நைஸாகக் கதை விட்டுப் பார்த்தேன்.

"ஓம் தம்பி. சின்ன வயசில் சரியான கஷ்டம். ஒரு நாள் காற்சட்டையின் தெறி அறுந்து ஊசிக்கும் வழி இல்லாமல் ஒரு கையாற் பிடித்துக் கொண்டே பள்ளிக்குப் போனேன். அண்டைக்கு வீட்டு வேலை செய்து கொண்டு போகவில்லை, எண்டு சண்முகம் சட்டம்பியார் ஒரு கையில் அடித்துக் கோபம் தீராமல் மற்ற கையையும் நீட்டச் சொல்ல... நான் பட்ட அவமானம் இருக்கே... அதை எண்டைக்கும் மறக்க முடியாது" என்றார்.

அவர் சொன்ன கதைகளைச் சொல்ல முன்னம் அவரை வாழ்ந்தார் எண்டு சொல்லாமல் 'இருந்தார்' எண்டு ஏன் சொன்னேன் என்பதற்கான காரணத்தைச் சொல்லி விடுகிறேன். திருமணமான அடுத்த வாரமே மனைவியை ஓட வைத்து விட்டுச் சாப்பாட்டையும் தெருவோரப் பழம் பொருள்களைப் பொறுக்குவதையுமே நோக்கமாகக் கொண்டவரை எப்படி வாழ்ந்தார் என்று சொல்லுவது?

பனையோலை இராமனுக்கு ஒருநாள் கடுமையாக உடம்புக்கு முடியாமல் வந்து விட்டது. மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். உலோபியான அவரது சக "வாசமே" வேண்டாம் என்று ஊரவர்கள் ஒதுக்கி வைத்துவிட்ட நிலையில் எவரும் எட்டிப் பார்க்கவில்லை. பக்கத்து வீட்டுக் காரனான நான் ஒதுங்க முடியுமா? "உண்மையிலே இரக்கமான பக்கத்து வீட்டுக்காரன் என்று நீங்கள் பாராட்டுவது காதிற் கேட்கிறது. (பிறகென்ன காதிலை கேட்காமல் கண்ணிலையா கேட்கும்?)" உண்மையில் அவர் வீட்டுக்கு என்னை இழுத்துச் சென்றது அவரிடம் இருந்த 2 பவுண் சங்கிலி தான்.

தொடர்ந்து கவனித்துப் பார்த்த பிறகுதான் கண்டு பிடித்தேன். சங்கிலியைப் போட மாட்டார். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையில் காலை ஒரு ஏழரை மணி போல எடுத்துத் துடைத்துப் போட்டு அழகு பார்த்துவிட்டு எங்கேயோ பதுக்கி விடுவார். பல மாதங்களாக முயன்றும் அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எண்டாலும் ஓர் ஆறுதல். அவரிடம் சங்கிலி இருப்பதே தெரியாத ஊராரின் மத்தியில் அதை வைக்கும் இடம் மட்டும் தெரியாத நான் அறிவாளி தானே? (தயவு செய்து Amongst the blind the one eyed man is the king என்ற ஆங்கில பழமொழியைத்தான் மாத்தி அடிக்கிறேன் எண்டு நக்கல், நளினம் வேண்டாம்)

பனையோலை இராமன் சேரின் மரணத் தறுவாயில் அவர் பக்கத்தில் இருந்தால் விஷயம் முடிந்த கையோடு சங்கிலியை அமுக்கி விடலாம் என்று என் நிழலுக்கும் கூடத் தெரியாமல் இரகசியமாய் நினைத்தேன்.

கட்டிலைச் சுற்றியிருந்த குப்பைகளோடு குப்பையாகக் 'குட்பாய்' சொல்லக் காத்திருந்தவர் போல அவர் காணப்பட்டார். மூக்குக்குள் புண்ணாக்குப் போனால் மாடு மூசுமே? அந்த மாதிரி ஒரு மூசல் மூசிக் கொண்டிருந்தார்.

"தம்பி இஞ்ச பாரும், நான் நாளையிண்டைக்கோ அடுத்த நாளைக்கோ எண்டு இருக்கிறன். அதுக்கிடையில் சின்ன வயதிலையும், படிக்கிற காலத்திலையும் விட்ட பகிடியள் கொஞ்சம் இருக்கு. ஒரு வேலைக்கு போக வேணுமெண்ட அவசரம் இல்லாமல் இருந்து கேட்கக் கூடிய ஆள் நீர்தான். கவனமாக கேளும்" எண்டு ஒவ்வொரு க(ா)தையாகச் சொல்லத் தொடங்கினார்.

அதற்குள்ள வம்பு தும்பு பகிடியளும் அடக்கம். பொன்னகையை எதிர் பார்த்துப்போன எனக்கு பரிசாக கிடைச்சது இந்தப் புன்னகைக் கதைதான். இதை வைச்சு என்ன செய்யிறது எண்டு $5^0, 10^0, 15^0$ எனப் பல கோணங்களிலையும் யோசிச்சுக் கொண்டிருந்தன்.

அப்பதான் நண்பர் ஒருவர் உதயன் பத்திரிகைக்கு அனுப்புங்கோ பிரசுரிப்பினம் எண்டு சொன்னார்.

"அப்படி அனுப்பினாக் காசு தருவினமோ?" எண்டு சாடையாகக் கேட்டுப் பாத்தன்.

"காசு வராட்டியும் பெயர் வருமல்லே" எண்டார். "பெயரை வைச்சு தம்பிஐயா கடைக் கடனை கட்டலாமோ? இல்லாட்டி பிள்ளையின்ரை ரீயுசன் காசைத் தன்னும் கட்டலாமோ?" எண்டு பதில் கேள்வி போட்டன்.

அவர் என்னை ஒரு மாதிரி பாக்காமலே விட்டார். அந்தச் சங்கிலியைக் கடைசியா ஆரெடுத்தது எண்டு தெரியாத வயித்தெரிச்சலோடைதான் இந்தக் கதையை உதயன் வாசகர்கருக்குச் சொல்லிறன் எண்டதைத் தயவு செய்து நினைவில வைச்சிருங்கோ. (தொடரும்)

*(அடுத்த பத்திரிகையில் "மருமோளுக்கு நகையெடுத்த காதை" ஆவலுடன் எதிர்பாருங்கள்)*



# கொம்பன்

## ஆறுதல்

தார்மீக ஆவேசத்துடன் மீசையை முறுக்கிக் கொண்டு விறைப்புடன் திரியும் கொம்பையா பாண்டியன்தான் (கார்த்தி), அந்த ஊரில் எது நடக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சக்தி. பக்கத்து ஊரில் இருக்கும் குண்டன் ராமசாமிக்கும் (சூப்பர் சுப்பராயன்) அவரது ஆள்களுக்கும் கொம்பன் மீது பெரும் கோபம்.

சாதி சனம் என்னும் பேச்சை எடுத்தாலே, சனம் இருக்கட்டும், சாதி வேண்டாம் என்று சொல்லும் ராஜ்கிரண் தன் மகள் பழனியை (லட்சுமி மேனன்) கார்த்திக்குத் திருமணம் செய்து கொடுக்கிறார்.

ஓயாமல் சண்டை போட்டுச் சிக்கலில் மாட்டிக் கொள்ளும் கார்த்தியை அம்மா (கோவை சரளா), மாமனார், மனைவி ஆகியோர் திருத்த முயற்சிக்க, முரட்டுத்தனம் அதிகமாகிக் குடும்பம் பிரிகிறது. பிரிந்த பிறகுதான் உறவுகளின் அருமை கார்த்திக்குப் புரிகிறது.

கார்த்தியின் எதிரிகளிடம் ராஜ்கிரணும் சிக்கிக் கொள்ள, மாமனாரும் மருமகனும் ஆபத்திலிருந்து எப்படித் தப்பித்தார்கள் என்பதுதான் மீதிக் கதை.

மாமனார் – மருமகன் இடையே நடக்கும் பாசப் போராட்டம் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் போராட்டத்தைவிட வில்லன்களுக்கும் கார்த்திக்கும் நடக்கும் போராட்டம்தான் அதிகம்.

முதல் பாதி முழுவதும் கார்த்தி யாரையாவது அடித்துக் கொண்டே இருக்கிறார். நாயகன், அடங்காத முரட்டுக்காளை என்பதைக் காட்ட இத்தனை காட்சிகள் அவசியமில்லை என்றாலும் அலுக்கும்படி வைத்திருக்கிறார்கள்.

படம் வேகமாக நகர்ந்தாலும் பல காட்சிகளும் திருப்பங்களும் யூகிக்கக் கூடியவை. லட்சுமி மேனன் அப்பாவுக்குச் மது ஊற்றிக் கொடுத்து, அதற்குக் கொடுக்கும் விளக்கம் ரசிக்க வைக்கிறது. "மீசைய முறுகிட்டுத் திரியிற இவிங்கள போல நீயும் உருப்படாம போவ" என்று ஊர்ப் பெருசுகளைக் காட்டித் தன் பிள்ளையிடம் ஒரு அம்மா சொல்வது என்று விவகாரமான குசும்புகள் ஆங்காங்கே தட்டுப்படுகின்றன.

பண்பாட்டுப் பதிவுகள் சிறப்பாக உள்ளன. சொலவடைகள், வாழ்க்கை முறைகள், வட்டார வழக்கு, மனிதர்களின் சுபாவம், ஆகியவை பாராட்டத்தக்க விதத்தில் சித்தரிக்கப் படுகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் முட்டாள் தனமான வீம்பும் வீறாப்பும் கொலை வெறியும் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள் என்பதைப் படம் உறுதிப் படுத்துகிறது. இது இன்றைய யதார்த்தத்துக்குப் பொருத்தமாக இல்லை.

இந்தப் படத்தையும் பருத்தி வீரன் முதலான படங்களுடன் ஒப்பிடப் படுவது தவிர்க்க முடியாதது. காரணம், கதைக் களமும் கதை மாந்தர்களும். கொம்பனில் பண்பாட்டுச் சித்தரிப்புகள் வலுவாக இருந்தாலும் கதை தட்டையாகவே உள்ளது. கதை மாந்தர்களுக்கிடையேயான ஊடாட்டங்கள் அவற்றின் நுட்பங்களுடன் பதிவாகவில்லை. பருத்தி வீரனில் சாதியமைப்பின் மறு பக்கமும் சாதிக்குள் நிலவும் ஊடாட்டங்களின் நுட்பங்களும் பதிவாகி இருக்கும்.

கார்த்தியின் பாத்திரப் படைப்பு வலுவாக உள்ளது. சாதிய அமைப்பில், ஆண் மையச் சமூகத்தில் உள்ள ஒருவனை இயக்குநர் முத்தையா சரியாகச் சித்தரித்துள்ளார். குடும்பத்துக்குள் நிலவும் ஆணாதிக்கப் போக்கும் யதார்த்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் மாமனார் விடயத்தில் கார்த்தி மனம் மாறும் காட்சி பலவீனமாக உள்ளது.

முன்பின் யோசிக்காத முரடன் வேடத்துக்கு ஏற்ற கச்சிதமான உடல் மொழியும் சவடாலான பேச்சும் கார்த்தியிடம் வெளிப்படுகின்றன. லட்சுமி மேனனைப் பார்த்து உருகும் காட்சியில் ஆளே மாறிவிடுகிறார். மாமனாரிடம் விறைப்புக் காட்டுவது, பிறகு பாசம் காட்டுவது ஆகியவற்றிலும் கவர்கிறார்.

பாசம், பணிவு, பொறுமை, சீற்றம் என்று பாத்திரமாக வாழ்ந்திருக்கிறார் ராஜ் கிரண்.

தன்னைப் பார்த்ததும் அசந்து நிற்கும் கார்த்தியைப் பார்த்து வெட்கப்படுவது, பொறுப்பான மருமகளாகக் கடமைகளைச் செய்வது, பொறுமை எல்லை மீறிச் சோதிக்கப்படும்போது சீறி எழுவது என்று லட்சுமி மேனனும் முத்திரை பதிக்கிறார்.

தம்பி ராமையா, கோவை சரளா ஆகியோர் படத்துக்குப் பெரிய பலம். சூப்பர் சுப்பராயன் வில்லத்தனத்தில் ஜொலிக்கிறார். ஜி.வி. பிரகாஷ் குமாரின் இசையில் கறுப்பு நிறுத்தழகி பாடல் கவர்ந்திழுக்கிறது. மற்ற பாடல்கள் சுமார். பின்னணி இசை நன்று.

பண்பாட்டுப் பதிவுகள், அலுப்பூட்டாத திரைக்கதை ஆகியவற்றால் கொம்பன் வசீகரிக்கிறது. கதையிலும் காட்சிகளிலும் புதுமையும் சித்தரிப்பில் நுட்பமும் கூடியிருந்தால் சாதனை படைத்து இருக்கும்.

முரட்டு இளைஞருக்கு பெண் கொடுத்துவிட்டு வயிற்றில் நெருப்பை கட்டிக்கொண்டு அலையும், மாமனார்களுக்கும், வீட்டை கவனிக்காமல் ஊர் பஞ்சாயத்திலேயே காலம் கழிக்கும் மருமகன்களுக்கும் ஆறுதலும் அறிவுரையும் தரும் படம்.





# சகாப்தம்

## தேறாது

விஜயகாந்தின் மகன் நாயகனாக அறிமுகமாகிறார் என்ற காரணத்தால் எதிர்பார்ப்பை உருவாக்கிய படம் 'சகாப்தம்'. அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாமலேயே தோற்றுப்போய்விட்டது.

சிறுவயதிலேயே அம்மாவை இழந்த நாயகன் சகா (சண்முகப்பாண்டியன்), அப்பாவின் அரவணைப்பில் வளர்ந்து நிற்கிறார். அத்தை மகளை (நேகா) காதலிக்கிறார்.

அதே ஊரைச் சேர்ந்தவர் தேவயானி. மலேசியாவுக்கு வேலைக்குச் சென்ற கணவர் ரஞ்சித்திடம் இருந்து எந்தத் தகவலும் இல்லாததால் கண்ணீர் வடிக்கிறார். நண்பன் நண்டு ஜெகனுடன் மலேசியாவுக்கு செல் கிறார் சகா. அங்கு மற்றொரு கதாநாயகி சுப்ரா ஐயப்பா நடத்தும் துப்பறியும் நிறுவனத்தில் வேலைக் குச் சேருகிறார்.

மலேசியக் காவல்துறையே பாராட்டும் அளவுக்கு சகா என்ன அதிரடிகள் செய்கிறார்.

புதிய களங்கள், புதிய கதாபாத்திரங்கள், புதிய காட்சிப்படுத்தல் என முன்னேறிக்கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில் கற்காலக் கதையை கையில் எடுத்திருக்கிறார் இயக்குநர். முதல் படத்திலேயே சண்முகப்பாண்டியனை அதிரடி நாயகனாகக் காட்டிவிட வேண்டும் என்று முடிவு செய்து இப்படி ஒரு கதையைத் தேர்வு செய்திருப்பதாக வைத்துக்கொண்டாலும் திரைக்கதை, காட்சியமைப்புகள் கால் நூற்றாண்டுக்கு முன்பே காலாவதியானவை.

வேலை வெட்டி இல்லாமல் கிராமத்தில் நண்டு ஜெகனு டன் சகா அடிக்கும் லூட்டிகள் எரிச்சலூட்டும் வகை. 40 நிமிடங்களுக்கொரு சண்டை, 20 நிமிடத்துக்கொரு பாடல், பத்து நிமிடத்துக்கொரு உணர்ச்சிப் பெருக்கு, ஐந்து நிமிடத்துக்கொரு காதல் காட்சி என்று மொத்தத் திரைக்கதையும் அப்பா விஜயகாந்த் நேசித்த மசாலா கலவையாக இருப்பது தவறல்ல. ஆனால் அவற்றுக்கு இடையே நிகழும் சம்பவங்கள் எதிலும் புதுமையோ, அழுத்தமோ இல்லாததால் படம் முழுவதும், பரபரப் பின்றி நகர்கிறது.

முதல் பாதியில் 'பவர்ஸ்டார்' வரும் சில காட்சிகள் கலகலப்பு. இரண்டாம் பாதியில் மலேசிய போலீஸ் அதிகாரிகளே பாராட்டும் அளவுக்குப் பெரும் குற்றவாளிகளை சண்முகப்பாண்டியன் சட்சட்டென்று பிடித்துவிடுவது கலக்கத்தை உண்டுபண்ணுகிறது.

ஒரு காட்சியில் தோன்றும் விஜயகாந்த், "வெளி நாட்டுக்காரர்கள் நம்ம நாட்டைச் சுற்றிப் பார்க்க சுற்றுலா பயணிகளாக வருகிறார்கள். அந்நிய நாடுகளுக்கு அதே மாதிரி நாமும் போகும் அளவுக்கு நம்ம வாழ்க்கைத் தரம் உயரணும். அதற்கான வேலைவாய்ப்பை இங்கயே நாம உருவாக்கணும்" என்று கருத்து சொல்கிறார். படத்தின் மையக் கருத்து அதுதான். ஆனால் இதற்குத் திரைக்கதை அமைத்த வகையில் முழுமையாகச் சறுக்கியிருக்கிறார் இயக்குநர்.

அறிமுகநாயகன், சண்முகப்பாண்டியனின் கதாபாத்திரத்தை அதிரடிக் களத்தில் தூக்கிப் பிடிப்பதிலேயே இயக்குநர் முழு கவனத்தையும் குவித்தது சறுக்கலுக்கு காரணம். மலேசியாவின் பிரம்மாண்டம், அதிரடியான சண்டைக் காட்சிகள் ஆகியவற்றில் கவனம் ஈர்க்கின்றனர். இதற்கு பூபதியின் ஒளிப்பதிவு முக்கியக் காரணம்.

கார்த்திக் ராஜாவின் இசையில் 2 பாடல்கள் இனிமை ரகம். மற்ற பாடல்கள், பின்னணி இசையில் கார்த்திக் ராஜா கவனத்தை ஈர்க்கவில்லை.

சண்டைக் காட்சிகளில் விஜயகாந்தை நினைவூட்டும் சண்முகப்பாண்டியன் அதிரடி செய்வதிலும் நடனமாடுவதிலும் தேறி விடுகிறார். நடிப்பு, காதல் காட்சிகள் என்று வரும்போது சுத்த மோசம். நேகா, சுப்ரா ஐயப்பா என அழகான 2 கதாநாயகிகள். ஆனால் அவர்கள் பேசும் வசனங்களுக்கும் உதட்டு அசைவுக்கும் சுத்தமாக ஒட்டவில்லை.

# தலைமன்னாருக்கு மீள-தடம்பதிக்கும் புகையிரதம்!

■ ஸ்டோ ஸ்வாமி

கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட இடைவெளிக்குப்பிறகுதலைநகருக்கும் தலை மன்னாருக்கும் இடையிலான நேரடி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கடந்த சித்திரை முதலாம் திகதி இரவு, முதலாவது ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இரவு 7.40 மணிக்கு புறப்பட்டு தலைமன்னாரைச் சென்றடைந்தது. தலைமன்னார் துறைக்கும் மடுவீதிக்கும் இடையிலான புகையிரத சேவை கடந்த பங்குனி 14ஆம் திகதி பாரதப் பிரதமர் மோடியினால் பச்சைக்கொடியசைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டதையடுத்து தற்போது முழு அளவிலான சேவைகள் நடத்தப்படுகின்றன.

இதன்படி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பிரதான மார்க்கத் தடத்தில் பயணிக்கும் இந்தப் புகையிரதம், வடமார்க்க தடத்தில் பயணித்து, மதவாச்சி புகையிரத நிலையத்தில் மன்னாரை நோக்கி ஐந்தாம் இலக்க மன்னார் தடத்திற்கு பிரிந்து தலைமன்னார்துறை வரை பயணிக்கும்.

கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னார்துறை வரை மொத்தமாக 335 கி.மீ. பிரயாணத் தூரமுடைய இந்தச் சேவையில், மதவாச்சிக்கும் தலைமன்னார் துறைக்கும் இடையிலான 106 கி.மீ. ரயில்பாதை, பாலங்கள் மற்றும் அதன் ரயில் நிலையங்கள் போர்க்காலச் சூழ்நிலையால் முற்றாக அழிவடைந்திருந்தன. ரயில்பாதை புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு வேலைகள் இர்கொன் (IRCON) என்னும் இந்திய நிறுவனத்தினரால் இரு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக மதவாச்சியிலிருந்து மடுவீதி வரையான 43 கி.மீ. செப்பனிடப்பட்டு 2013 வைகாசி மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2014 ஐப்பசி மாதத்தில் திருக்கேதீஸ்வர ரயில் நிலையம்வரை பரீட்சார்த்த முன்னோட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னான பரபரப்பான நாள்களில் இந்தச் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அது நடந்தேறவில்லை. இறுதியில் இந்த ஆண்டு பங்குனி மாதம் 11ஆம் திகதியளவில் பரீட்சார்த்த முன்னோட்டம் தலைமன்னார் வரை நடைபெற்று பின்னர் மோடியினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

1914ஆம் ஆண்டளவில் திறக்கப்பட்ட இந்த மன்னார் புகையிரத மார்க்கம், தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே இடம்பெற்று வந்த கப்பல் சேவை காரணமாக முக்கியத்துவம் பெற்று விளங்கியிருந்தது. இந்தியாவையும் இலங்கையையும் புகையிரத வழி இணைப்புச் செய்யும் முன்மொழிவின் பின்னணியிலேயே இந்த ரயில் மார்க்கம் அப்போது அடியிடப்பட்டது.

மதவாச்சிக்கும் தலைமன்னார்துறைக்கும் இடையே முறையே நேரியகுளம், செட்டிகுளம், மடுவீதி, முருங்கன், மாதோட்டம், திருக்கேதீஸ்வரம், மன்னார், தோட்டவெளி, பேசாலை, தலைமன்னார் என 10 ரயில் நிலையங்களைக் கொண்டிருக்கும் மன்னார் ரயில் மார்க்கத்தில் மாதோட்டம், திருக்கேதீஸ்வரம், மற்றும் தோட்டவெளி என்பன ரயில் தரித்துச்செல்லும் நிலையங்களாகும்.

**புதிய சேவைகள்**

சித்திரை மாதம் முதலாம் திகதியுடன் நடைமுறைக்கு வந்துள்ள புதிய ரயில் போக்குவரத்து அட்டவணைப்படி, கொழும்பிற்கும் தலைமன்னாரிற்கும் இடையே தினசரி பகல் இரவு என இரண்டு சேவைகள் இடம்பெறுகின்றன.

இதன்படி, காலை 8:50 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் பகல் நேர ரயில் பிற்பகல் 5:45 மணிக்கு தலைமன்னாரைச் சென்றடையும். இரவு 7:40 மணிக்கு புறப்படும் இரவு ரயில் அதிகாலை 4:25 மணிக்குத் தலை மன்னாரைச் சென்றடையும். தலைமன்னாரிலிருந்து காலை 10:15 மணிக்கு புறப்படும் ரயில் பிற்பகல் 7:17 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும். தலைமன்னாரிலிருந்து இரவு 10 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் மறுநாள் காலை 7:05 மணிக்கு கொழும்பு கோட்டையை அடையும்.

இதனைவிட வேறு இரு உள்ளூர் சேவைகளும் இடம்பெறுகின்றன. அனுராதபுரத்திலிருந்து அதிகாலை 1:30 மணிக்கு புறப்படும் உள்ளூர் புகையிரதம், அதிகாலை 4:55 மணிக்கு தலைமன்னார்துறையை அடையும். மதவாச்சி ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் மற்றொரு புகையிரதம் பிற்பகல் 2:45 மணிக்கு தலைமன்னார்துறை ரயில் நிலையத்தை அடையும். அவ்வாறே தலைமன்னார்துறையிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்படும் ரயில் காலை 10:20 மணிக்கு மதவாச்சியையும் அதே தலைமன்னார் துறையிலிருந்து இரவு 7:30 மணிக்கு புறப்படும் மற்றொரு ரயில் இரவு 10:34 மணிக்கு அனுராதபுரத்தையும் சென்றடையும்.

**கட்டண குளறுபடி**

கோட்டையிலிருந்து தலைமன்னார்துறை வரையான நடைமுறை சேவையில் முதலாம் வகுப்புக் கட்டணமாக 740 ரூபாவும் இரண்டாம் வகுப்புக் கட்டணமாக 420 ரூபாவும் மூன்றாம் வகுப்புக் கட்டணமாக 230 ரூபாவும் அறவிடப்படுகின்ற போதிலும் ரயில் திணைக்கள இணையத்தளத்தில் இது முறையே 820, 490 மற்றும் 305 ரூபாவாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கில்**

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கப்பல் சேவைகளுக்கான இணைப்பு சேவைக்கு மாத்திரமல்லாமல் காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கான தரமான களிமண்ணை முருங்கனிலிருந்து நகர்த்துவதற்கும் இந்த ரயில் மார்க்க சேவையே பயன்படுத்தப்பட்டது.

மீள நிர்மாணிக்கப்பட்டு பாவனைக்குவிடப்பட்டுள்ள இப்புதிய சேவை, மன்னாரிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கடலுணவு மற்றும் நெல் உள்ளிட்ட விவசாய விளைவுகளை கொண்டுசெல்ல – மாந்தை உப்பு கூட்டுத்தாபன உற்பத்திகளை விநியோகிக்க – பனம் பொருள்களை தெற்கு சந்தைகளுக்கு நகரத்துவதற்கு வழிசமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோலிய அகழ்வைத் தொடர்ந்து அந்தப் பொருள்களை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச்செல்வதிலும் இந்த ரயில் மார்க்கம் எதிர்காலத்தில் முதன்மைப் பங்காற்றும் என நம்பப்படுகிறது.

**மத நிறுவனங்களுக்கு நெருக்கமாக**

இந்து மற்றும் றோமன் கத்தோலிக்க சமய நிறுவனங்களுக்கு நெருக்கமாக இந்த ரயில் தடம் செல்வதால் உற்சவ காலங்களில் பக்தர்கள் இந்த ரயில் சேவைகளைப் பயன்படுத்துவதற்கும் விசேட சேவைகளை ஏற்பாடு செய்வதற்கும் வசதியளிக்கிறது. மடுத் தாயாரின் திருத்தலம், இந்துக்களின் திருக்கேதீஸ்வரர் திருத்தலம், மற்றும் தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயம் போன்றவற்றுக்கான யாத்திரைகளை இந்த ரயில் சேவை இலகுபடுத்துகிறது.

**சுற்றுலா நோக்கில்**

ஏ–14 நெடுஞ்சாலைக்கு சமாந்தரமாகப் பயணிக்கும் இந்த ரயில் சேவை மன்னாரின் சுற்றுலா மையங்களுக் கான பயணங்களையும் சுலபமாக்குகிறது. மாதா கிராமத்தில் அமைந்துள்ள தொங்கு பாலத்தைப் பார்வையிடச் செல்பவர்கள் மடுவீதி ரயில் நிலையத்தையும், கட்டுக்கரை நீரத்தேக்கத்திற்குச் செல்ப வர்கள் முருங்கன் ரயில் நிலையத்தையும் முத்தரிப்புத்துறை அல்லிராணி கோட்டை மற்றும் அருவியாற்றுக்குச் செல்பவர்கள் மாதோட்டம் தரிப்பு நிலையத்தையும் பயன்படுத்த முடியும்.

**விபத்துக்கள் தவிர்க்கப்படவேண்டும்**

மன்னார் மார்க்க ரயில் பாதை மீள் நிர்மாணவேலைகள் உரியகாலத்தில் அல்லாமல் தாமதமாகவே முடிவடைந்த போதிலும் சில இடங்களில் ரயில் கடவை வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. இது விபத்துக்களை நிச்சயம் ஏற்படுத்தும். யாழ். தேவி ரயில் மீள ஆரம்பிக்கப்பட்டபின் இத்தகைய முழுமைப்படுத்தப்படாத கடவைகளில் சாவுகள் சம்பவித்ததும் நாம் அறிந்ததே!

அபிவிருத்தியின் வளர்ச்சியில் துரித மற்றும் வினைத்திறனான போக்குவரத்து பொறிமுறை இன்றியமையாதது. தலைமன்னாரில் ரயில் சேவையை தொடங்கி வைப்பதற்கு முன்னதாக இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இந்திய பிரதமர் மோடி, சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் எனும் பாரதியாரின் வரிகளை தனது உரையில் கையாண்டிருந்தார். கால ஓட்டத்தில் வெறும் 29 கி.மீ. இடைவெளியில் உள்ள தனுஷ்கோடியை பாலம் ஒன்றினூடாக இணைப்பதன் மூலம் தலைமன்னார், இலங்கைக்கான சர்வதேச நுழைவாயிலாக மாறலாம். அத்தகைய சிந்தனையை முன்னகர்த்துவதற்கான படிகளில் ஒன்றாக இந்த ரயில் சேவை மீளத் திரும்பல் அமையட்டும்! வடமாகாண சபையின் தீர்மானங்களில் இது எதிரொலிக்கட்டும்!



# நாட்டை நேசித்த மாமனிதர் லீ

தொகுப்பு வி.எஸ். ரீ

அண்மையில் காலமான சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ, 'சிங்கப்பூரின் சிற்பி' எனப் போற்றப்படும் பெருமைக்குரியவர். பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் கீழ் குடியேற்ற நாடொன்றாக விளங்கிய சிங்கப்பூருக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது மட்டுமன்றி 1959 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 31 ஆண்டுகள் சிங்கப்பூரின் பிரதமராக இருந்து சிங்கப்பூரை உலக அரங்கில் பேசப்படும் நாடொன்றாக உருவாக்கி வைத்தவர் அவர். 1990 ஆம் ஆண்டில் இளைய தலைமுறையினருக்கு வழி விட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற லீ குவான் யூ, உலக அரங்கில் மதிக்கப்படும் ஒரு நாடாக சிங்கப்பூரை உருவாக்கி வைத்தவர். அவரது வாழ்க்கை குறித்த தொகுப்பு இது.

716 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட, கொழும்பு மாவட்டத்தை விட ஓரளவு கூடிய நிலப் பரப்பைக் கொண்ட , உலக வரைபடத்தில் ஒரு சிறு புள்ளி போலத் தோற்றமளிக்கும் சிங்கப்பூர், உலகளாவிய ரீதியில் பொருளாதாரத் தன்னிறைவு கொண்டதொரு நாடாக அடையாளப்படுத்தப்படுகிறது. ஐந்தரை மில்லியன் வரையான சனத்தொகையைக் கொண்ட சிங்கப்பூருக்கு ஆண்டொன்றில் 15 மில்லியனுக்கு மேற்பட்ட உல்லாசப் பயணிகள் பயணிக்கின்றனர். 1950 கால கட்டத்தில் இலங்கையின் தலைநகர் கொழும்பு ஒரு அபிவிருத்தி கண்ட நகராக மிளிர்ந்த வேளையில், சிங்கப் பூர் அபிவிருத்தியில் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்தது. அந்த நிலையை முற்று முழுதாக மாற்றியமைத்து, சிங்கப்பூரை உலகின் சொர்க்கபுரி என்று கூறும் அளவுக்கு மாற்றியமைத்தவர் லீ குவான் யூ.

1923 ஆம் ஆண்டில், அவர் பிறந்த அந்தக் கால கட்டத்தில் சிங்கப்பூர் பிரித்தானிய முடியாட்சியின் கீழான குடியேற்ற நாடாக இருந்தது. கல்வியில் சிறந்த மாணவராக இருந்த லீகுவான் யூ உயர் கல்விக்காக ரபில்ஸ் கல்லூரியில் இணைந்து கல்வியைத் தொடர்ந்த வேளை அதே கல்லூரியில் கற்று வந்த கீ ஓக் வூ என்ற பெண் மீது காதல் வயப்பட்டார்.

1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8ஆம் திகதியன்று ஜப்பான், சிங்கப்பூரை ஆக்கிரமித்ததை அடுத்து சிங்கப்பூர் மக்கள் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகினர். ஆக்கிரமிப்பின் காரணமாக ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர். மிகச் சிரமத்தின் மத்தியில் சிறு வியாபார நடவடிக்கைகள் மூலம் லீகுவான் யூ சிறுகச் சிறுகப் பணம் சேர்த்துக் கொண்டார். போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் சட்டப் படிப்புக்காக லண்டன் சென்ற அவர் லண்டன் பொருளாதாரக் கல்வி நிறுவனத்தில் இணைந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்திலும் இணைந்து கல்வியைத் தொடரும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

லண்டனில் இருந்த வேளை, அபிவிருத்தி குறைந்த நாடுகளைச் சேர்ந்த பல மாணவர்களுடன் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அவர்கள் யாவரும் பொதுவுடைமைத் தத்துவத்தால் ஈர்க்கப்பட்டனர். இதன் மத்தியில் லீ கு வான் யூ வின் காதலி ஹி ஒக் வூ, கேம்பிரிட்ஜ் பல்லைக்கழக அனுமதிப் பரீட்சையில் சித்தியடைந்து, லண்டனுக்குச் சென்று லீ குவான் யூ வுடன் இணைந்து கொண்டார். லண்டனில் வைத்துத் தமது காதலியை லி குவான் யூ இரகசியத் திருமணம் செய்து கொண்டார். லண்டனில் வசித்த கால கட்டத்தில் தமது வயதையொத்த சிங்கப்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட நண்பர்களுடன் தமது தாய் நாட்டை ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பது குறித்து அடிக்கடி கலந்துரையாடி வந்தார். சிங்கப்பூருக்குச் சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன், தமது கல்விச் செயற்பாட்டை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய லிகுவான் யூ, தமது உறவினர்கள் முன்னிலையில் சம்பிரதாய முறைப்படி இரண்டாவது முறையாக தமது சட்டப்பூர்வ மனைவியான கீ ஒக் வூ வைத் திருமணம் செய்து கொண்டார். அத்தோடு அவ்விருவரும் வழக்கறிஞர் தொழிலிலும் ஈடுபட்டனர்.

அந்த வேளையில் சிங்கப்பூரின் தொழிற் சங்கங்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் முரண்பட்டு வந்ததுடன் கம்யூனிஸ்ட் கட்சி அவற்றில் முன்னிலை வகித்து வந்தது. குறிப்பாக மலே கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுதப் பிரிவினர் மலேசிய காடுகளில் பாசறைகளை நிறுவி பிரித்தானியாவுக்கு எதிராக கெரில்லா போரை ஆரம்பித்திருந்தனர். இதனால் சிங்கப்பூரின் அரசியலில் கம்யூனிஸ்ட் கட்சி அழுத்தங்களை மேற்கொள்ள நேர்ந்தது. தொழிலாளர் எழுச்சியை அடக்கும் நடவடிக்கைகளும், பொது மக்களைக் கைது செய்து சிறையில் அடைக்கப்படும் போக்கும் ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கெதிரான வழக்குகளில் கட்டணம் எதுவும் பெறாது லீ குவான் யூ முன்னிலையாகி வாதிட்டார். கடைசியில் ஆட்சியாளர்களுக்கு ஆதரவான தரப்பினரைத் தவிர்த்து நாட்டின் விடுதலைக்காக உழைக்க முன்னின்ற பிரமுகர்களை உள்ளடக்கி அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்க லீ கு வான் யூ முன் வந்தார்.

1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மக்கள் செயற்பாட்டுக் கட்சி லீ கு வான் யூவின் தலைமையில் உருவாகியது. 1955 ஆம் ஆண்டின் தேர்தலில் லீ குவான் யூ அரசமைப்புச் சபைக்குத் தெரிவானார். அதுமுதல் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு சிங்கப்பூருக்குச் சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளை அவர் மேற்கொண்டார். பிரித்தானிய ஏகாதிபத்தியமோ சிங்கப்பூருக்குப் பூரண சுதந்திரம் வழங்காது, சிங்கப்பூருடன் மலேசியாவையும் இணைக்கும் திட்டத்தை முன்னிறுத்திச் செயற்பட்டது. அவர்களது திட்டத்தை மிக அவதானத்துடன் கையாண்ட லீ குவான் யூ சிங்கப்பூரின்சுதந்திரத்துக்காக, சில சந்தர்ப்பங்களில் மலே கம்யூனிஸ்ட் போராளிகள் தரப்புக்களுடன் கூட இரகசியமாக சந்திப்புக்களை மேற்கொண்டு சிங்கப்பூரின் அரசியல் கட்டமைப்புக்குள் அவர்களையும் இணைத்துச் செயற்பட முற்சிகளை மேற்கொண்டார்.

சிங்கப்பூரின் சுதந்திரத்துக்காக லீ குவான் யூ பல தடவைகள் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ள லண்டனுக்குச் செல்ல நேர்ந்தது. அத்தகைய சகல சந்தர்ப்பங்களிலும் தமது தீட்சமான மதி நுட்பம் மற்றும் தியாக மனப்பான்மை என்பவற்றால் அவர் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு அவர்களது மனங்களை வென்றெடுக்க அவரால் முடிந்தது.

1959 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் சிங்கப்பூரின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புக்களைப் பெரிய அளவில் ஏற்படுத்தியிருந்தது. லீ குவான் யூவின் தேர்தல் பரப்புரைக்கு எதிராக சிங்கப்பூரின் பெரும்பாலான ஊடகங்கள் வரிந்து கட்டிச் செயற்பட்டன. ஆனால் லீ குவான் யூ வின் எதிர்பார்ப்பு, சிங்கப்பூரின் சகல இன மக்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் தேசிய அரசொன்றை நிறுவுவதாகவே அமைந்திருந்தது. அதற்காக அவர் மலாயர், சீனர் மற்றும் இந்தியர்கள் ஆகிய இனத்தவர்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் விதத்தில் தமது கட்சி சார்பான வேட்பாளர்களைத் தெரிவு செய்ய ஆர்வம் காட்டினார்.

தேர்தல் பரப்புரையின் போது பெருமளவில் மத்தியதர வர்க்கத்தினரே கணக்கில் எடுக்காத மிக வறிய மக்களது வீடுகளுக்கு நேரில் சென்று தமது அரசியல் அபிலாஷைகளை அவர்களுக்கு எடுத்து விளக்க அவர் தவறவில்லை. அதன் பிரதி பயனாக 51 ஆசனங்களுக்காக இடம்பெற்ற அந்தத் தேர்தலில் அவரது தலைமையிலான மக்கள் செயற்பாட்டுக் கட்சி 43 ஆசனங்களைக் கைப்பற்றிப் பெரு வெற்றியீட்டியது. முன்னைய ஆட்சியாளர்கள் தரப்பு படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

அரசியல் ரீதியில் அவர் மேற்கொண்ட தீர்மானங்கள் தற்கொலைக்கு ஒப்பானவையாகும். நாட்டின் பிரதமர் பதவியை ஏற்ற கையுடனேயே அவர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கை அமைச்சர்களுக்கான சம்பளத்தைக் குறைத்தமையாகும். நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொண்டதுடன், அரசியல் ரீதியில் மலேசியாவுடன் இணைந்து செயற்பட அவர் தீர்மானித்தார். பிரித்தானிய அரசு அதனை அனுமதித்த போதிலும் மலேசிய அரசுத் தலைவர்கள் லீகுவான் யூ மீது நம்பிக்கையீனம் கொண்டு அவரைச் சந்தேகத்துடன் நோக்கத் தலைப்பட்டனர். மலே மொழியை 1967 ஆம் ஆண்டு முதல் அரச கரும மொழியாக்கும் திட்டத்தை லீ குவான் யூ ஏற்க மறுத்தார். இதனால் மலேசியாவிலிருந்து சிங்கப்பூரைத் தனியாகப் பிரிக்கும் முயற்சியில் மலேசிய ஆட்சியாளர்கள் இறங்கினர். இதனால் விரக்தியுற்ற லீகுவான் யூ 1965 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதியுடன் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்தும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்தும் பிரிந்து சுதந்திர நாடாக ஆவதாக அறிவித்தார். அதனைப் பிரித்தானிய அரசும் ஏற்றுக் கொண்டது.

லீகுவான் யூ சட்டத்தின் முன்னால் சகலரும் சமமே என்ற கொள்கையுடன் செயற்பட்டார். தமது உறவினர்கள் தவறிழைத்த வேளையில் கூட அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படச் செய்தார்.

உலக அரசியல் குறித்து லீகுவான் யூ தெளிவான கொள்கை நிலைப்பாட்டைக் கடைக்கொண்டார். உலக நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு வந்தார். 1959 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை 31 ஆண்டுகள் காலம் தொடர்ச்சியாகச் சிங்கப்பூரின் பிரதமராகத் திகழ்ந்த அவரது நிர்வாகத்தில் சிங்கப்பூர் சகல துறைகளிலும் குறிப்பாக பொருளாதார நிலையில் தன்னிறைவு கொண்டதொரு நாடாக எழுச்சி கண்டது. உலக அரங்கில் வியந்து போற்றப்படும் ஒரு நாடாக சிங்கப்பூரை உருவாக்கிக் காட்டியவரென லீகுவான் யூ போற்றப்பட்டார். அரசியலில் மட்டுமல்லாது அனைத்துத்துறைகளிலும் ஊழல் மோசடிகளற்ற சிறப்பான செயற்பாடுகளை மேற்கொள்ள சிங்கப்பூர் மக்களைப் பழக்கி வைத்தமை மட்டுமன்றி தாமும் அதற்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டினார்.



தமது இறுதிக் காலம் வரை அத்தகைய அரசியல் நாகரிக நடைமுறையைக் கடைப்பிடித்தொழுகிய அவர் தாம் உயிரிழப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டதொரு கருத்து இன்று உலகஅளவில்பாராட்டைப்பெற்றுள்ளது. நான் செய்ய நினைப்பது சரியானதென முடிவு செய்தால் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் எனது மனதையும் ஆத்மாவையும் எனது இலக்கின் மீது செலுத்தி, நான் தீர்மானித்ததைச் செயற்படுத்திடே ஆவேன் என்ற அவரது அந்தக் கருத்து வெளிப்பாடு ஒரு வெற்றித் தலைவரது இலட்சணமாகக் கொள்ளத் தக்கது. லீகுவான் யூ வின் அரசியல் வாழ்க்கையிலிருந்து நாம், குறிப்பாக நமது நாட்டு அரசியல் வாதிகள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன.

■ தி.ராஜ்.



# வடக்கு மாகாண சபைக்கு தண்ணியில கண்டம்

வடக்கு மாகாண அரசு 2013 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் பதவியேற்றது. இதன் பின்னர், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டம் தொடர்பிலான பிரச்சினை தீவிரமாக எழுந்தது. இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று ஒரு பகுதியினரும், இரணைமடுவிலிருந்துதான் யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொண்டு வர வேண்டும் என்று இன்னொரு பகுதியினரும் முஷ்டியை முறுகிக் கொண்டனர்.

வடக்கு மாகாண அரசுக்கும், கிளிநொச்சி – யாழ்ப்பாண மக்களுக்கும் இடையில் இந்த விடயத்தில் கருத்து மோதல் நீண்டது. இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்பதில் ஈ.பி.டி.பி. கட்சி மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பவற்றுடன் யாழ்ப்பாணத்தின் புத்திஜீவிகள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் சிலரும் பிடிவாதமாக இருந்தனர். ஆனால் வடக்கு அரசு, இதில் கிளிநொச்சி விவசாயிகளின் சார்பாகவே முடிவெடுத்தது. எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டத்தை செயற்படுத்த மாற்று வழி மூலங்கள் கண்டறியப்பட்டன. இதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவும், மாற்றுத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருந்தது.

ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட கடனை மேலும் அதிகரித்து அதன் மூலம் இரணைமடுக் குளத்தைப் புனரமைத்தல், மருதங்கேணியிலிருந்து கடல்நீரை நன்னீராக்கி குடாநாடு மற்றும் கிளிநொச்சிக்கு குடிதண்ணீர் விநியோகித்தல், யாழ். நகர கழிவகற்றல் திட்டம் என்று மூன்று திட்டங்களைச் செயற்படுத்த வடக்கு அரசு முடிவெடுத்தது. நிதி வழங்குனரான ஆசிய அபிவிருத்தி வங்கி, கொழும்பு அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் என்பன இணங்கின. பிரச்சினை முடிவுக்கு வந்தது.

இதன் பின்னர் சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை பேசு பொருளாக எழும்பத் தொடங்கியது. ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த பின்னர் – ஆட்சி மாற்றத்தின் பின்னர் – சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை பலமடங்கு வேகம் எடுத்தது. கிணறுகளில் கலந்துள்ள கழிவு எண்ணெய் பல இடங்களுக்கும் வேகமாகப் பரவுவதாக தோற்றப்பாடும் ஏற்பட்டது.

2008ஆம் ஆண்டிலேயே இது தொடர்பிலான பிரச்சினை இனங் காணப்பட்டிருந்தாலும், 2015ஆம் ஆண்டு ஜனவரி மாத்திலிருந்தே அது விருட்சமாகியது. வடக்கு மாகாண அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள், இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டது. சுமார் 6 வருடங்களாக இந்த விவகாரத்தில் கும்பகரணத் தூக்கத்திலிருந்த சுகாதார வைத்திய அதிகாரிகளும் விடயத்தில் மூக்கை நுழைத்தார்கள்.

மக்களைப் பீதிக்குள்ளாக்கும் வகையிலான துண்டுப் பிரசுரங்கள் அநாமதேயமாகப் பரவ விடப்பட்டன. அத்துடன் மக்கள் மத்தியிலும், இது தொடர்பில் பல்வேறு வதந்திகளும் பரப்பப்பட்டன. இதனால் வலிகாமம் பிரதேசத்திலுள்ள மக்கள், தமது குடிதண்ணீரை அருந்துவதற்கு அஞ்சும் நிலை ஏற்பட்டது. ஒரு பயங்கரமான நிலை தோற்றுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வடக்கு மாகாண அரசினால் தூய குடிநீருக்கான செயலணி அமைக்கப்பட்டது.

அந்தச் செயலணியினால், நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழு இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த மாதம் இரண்டாம் வாரத்தில் குறித்த நிபுணர் குழு இடைக்கால அறிக்கையினை வெளியிட்டிருந்தது. அதில், சுன்னாகம் பிரதேசத்து நீரில் ஆபத்து விளைவிக்கக் கூடிய எண்ணெய் மாசுகள் எதுவும் கலக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தது.

அது முதற்கட்ட ஆய்வறிக்கை என்று தெரிவிக்கப்பட்டது. அதனைக் கேட்டு சந்தோசப்பட்டிருக்க வேண்டியவர்கள் அப்படிச் செய்யவில்லை. பதிலாக தமது கிணற்றுத் தண்ணீர் நல்லதுதானா என்பதில் அவர்கள் தொடர்ந்தும் சந்தேகம் கொண்டார்கள். அந்தத் தண்ணீரை மக்கள் பாவிக்கலாமா? இல்லையா? என்று கேள்வி எழுப்பத் தொடங்கினார்கள். அந்த விடயத்தை நிபுணர் குழுவும் வடக்கு மாகாண சபையும் தெளிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால், நிபுணர் குழுதான் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த முடியும் என்று கூறி மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மெல்ல நழுவிக் கொண்டார். தண்ணீரைக் குடிக்க முடியுமா இல்லையா என்பது தொடர்பில் மாகாண சபை கடைசி வரை தெளிவான பதிலை வழங்கவில்லை.

இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சக்திகள் தமக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொண்டன.

வடக்கு அரசுக்கு எதிரர்ன தண்ணீர்ப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆரம்பத்தில் தூய்மையாக இருந்த போராட்டம் காலப் போக்கில் பல சக்திகளின் கைகளிற்குள் மாட்டுப்பட்டுக்கொண்டு சீரழிய ஆரம்பித்தது. இரணைமடுக் குளத்து தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதில் குறியாக இருக்கும் தரப்பினரும் இந்தப் பிரச்சினையைச் சாதகமாக்கி, உன்னதநோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட போரர்ட்டங்களில் நஞ்சைக் கலந்தனர். ஈற்றில் அதனைக் கனகச்சிதமாகப் பயன்படுத்தவும் செய்தனர்.

அப்படியான ஒரு போராட்டமே சில நாள்களுக்கு முன்னர் நல்லூரில் நடைபெற்றது. அரசியல்வாதிகள் எவரும் போராட் டத்தில் பங்குபற்ற முடியாது என்ற கோஷத்துடன் செவ்வாய்க்கிழமை போராட்டம் ஆரம்பமானது. இருப்பினும், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அரசியல்வாதியான சகாதேவன் என்பவர், போராட்டக்காரர்களை தலைமை தாங்கி அழைத்துச் சென்றிருந்தார். இவர் மீனவர் பிரச்சினை உள்ளிட்ட சில பிரச்சினைகளை வைத்து ஏற்கனவே தனியே உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்திப்பார்த்தவர். அவற்றுக்கு பெரும் ஆதரவும் கிடைக்கவில்லை; பயன்களும் கிடைக்கவில்லை. அத்தகைய நபர் இந்தக் குடிதண்ணீர்க் கூட்டத்திற்குள்ளும் புகுந்து குட்டையைக் குழப்பினார்.

வடக்கு மாகாண முதலமைச்சர், யாழ். மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடம் மனுக்களைக் கொடுத்த, போராட்டத் தரப்பினர் இதன் பின்னர், நல்லூர் கோயில் முன்றலில் பட்டினிப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். அன்றைய தினம் இரவு வடக்கு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் தலைமையிலான குழுவினர் போராட்டக்காரர்களுடன் நேரில் சென்று பேச்சு நடத்தினர். போராட்டக்காரர்கள் முதலமைச்சருடன் நடந்து கொண்டவிதம், அவரை மட்டுமல்ல அங்கு நின்ற சகலரையும் முகம்சுழிக்க வைத்தது. பிரச்சினையைத் தீர்க்க வந்த, வடக்கு முதலமைச்சர் ஒரு கட்டத்தில் அவமரியாதை தாங்காமல் இடத்தைவிட்டு வெளியேறினார்.

“நீங்கள் ஊடகங்களை வைத்து அரசியல் செய்கின்றீர்கள். எங்களுக்கு ஊடகங்கள் தேவையில்லை. நாங்கள் பேஸ்புக் மூலமாகவே எல்லாம் செய்வோம். பேஸ்புக்கில் இப்ப எப்படி கதறுது என்று பாருங்கோ'' என்று வடக்கு மர்காண அமைச்சர்கள் முன்பாக வீராவேசப் பேச்சுக்களையும் அவிழ்த்து விட்டனர் போராட்டக்காரர்கள் எனக் கூறப்பட்டவர்கள். அவர்கள் சொன்னதைப் போலவே, முகநூலில் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. வடக்கு அரசு மீதான விமர்சனங்கள் அவற்றில் கணிசமானவை.

போராட்டம் ஆரம்பித்த அன்று இரவு முதலமைச்சரின் வாக்குறுதிகளை ஏற்க மறுத்த போராட்டக்காரர்கள், மறுநாள் பகல் வடக்கு மாகாண ஆளுநர் வந்து வர்ய்மொழி உத்தரவாதம் கொடுத்ததும் போராட்டத்தைக் கைவிட்டு ஓடிச் சென்றுவிட்டனர்.

போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை ஏற்று அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு முதலமைச்சர் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தபோதே அவருக்கும் தெரியாமல் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

போராட்டக்காரர்கள் விட்ட மகா தவறாக அது அமைந்து விட்டது. எந்த சமூக வலைத்தளங்களைத் தமது பலம் என்று போராட்டக்காரர்கள் நம்பிக் கொண்டிருந்தார்களோ, அவற்றிலேயே எல்லோரும் போராட்டக்காரர்களுக்கு எதிராகத் திரும்பினர். மிகக் கடுமையான விமர்சனங் கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக வடக்கு முதலமைச்சரது எழுத்துமூல வாக்குறுதியை ஏற்காதவர்கள், எப்படி ஆளுநரின் வாய்மொழி மூல வாக்குறுதியை ஏற்றார்கள் என்பதில் மிகக் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. எதை நம்பிக் காரியத்தில் குதித்தார்களோ அதுவும் இப்போது அவர்களைக் கைவிட்டுவிட்டது.

ஆனாலும் பிரச்சினை இன்னமும் தீரவில்லை. அதற்கான தீர்வும் இன்னமும் முன்வைக்கப்படவில்லை. நிபுணர் குழுவின் முழுமையான அறிக்கை ஒன்று இந்த மாத இறுதிக்குள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது வரும் போது பிரச்சினைகளும் ஒரு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அது வரைக்கும் வடக்கு மாகாண சபைக்கு தண்ணியில கண்டம்தான்.



# ஹோக்லியின் ஆணவத்தால் இந்திய அணிக்குள் பனிப்போர் ஏற்படுமா?

**பிரகாஸ்**

அனுபவ வீரர்கள் புறந்தள்ளப்பட்டமை தொடர்பில் பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் பரவலாக முன்வைக்கப்பட்டாலும் இந்திய இளம்படை தொடர்ச்சியாக சாதித்து வந்திருக்கிறது. இதற்கு ஒரே காரணம் டோனிக்கும் சக வீரர்களுக்குள்ளும் இருந்த புரிந்துணர்வும் ஒற்றுமையும்தான். அயர்லாந்தின் போட்டர் பீல்ட் தொடக்கம் ஆலோசகர் இயான் சப்பேல் வரை இதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவரும் இல்லை. தற்பொழுது அந்த ஒற்றுமை உடைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் இந்திய ரசிகர்களை ஆட்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இந்த வருடம் நடந்து முடிந்த உலகக்கிண்ண தொடரின் அரையிறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் இந்தியா படுதோல்வியடைந்து நாடு திரும்பியது. இந்த ஆட்டத்தில் ஹோக்லி வெறும் ஓர் ஓட்டத்தை மட்டுமே பெற்றார். இந்த நிலையில் பல இந்திய ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் 'இந்தியாவின் தோல்விக்கு ஹோக்லியின் கவனம் சிதறியமையே காரணம். ஹோக்லியின் கவனம் சிதறியமைக்கு அவரின் காதலியான அனுஸ்கா சர்மா ஆஸ்திரேலியாவுக்குச் சென்று ஹோக்லியுடன் சுற்றித்திருந்தமையே காரணம். ஆக இந்திய அணி தோற்றதற்கு அனுஸ்கா சர்மாவே காரணம்' என்று பதிவுகள் மேல் பதிவுகளைப் பதிவு செய்து தமது ஆதங்கத்தைத் தெரிவித்தனர். இந்த பதிவுகளுக்கு ஒன்றும் பேசாதிருந்த ஹோக்லி ஐ.பி.எல். தொடரின் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் 'அணியின் தோல்விக்கு நானும் அனுஸ்காவும்தான் காரணம் என்று பழிசுமத்துகின்றனர். உண்மையைச் சொல்லவேண்டுமாயின் கடந்த ஐந்து வருடத்தில் எந்த வீரரும் என்னைப்போன்று சிறப்பாக செயற்பட்டதில்லை. என்னைப் போன்ற இன்னுமொரு திறமையான வீரர் தற்பொழுது அணியில் இல்லை.' என்று கொட்டித்தீர்த்துள்ளார். ஹோக்லியின் பேச்சில் உண்மைத்தன்மைகள் வெளிப்படையாக இருந்தாலும் இவரது ஆணவப்பேச்சு அணிக்குள் பிளவுகளை கொண்டுவந்திடுமோ என்று தற்பொழுது இந்திய ரசிகர்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். ஹோக்லியின் இந்த ஆணவப்பேச்சு யாருக்கு பிடிக்காமல் போகிறதோ இல்லையோ நிச்சயம் டோனிக்குப் பிடிக்காது. 'உங்களுக்கு நிகரான வேறு தலைவர்கள் யாராவது உலக அளவில் உள்ளனர் என்று நீங்கள் கருதுகிறீர்களா?' என்று 2012ஆம் ஆண்டுகளில் டோனியிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்டபொழுது 'நான் என்ன கடவுளா? வீரர்கள் சிறப்பாக செயற்படாவிட்டால் தலைமைத்துவம் மட்டும் இருந்து என்ன பயன்?' என்று திருப்பிக் கேள்வியெழுப்பினார். அனைவரினதும் மனங்களைக் கவர்ந்த டோனியின் இந்த் வார்த்தைகளுக்கு முற்றுமுழுதாக நேரெதிராக உள்ளது 'கடந்த ஐந்து வருடத்தில் எந்த வீரரும் என்னைப் போன்று சிறப்பாக செயற்பட்டதில்லை. என்னைப்போன்ற இன்னுமொரு திறமையான வீரர் தற்பொழுது அணியில் இல்லை' என்ற ஹோக்லியின் வார்த்தைகள். எனவே ஹோக்லியின் இந்தக் கருத்துக்கு மௌனமாக இருந் தால் ஹோக்லியின் கருத்தை ஏற்றுக்கொள்வதுடன் ஹோக்லிக்காக ஏனைய வீரர்கள் அனைவரையும் பகைப்பதுமாதிரி ஆகிவிடும். ஏனைய வீரர்களின் கௌரவத்தைக்காப்பாற்ற கூல் கப்டன் டோனி ஹோக்லியின் கொட்டத்தை அடக்க கூலான பதிலொன்றைத் நிச்சயம் தருவார். அன்றிலிருந்து ஹோக்லிக்கும் டோனிக்கும் மனக்கசப்புக்கள் ஏற்படும் இந்த மனக்கசப்பு தற்பொழுது உள்ள அணிகளுக்குள்ளேயே மிகவும் ஒற்றுமையான அணி என்று அயர்லாந்தின் போட்டர்பீல்ட் தொடக்கம் ஆலோசகர் இயான் சப்பேல் வரை உலக அளவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அணிக்குள் பனிப்போர்கள் ஏற்படக் காரணமாக அமையலாம். ஆக மொத்தத்தில் பாரத தேசத்துக்கும் பெண்களால் வரும் பிளவுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் பஞ்சமில்லைபோலும்.

---

நேர்காணல்:
**தமிழினியன்**

# வடக்குக்கு விரைவில் தங்கம் வரும்

வேகநடை போட்டிகளில் பாடசாலைக்குள் இருந்து பயணத்தை ஆரம்பித்து, பல தடைக்கற்களை படிக்கற்களாக்கி மாவட்டம், மாகாணம் என்று இரண்டிலும் தங்கத்தை தனதாக்கி தேசியத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றாலும் தங்கம் வெல்ல வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் காத்திருக்கும் கோகிலவாணி பற்றியதே இந்த நேர்காணல்.

***உங்களைப்பற்றி கூறுங்கள்?***

எனது பெயர் குமார் கோகிலவாணி. நான் வவுனியா மாங்குளத்தில் வசிக்கின்றேன். எனது அப்பாவின் பெயர் குமார். அம்மா அஞ்சனாதேவி எனக்கு மொத்தம் நான்கு சகோதரர்கள். நான் இந்த வருடம் கா.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ளேன்.

***உங்களின் குடும்பத்தவரின் ஒத்துழைப்புபற்றி?***

எனது அண்ணா ஒரு விளையாட்டு வீரன் என்பதனால் அவரைப்போல் வரவேண்டும் என்பதிலிருந்தே எனது பயணம் ஆரம்பமானது. குடும்பத்தினர் பெரும் ஒத்துழைப்பை விளையாட்டுக்காக செய்து தருகின்றனர். குறிப்பாக விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான முழுமையான வசதி வாய்ப்புகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குகின்றார்கள். விளையாட்டைப் பொறுத்தவரையில் எனது குடும்பம் எனக்கு எந்தக் கட்டுப்பாடுகளையும் விதித்ததில்லை.

***பாடசாலையில் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் பற்றி?***

நான் கூட மாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். அந்தப் பாடசாலையின் அதிபர் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் அனைவரும் நான் விளையாட்டில் ஈடுபடுவதற்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கினர். பின்னர் எனது உயர்தரக் கல்வியை வவுனியா நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் பயின்று வருகின்றேன். இங்கு எனது பாடசாலை அதிபரான சு.அமிர்தலிங்கம் நான் பாடசாலை மட்ட விளையாட்டுக்களுடன் மட்டும் நின்றுவிடாது பாடசாலைக்கு வெளியே சாதிக்கவும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்குகின்றார்.

***உங்களது பயிற்றுனர்பற்றி?***

ஆரம்ப காலங்களில் பாடசாலை மட்டத்தில் உள்ள விளையாட்டுக்களில் மட்டுமே எனது திறமையை வெளிப்படுத்தி வந்தேன். ஆனால் கடந்த மூன்று நான்கு வருடங்களாகவே பாடசாலையைத்தாண்டி பயணிக்க ஆரம்பித்தேன். இதற்கு முழுமையான காரணமாக இருந்தவர் எனது பயிற்றுனர் ஆசிரியர் க.விஜிதரன். இவர் வவுனியா மாவட்ட மெய்வன்மை பயிற்றுனராக கடமையாற்றி வருகின்றார். இவர் எனது பயிற்சிகள் பற்றியும் எனது உடல் ஆரோக்கியம் பற்றியும் அதிக அக்கறையுடன் இருப்பவர். அவரின் அதிக அக்கறையும் விடாமுயற்சியுமே நான் மாகாணம் மற்றும் தேசிய ரீதியில் பல வெற்றிகள் பெறுவதற்கு பிரதான காரணிகளாக அமைந்தன.

***இது வரையில் நீங்கள் பங்கு பற்றிய போட்டிகள் பற்றி கூறுங்கள்?***

நான் பங்கு பற்றிய போட்டிகளிலே அதிகமான போட்டிகள் வேகநடை போட்டிகள்தான். முதல்முறையாக நான் 2012ஆம் ஆண்டு 20கிலோ மீற்றர் தூரம் கொண்ட வேகநடைப் போட்டியில் வடமாகாண ரீதியில் வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டேன். 2013 ஆம் ஆண்டில் கனிஸ்ட மெய்வன்மைப் போட்டியிலும், இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய விளையாட்டு விழாவிலும் வெண்கலப் பதக்கம் வென்றேன். 2014ஆம் ஆண்டில் வட மாகாண வேகநடைப் போட்டியில் சாதனையுடன் தங்கம் வென்றேன். இந்த ஆண்டில் தேசிய ரீதியில் நடைபெற்ற 40ஆவது தேசிய விளையாட்டு விழா வேகநடைப்போட்டியில் என்னுடன் களமிறங்கிய எனது குழு இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதே ஆண்டில் திறந்த போட்டியொன்றில் (அனைவருக்குமான) இரண்டாம் இடத்தையும் வென்றேன். இந்த வருடம் வெண்கலப் பதக்கத்தையே என்னால் பெற முடிந்தது. ஏனெனில் இவ்வாண்டு க.பொ.த உயர்தர பரீடசை காரணமாக நான் அதிகமாக பயிற்சிகளில் ஈடுபடுவதில்லை. இருப்பினும் எனது பரீட்சைகள் முடிந்தவுடன் எனது பயிற்சிகளை மேலும் மேம்படுத்தி மீண்டும் முதல் நிலைக்கு வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.



***நீங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினை கள் பற்றி கூறுங்கள்?***

நான் பெரும்பாலும் வவுனியா நகர சபை மைதானத்தில் எனது விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுவதால் எனது வீட்டுக்கும் மைதானத்துக்கும் இடையிலான போக்குவரத்து சிரமமாக உள்ளது. அது மட்டுமல்லாமல் எனது பயிற்சிக்கான உபகரணமும் ஏனைய பயிற்சிக்கான சாதனங்களும் போதுமானதாக இல்லை. எனக்கு மட்டுமல்ல என்னைப்போன்ற பல வீராங்கனைகள் இன்று எதிர்கொள்ளும் பெரிய பிரச்சனை இதுதான். எம்மிடம் திறமைகள் உள்ளன ஆனால் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் தக்கவைக்கவும் தேவையான வளங்கள் இல்லை. இவையே நானும் என்னைப் போன்று விளையாட்டில் சாதிக்கத் துடிப்பவர்களும் எதிர்கொள்ளும் பிர தான பிரச்சினை.

***உங்களது எதிர் கால இலட்சியம்?***

நான் தேசிய விளையாட்டு விழாவில் தங்கப்பதக்கத்தை வெல்ல வேண்டும் என்பதுடன் தேசிய விளையாட்டு விழாக்களில் வேகநடை போட்டியில் புதிய சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்ற தீவிர ஆர்வத்தை கொண்டுள்ளேன். இதைவிட எதிர்காலத்தில் ஓர் விளையாட்டுத்துறை ஆசிரியையாக வர வேண்டும் என்றும் விளையாட்டுத் துறைக்கு சேவையாற்ற வேண்டும் என்பதுமே எனது இலட்சியங்கள்.

**எதிர்காலாத்தில் விளையாட்டுத் துறையில் ஈடுபடவுள்ள வீராங்கனைகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்?**

பயிற்சியும் விடாமுயற்சியும் எப்போதும் மிக முக்கியமானது. ஒரு இலக்கினை நாம் உண்மையாக நிர்ணயிக்கும் பொழுது நிச்சயம் பல் வேறுபட்ட தடங்கல்கள் எமக்கு வந் தேயாகும். அவற்றை பொருட்படுத்தாமல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். என்பதை என்னைப் போன்ற சக மாணவ மாணவியருக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

# பிரிட்டனில் தேர்தல் களம் கென்சர்வேற்றிவ் தொழில்கட்சி பலப் பரீட்சை



## யேமன் போரினால் மக்கள் எதிர்கொள்ளும் பட்டினித் துன்பம்

■ ரெங்கன்

பிரிட்டனில் மே மாதம் 7ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான பரப்புரைகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. ஆட்சியைப் பிடிப்பதில் தீவிர முயற்சியில் இறங்கியுள்ள டேவிட் கமரோனின் கென்சர்வேற்றிவ் கட்சியும் எட் மிலிபான்ட்டின் தொழில் கட்சியும் வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்கு வழக்கம்போல் பரஸ்பரம்விமர்சனங்களைவெளியிட்டுவருகின்றன. இரு தரப்பினரும் வரிவிதிப்புக்களையே பிரதான தேர்தல் பரப்புரைக் கருப் பொருளாகப் பயன்படுத்தி வருகின்றன. 150,000 பவுண்டுக்கு அதிகமாக சம்பாதிக்கிறவர்களுக்கு அதிக பட்ச வரியாக 45 இல் இருந்து 50 வீதம் அறவிட உத்தேசித்திருப்பதாக தொழில்கட்சி அறிவித்துள்ளது. கொன்சர்வேற்றிவ் நிதித்துறைத் தலைவரான ஜோர்ஜ் ஒஸ்போன்ஸ் வரி விகிதத்தைக் குறைக்கும் உத்தேசம் இல்லை என்ற வகையிலேயே கருத்து வெளியிட்டுள்ளார்.

கடக்க திங்கட்கிழமை தேர்தல் பரப்புரை யொன்றில் பிரதமர் டேவிட் கமரோன் பேசும் போது தொழில் கட்சி பதவிக்கு வந்தால், வரிவிதிப்பை அதிகரிக்கும் வாய்ப்பிருக்கிறது என்று எச்சரித்தார்.

2010 ஆண்டு தாம் பதவி ஏற்றதிலிருந்து வரிகளைக் குறைப்பதில் அதிக அழுத்தம் கொடுத்து வந்துள்ளதாகவும் இந்தக் கொள்கைத் திட்டத்தை தமது கூட்டணிக் கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி முதலில் முன் வைநததாகவும் கமரோன் கூறினார். தொழில்கட்சித் தலைவர் எட் மிலிபான்ட் தமக்குப் பிறகு பிரதமராக வந்தால் தொழிலாளர்கள் பழி வாங்கப்படுவார்கள் என்றார். வரிகுறைப்பு என்பது எமது வரி அதிகரிப்புக் கொள்கை, மிலிபான்டின் தொழில் கட்சியின் கொள்கை என்றார். தொழில்துறை எம்மால் மேன்மை அடையும். தொழில் துறை தண்டிக்கப்படும். அவர்களால் இதில் ஒன்றைத்தான் மக்கள் தெரிவு செய்தாக வேண்டும் –என்றார்.

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கிடையிலான பொது மேடை போட்டிக் கருத்து மோதல் ஒன்றையடுத்து இடம்பெற்றுள்ள ஒரு கருத்துக் கணிப்பில் இரண்டு கட்சிகளும் ஒரே அளவு ஆதரவைப் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

புதிய நிதி ஆண்டில் புதிய வரிவிதிப்பு கொள்கை அமுலுக்கு வருகின்றது. அதனால் 94வீதம் உழைக்கும் குடும்பங்கள் பயன்பெறும் என்று கமரோன் கூறினார். அதேசமயம் தொழில் கட்சியின் நிதித்துறை பே·சாளர்எட்போல் கூறுகையில், தொழில் ...யபவர்கள் மோசமாகப் பாதிக்கப்படு ...ர்கள், அதே சமயம் இலட்சாதிபதிகள் ...மரோன் நிர்வாகத்தில் வரி குறைப்பு பெறுகிறார்கள் என்றார். வடக்கு இங்கிலாந்தின் யோர்க்ஷயரில் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய போல்ஸ் அதிக வருமானம் பெறும் ஒவ்வொருவருக்கும் அதிக வரிக்குறைப்பைச் செய்யும் கமரோன் அரசு குடும்பங்களின் 'வற்'வரியை அதிகரித்துள்ளது. லட்சக் கணக்கானவர்கள் அதிகமான பணம் செலுத்துகிறார்கள். இலட்சாதிபதிகளோ குறைவாக வரி செலுத்துவார்கள் என்று தெரிவித்தார்.

> “ யேமனில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பேச்சுக்களை நடத்த தாங்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று யேமன் ஹவுதி இயக்கம் அறிவித்துள்ளது.

### யேமன் போரினால் ஏற்பட்டுள்ள பட்டினிக்கொடுமை

யேமன் நாட்டில் நடைபெற்றுவரும் போராட்டம் காரணமாக பெருமளவில் பட்டினியும் குடிதண்ணீர் தட்டுப்பாடும் ஏற்படக் கூடிய அபாயம் தோன்றியிருப்பதாகவும் பெரும் எடுப்பில் மக்கள் இடப்பெயர்வு ஏற்பட்டு ஏற்கெனவே சிரியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் மேலும் ஒரு பெரிய அவலம் தோன்றக் கூடிய தாய் இருப்பதாகவும் தொண்டு பணியாளர் நிறுவனங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. அராபிய குடா பகுதியில் ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கும் இந்த நாட்டின் 25 மில்லியன் மக்கள் மிக மோசமான சத்துணவு பற்றாக்குறைபாட்டில் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஹவுதிகள் என்றழைக்கப்படும் ஷைட் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளார்கள். இதன் காரணமாக கடந்த மாதம் சவூதி அரேபியாவின் தலைமையில் கூட்டணிப் படைகளின் எதிர் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கூட்டணிப் படைகளின் விமானத் தாக்குதல்கள், விமான நிலையங்களுக்கு அருகில் ஆரம்பமாகியுள்ள மோதல் கள் மற்றும் துறைமுகங்களில் நடக்கும் சண்டைகள் அனைத்தினாலும் உணவுப் பொருள்கள் மற்றும் தேவையான பொருள்களின் விநியோகம் மோசமாகியுள்ளது.

ஐ.நா. அறிக்கை யொன்றின்படி யேமனிலுள்ள பெரு நகரங்கள் ஏடன் உட்பட தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் யேமனில் பெருமளவிலான பகுதிகளைக் கைப் பற்றி இருக்கிறார்கள். அமெரிக்க ஆதரவு பெற்ற அதிபர் அபெத் ரப்போ மன்சூர் ஹாதியின் அரசை கிளர்ச்சியாளர்கள் வீழ்த்தியுள்ளார்கள்.

கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது சவூதி படைகளின் தலைமையிலான கூட்டுப்படைகள் கடும் விமானத் தாக்குதல்களை நடத்தி முடித்திருக்கிறார்கள். தரை மார்க்கமாகவும் தாக்குதல்களை நடத்தவும் அதிபரை மீண்டும் பதவியில் அமர்த்தவும் அவர்கள் உறுதி பூண்டிருக்கிறார்கள். யேமன் அதிபர் ஹாதி கடந்த மாதம் சவூதிக்குத் தப்பி ஓடித் தஞ்சமடைந்துள்ளார். கிளர்ச்சியாளர்கள் ஹவுதிகள் என்று அழைக்கப்படும் அதே நேரம் அவர்கள் சையித்ஈரானிய அரசின் கையாள்கள் என்று சவூதி கூட்டுப்படை யினர் கருதுகின்றனர்.



## உலக நடப்பு

கடந்த இருவாரங்களில் இந்தச் சண்டையில் 500 மக்கள் கொல்லப்பட்டுவிட்டதாக ஐ.நா. அறிக்கையொன்று கூறுகின்றது. அதேசமயம் மக்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் எரிபொருள் கிடைப்பது பெரும் இக்கட்டாகவிருக்கிறது என்று அவ்வறிக்கை கூறுகிறது. பேச்சு நடத்த யேமன்

### கிளர்ச்சியாளர் சம்மதம்

யேமனில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பேச்சுக்களை நடத்த தாங்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று யேமன் ஹவுதி இயக்கம் அறிவித்துள்ளது. அதற்கு சவூதி கூட்டுப் படையினர் வான்தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர். அதே சமயம் பதவி இழந்த அதிபர் மீண்டும் ஆட்சியில் அமர்வதையும் அவர்கள் ஏற்க மாட்டார்கள். யேமனில் இராணுவத் தலையீட்டில் சம்மந்தம் இல்லாத ஒரு தரப்பினால் பேச்சுக்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று சையித் முஸ்லிம் குழுவைச் சேர்ந்த அரசியல் பிரமுகரான அலி அல் காஹவூம் என்பவர் தெரிவித்துள்ளார்.

### சிரியாவின் இடம்பெயர்ந்தோர் படும் துன்பம்


சிரியாவில் மோதல்கள் ஏற்பட்டு 5ஆவது ஆண்டை எட்டியுள்ளது. அங்கு உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள ஒருகோடி 20 லட்சம் மக்களுக்கு உதவுவதற்கு 3பில்லியன் டொலர் தேவைப்படுவதாகவும் அண்டை நாடுகளில் தஞ்சம்புகுந்துள்ளவர்களுக்கு உதவ 5.5 பில்லியன் டொலர் தேவைப்படுவதாகவும் ஐ.நா அகதிகளுக்கான ஆணையம் அறிவித்துள்ளது.

சிரியாவில் 2011 மார்ச் மாதம் அதிபர் பாஷக் ஆசாத்துக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஆரம்பமாகின. பின்னர் இது பெரும் போராக வெடித்ததும் இஸ்லாமிய அரசு இயக்கம் அதில் ஆதிக்கம் செலுத்தி ஆசாத்துக்கு எதிரான போரில் பெரும் எடுப்பில் இறங்கி விட்டது. இந்தப் போரில் இதுவரை 220,000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 10 லட்சம் பேர் காயமடைந்துள்ளார்கள். இந்தத் தகவல்களை ஐ.நா. சிறப்புத் தூதுவர் ஸ்டாமானடி மிஸ்ரோ வெளியிட்டிருந்தார்.

# ஜெயகாந்தன்

## அசைக்க முடியாத ஆளுமை

■ கா.சு.வேலாயுதன்



ஜெயகாந்தன்... மேடைக்கேற்ற சிம்மக் குரலும், எழுத்துக்கேற்ற யதார்த்தவாதமும், உண்மையை உரக்கச் சொல்லும் – அதில் யாரும் அசுவாரசியப்பட்டால் இடித் துச் சொல்லும் சொல்லுக்கும் செயலுக்கும் சொந்தக்காரர். அவரின் அருகாமையில் இல் லாவிட்டாலும், அவர் எழுத் தில் இரண்டறக் கலந்து எழுந்து நின்ற எழுத்தாளர்கள் எண்ணிலடங் கார்.

அப்படியானதொரு நிலையில்தான் பத்திரிகை நிருபன் என்ற முறையில் சில சமயங்களில் ஜெயகாந்தனைப் பற்றிய அண்மைவெளிகள் சில எனக்கு வாய்த்தன. சொல்லொன்று செயலொன்று, எழுத்தொன்று என வாழ்ந்த – வாழும் போலித்தனமான புகழ்பாடிக்கூட்ட எழுத்தாளர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் அவர் தம் எழுத்தில் மட்டுமே தரிசனம் பெற்று, அருகில் நெருங்கும் வாய்ப்பு கிடைத்தபோதும் கூட அவரின் கிட்டத்தில் நின்று ஒட்டி உறவாட அச்சப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

மகாகர்வி... பேச்சிலும், எழுத்திலும், கேள்வியிலும் எதிராளிகளை வளைப்பவர், பத்திரிகை பேட்டி என்று சராசரி மனிதர்கள், எழுத்தாளர்கள், பேச்சாள அரசியல்வாதிகளைப் போல இவரை நெருங்கினால் அவன் செத்தான் என்று நண்பர்கள் பேசக் கேட்டிருக்கிறேன். ஆனால் அவரின் தரிசனம் சில இடங்களில் வாய்த்தபோது அந்த சிம்மக்குரலில் தொனித்த யதார்த்தமும், உண்மையும், நேர்மையும், உள்ளத்து உருவை வெளிப்படை காட்டும் பாங்கும், வாழ்ந்தால் இந்த மாமேதையை போலல்லவோ எழுத்தாளர்கள் வாழவேண்டும் என்ற உத்வேகம் பெற்றேன். போலித்தனம் கண்டு முணுக்கென்று கோபப்படும் பாங்கு ஏறத்தாழ அவர் அளித்த பிச்சை என்றே சொல்லுவேன்.

கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்கு முன்பு. ஓர் இலக்கிய விழாவில் கலந்து கொள்ளும் நிமித்தம் திருப்பூரில் ஒரு நட்சத்திர விடுதியில் அவர் தங்கியிருந்தார். அவருக்கு நெருக்கமான நண்பர்கள் மட்டும் அறையில். வழக்கமான பாணியில் ஒரு குழாயில் தூள்களை அடைத்து நெருப்பேற்றி ஆளாளுக்கு மாற்றி, மாற்றி புகைத்துக் கொண்டிருந்தார்கள். ஐந்தாறு நண்பர்கள் மாற்றி மாற்றி புகைச் சுற்று வரும் அந்த புகைத் தொடர் ஓட்டத்தில் ஜெயகாந்தனும் கலந்து கொண்டிருந்தார்.

கல்கி பத்திரிகை நிருபன், இளம் எழுத்தாளன் என்ற முறையில் எழுத்தாளர் நண்பர் சுப்ரபாரதிமணியன் மூலம் எனக்கும் அங்கே அனுமதி கிடைத்தது. எங்கே போனாலும் பேட்டி என்று கையேட்டை தூக்கி விடும் எனக்கு ஜெயகாந்தனின் அருகாமை கிடைத்த போது எதுவும் தோன்ற வில்லை. அவர்களுக்குள் நடந்த இலக்கிய உரையாடல்களையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு பிரபல எழுத்தாளரின் பெயரை (பாலகுமாரன்) சொன்ன ஒரு நண்பர் உங்கள் எழுத்தைப் படித்துத்தான் அவர் எழுதிப்பழகியதாக சொல்லியிருக்கிறாரே ஜே.கே? என்றார். ஜே.கே முகத்தில் பிரதிபலிப்பு தெரியவில்லை. உறுத்த பார்வை. அதைவிட உறுதியான குரல்.

"அவன் பொய் சொல்றான்!" என்றார் கர்ஜனையுடன். எப்படி? கண்கள் சிவக்க அவரே விளக்கம் சொன்னார்: "இப்படித்தான் ஒருத்தன் நான் கஞ்சா அடிக்கறதை பார்த்து கஞ்சா அடிச்சுப் பழகினதா சொன்னான். அதை எப்படி ஏத்துக்க முடியும்? என்னிடம் அவரவர்க்கு எது பிடிக்கிறதோ அதை எடுத்துக்கொண்டு, அதை நான் பழக்கி விட்டேன் என்பது போல சொல்கிறார்கள். அதற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்?" அவர் பேச்சில் ஒரு துளி செயற்கைத்தனம் இல்லை.

"ஊரைக்கூட்டி ஒலிக்க அழுதிட்டு பேரை நீக்கி பிணமென்று பேரிட்ட பின், சூரையங்காட்டிடையே சுட்டிட்டு, நீரில் மூழ்கி நினைப்பொழிந்து, அனைவரும் நீங்கிக்கழிந்த பின் அவன் விழித்தான்..!" உறங்குவது போலும் சிறுகதையில், இப்படியொரு தொடக்கம் வைத்திருந்தீர்களே. அது எப்படி சாத்தியமானது? என்று ஒரு கேள்வி.

"நான் எங்கே எழுதினேன்? அது முழுக்க, முழுக்க திருமூலருடைய வார்த்தைகள்!" உண்மையை, அதையும் உறுதிபட ஒப்புக் கொள்வது... அதுதான் ஜெயகாந்தன்.

இரவு இலக்கிய கூட்டம். அதில், சுப்ரபாரதிமணியனின் சாயத்திரை நாவல்குறித்த அறிமுகம். சாயக்கழிவுகளால் நொய்யல் நதி நஞ்சானது. அதற்கு காரணமான தொழிற்சாலைகளை, தொழில் முதலாளிகளைப் பற்றி கடுமையாகச் சாடினர் கூட்டத்தில் பேசியவர்கள்.

ஜெயகாந்தன் பேசுகையில் பேச்சின் நிலை தலைகீழானது. "சாயம் விசம். உண்மைதான். ஆனால் சாயம் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. வளர்ச்சியின் வளர்ச்சி. அந்த வளர்ச்சியின் வளர்ச்சி இல்லாவிட்டால் நாம் இங்கே ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்க முடியுமா? நமக்கு இப்படியொரு பொருளாதார வளர்ச்சி வந்திருக்க முடியுமா? எனவே கண்டுபிடிப்புகளை, வளர்ச்சிகளை சாடாதீர்கள். வளர்ச்சியின் வளர்ச்சியினால் வரும் எதிர்வினைகளுக்கு மாற்று வினைகளை எதிர்ப்பதற்கு பதில் அந்த நேரத்தை மாற்று விஞ்ஞானத்தை கண்டுபிடிக்க உதவுங்கள். அதைவிட்டு விட்டு விஞ்ஞானத்தையே கூடாது என்பதும், மறுப்பதும் எப்படி சரியாகும்?" ஆணித்தரமான பேச்சு. தீர்க்க தரிசனப்பார்வை.


> “
> எழுத்தில் மட்டுமே தரிசனம் பெற்று, அருகில் நெருங்கும் வாய்ப்பு கிடைத்த போதும் கூட அவரின் கிட்டத்தில் நின்று ஒட்டி உறவாட அச்சப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

அதேமேடையில், சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும் எழுத்தாளர்கள் பற்றி சிலர் பேசியதை இப்படிக் குறிப்பிட்டார். "சிறுமைதான் தன்னைத்தானே அணிந்து வியந்து கொள்ளும்!" மேடையில் பலர் முகத்தில் ஈயாடவில்லை. அதுதான் ஜெயகாந்தன். எழுத்தும், பேச்சும், செயலும் ஒரேமாதிரி.

அவரது அரசியல் நிலைப்பாடுகளில் பலர் கடுமையான விமர்சனங்கள் வைப்பதுண்டு. ஆனால், அவர் கடைசி வரை தான் வாழ்ந்த கம்யூனிஸத் தத்துவத்தின் மீது உயிர்ப்பாக இருந்தார் என்பது அவரின் நெருக்கமான நண்பர்கள் அறிந்ததே. நண்பர்கள் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் ஒருமுறை, "கம்யூனிஸ்ட் கட்சி உங்களை ஒதுக்கிவிட்டது. உங்கள் அருமை புரியாமல் விலக்கி வைத்து விட்டது...!" என்ற ரீதியில் ஒரு நண்பர் கடுமையாகப் பேசினார். உடனே சூடாகிப் போனார் ஜெயகாந்தன்.

"கம்யூனிஸ்ட் கட்சி எங்கே என்னை விலக்கியது; ஒதுக்கியது? ஒரு தாய் பொற்கிண்ணத்தில் நெய் சாதத்தை பிசைந்து குழந்தைக்கு ஊட்ட வருகிறாள். அதை சாப்பிட்டு, சாப்பிட்டு அலுத்துப் போன குழந்தை வேண்டாம் போ! என்று போக்குக்காட்டி ஓடுகிறது. ஓடியது. தாயின் ஸ்தானத்தில் நின்றுதான் கம்யூனிஸ்ட் கட்சி எனக்கு அமிர்தூட்டியது. ஆங்கிலம், பிரஞ்சு, லத்தீன் என உலகத்தில் எத்தனை மொழிகள் உள்ளதோ அதையெல்லாம் கற்றுக் கொள்ளும்படி ஆசிரியர்களை அமர்த்தியது. உலக நாடுகளுக்கெல்லாம் போய்வரும்படி அனுமதித்தது. நான்தான் மாட்டேன் போ என்று குழந்தையின் ஸ்தானத்தில் துள்ளி ஓடினேன். அப்படியிருக்கையில் எப்படி நான் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலக்கப்பட்டவனாகவோ, தாய்க்கு பிள்ளையல்லாதவனாகவோ ஆவேன்?" என்று திருப்பிக் கேட்டார்.

10 ஆண்டுகளுக்கு முன்பு கோவை விடுதி ஒன்றில் பாரதீய ஞானபீடம் பெற்ற ஜெயகாந்தனுக்கு பாராட்டு விழா நடந்தது. அந்த விழாவிற்கு முன்புதான் ஒரு விழாவில் சமஸ்கிருதம் தான் அறிந்த மொழிகளிலே சிறந்த மொழி என்று பொருள்பட பேசி சர்ச்சையை கிளப்பியிருந்தார் ஜெயகாந்தன். அதை முன்னிட்டு பகுத்தறிவு பாசறை தோழர்கள் அவருக்கு கடும் எதிர்ப்புக் காட்டி வந்தனர்.



கோவை விழாவில் ஜெயகாந்தன் தமிழில் பேச்சை ஆரம்பித்தபோது, "ஜெயகாந்தா.. தமிழில் பேசாதே, சமஸ்கிருதத்தில் பேசு...!" என்று ஒருமையில் ஜெயகாந்தனை நோக்கி, பெரியார் இயக்கத் தோழர்கள் கத்த ஆரம்பித்தனர். தொடர்ந்து நோட்டீஸ் விநியோகித்தும், ஜெயகாந்தனை நோக்கி பாய்ந்து சென்று மைக்கை பிடுங்கி ரகளையில் ஈடுபடும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

அப்போதும் அந்த சிம்மக்குரலோன் கர்ஜனை ததும்ப தீர்க்கமான பார்வையுடன் மைக்கின் முன் அசராது நின்றிருந்தார். "தமிழில்தான் பேசுவேன். அதுதான் என் தாய்மொழி!" என்றார் கர்ஜனை மாறாமல். பாதுகாவலர்கள் வந்து போராளிகளை அப்புறப்படுத்தின பின்பு மேடையில் பேசிய ஜெயகாந்தன், "எனக்கு தமிழ் தான் தெரியும். தொட்டிலில் குழந்தையாக தவழ்ந்த[illegible] எனக்குத் தமிழ்தான் தெரிந்தது. [illegible]து தாய் தமிழில் தாலாட்டியதால் தமிழ் அறிந்தேன். என்னை நான் இந்தியாவைச் சேர்ந்த தமிழன் என்று கூறிக் கொள்ளவே ஆசைப்படுகிறேன். இந்தி, ஆங்கிலமும் நாம் படிக்க வேண்டும். அப்போது தான் அகண்ட பாரத்தில் தமிழின் பெருமையை நாம் உணர்த்த முடியும். அரசியலுக்காக இந்தி, சமஸ்கிருதம் படிக்காதே என்று எதிர்த்துவிட்டு பின்னர் பதவிக்காக மண்டியிடுபவன் அல்ல நான்.

இமயத்தின் உச்சியில் நின்று தமிழின் புகழைக் கொக்கரித்த பாரதி, அண்ணா போன்ற தமிழ் அறிஞர்களையே எதிர்த்தவர்கள் தமிழர்கள். அதுபோலத்தான் என்னையும் எதிர்க்கிறார்கள். தமிழனுக்கு என்று தனிக் குணம் உண்டு என்று பாடி வைத்தவர் நாமக்கல் கவிஞர். வாழ்க்கையில் எதிர்மறைகள் இ[illegible]ால் தான் வாழ்க்கை சுவராஸ்மா[illegible]தாக இருக்கிறது. சாதிகள் ஒழிய வேண்டும். சாதிகள் கூடாது என்பது லட்சிய நோக்காளர்களின் கருத்து. சாதிகளே இல்லையென்றால் வாழ்க்கை சுவாரஸ்மானதாக இருக்காது என்று சொல்ல எனக்கு சுதந்திரம் இல்லையா? மாற்றுக்கருத்துக்களும், தேடல்களும்தான் புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டிருக்கிறது. நான் கூறிய கருத்து மற்றவர்களின் மனதை புண்படுத்தியிருந்தால் மன்னிப்பு கேட்கிறேன். ஆனால் எனது கருத்தில் எந்த மாற்றமும் கிடையாது!" எ[illegible]று ஆணியடித்த மாதிரி மேலும் சர்ச்சை[illegible]ளையே கிளப்பிய ஜெயகாந்தனை அங்[illegible] தரிசிக்க நேர்ந்தது.

ஆம்... சமூக நலனுக்காக மட்டுமே சர்ச்சைகளைக் கிளப்பி, அந்தச் சர்ச்சைகளுக்குள்ளேயே தைரியமாக நின்று, பிறிதொரு சர்ச்சையையும் கிளப்பிவிட்டு சர்ச்சைகளின் நாயகனாக ஒரு எழுத்தாளன் நின்றிருந்தானென்றால் அது ஜெயகாந்தனை தவிர வேறொருவர் இருக்கவே முடியாது.